# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 263 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 31, திங்கட்கிழமை 15.08.2016


## செஞ்சோலைப் படுகொலை: கரைபுரண்ட 10ஆவது நினைவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 15

செஞ்சோலை ஆதரவற்ற சிறுவர்கள் இல்ல வளாகத்தின் மீது இலங்கை விமானப்படை விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் உயிரிழந்த பாடசாலை மாணவிகளின் 10ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் நடத்தப்பட்டது.

வவுனியாவில், தமிழ் விருட்சம் அமைப்பினால் நினைவேந்தல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதனை ஏற்பாடு செய்திருந்தது.

2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி, முல்லைத்தீவு வள்ளிபுனத்தில் அமைந்திருந்த செஞ்சோலை வளாகத்தின் மீது இலங்கை விமானப் படையின் 'மிக்' விமானங்கள் குண்டுகளை வீசின. இந்தத் தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 61 பாடசாலை மாணவிகள் துடிதுடித்து உயிரை விட்டனர். துயர்நிறைந்த இந்தச்

>> 24ஆம் பக்கம்



# சமஷ்டிதான் தமிழரசுக் கட்சியின் ஒரே நிலைப்பாடு

## மையச் செயற்குழு கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஓக. 15

"இணைந்த வடக்கு கிழக்கில் எங்களுடைய இறைமையின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட்ட, கூட்டாட்சி (சமஷ்டி) அடிப்படையிலான தீர்வுதான் தனது ஒரே நிலைப்பாடு என்று தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது. "கடந்த காலங்களிலும், இப்போதும் எமது நிலைப்பாடு இதுவாகத்தான் இருக்கின்றது. நாம் அரசியல் தீர்வில் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டுள்ளோம் என்று சிலர் விசமத்தனமான பொய்ப் பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றனர்" என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அதில் உத்தேச தீர்வுத் திட்டம் உள்ளிட்ட சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து பத்திரிகையாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

>> 24ஆம் பக்கம்

### 700 ஏக்கர் விரைவில் மக்களிடம் கையளிப்பு

# ஒரு வருடத்துள் காணி விடுவிப்பு வலி. வடக்கில்

## அட்டவணையும் தயாரித்தது இராணுவம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 15

வலிகாமம் வடக்கில் இராணுவத்தினர் இன்னமும் தம் வசம் வைத்துள்ள காணிகளில் விடுவிக்கப்படக்கூடிய அனைத்தும் அடுத்து வரும் ஒரு வருட காலப் பகுதிக்குள் மக்களிடம் கையளிக்கப்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். 2017ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்கு முன்னர் அவற்றை விடுவிப்பதற்கான கால அட்டவணை இராணுவத்தினரால் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சிவில் அதிகாரிகளிடம்

>> 25ஆம் பக்கம்



அடுத்த வரிசம் ஐ.நாவுக்கு ஏதும் [illegible]களைச் சொல்லத்தானே வேணும் பாருங்கோ...

### அரசியல் கைதிக்கு ஊசி:

## இதுவரை அறிகுறியில்லை

யாழ்ப்பாணம், ஓக. 15

அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட, தமிழ் அரசியல் கைதி இராசையா

>> 24ஆம் பக்கம்

## 16 வயது மாணவியின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 15

காரைநகரில் ஆள்நடமாட்டம் அற்ற பாழடைந்த கிணற்றில் இருந்து 16 வயது மாணவியின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது. நேற்று இரவு மீட்கப்பட்ட சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலையில் தரம் 11இல் கல்வி பயிலும் துவாரகா சண்முகராஜக் குருக்கள் (வயது-16) என்ற மாணவியின் சடலமே மீட்கப்பட்டது.

"நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு வீட்டு அறையில் மாணவி படித்துக் கொண்டிருந்தார். இரவு 7.30

>> 25ஆம் பக்கம்

## படையினர் ஒருபோதுமே பழிவாங்கப்படார்

### மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15

காணாமற்போனோர் அலுவலகத்தின் ஊடாக பாதுகாப்புப் படையினர் ஒருபோதுமே பழிவாங்கப்படமாட்டார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே, அவர்.

>> 24ஆம் பக்கம்

### உயிருக்கு உலை வைத்த வெடிமருந்து

## பொறிவெடியில் சிக்கி குடும்பத்தலைவர் சாவு

### கிளாலி காட்டுக்குள் பரிதாபம்

பளை, ஓக. 15



கிளாலியில் இருந்து இளம் குடும்பத் தலைவரின்சடலம்நேற்றுக்காலை மீட்கப்பட்டது. வெடிப் பொருள்களில் இருந்து சட்டத்துக்குப் புறம்பாக வெடிமருந்துகளைப் பிரித்தெடுக்கச் சென்ற சமயத்தில் இவர் பொறிவெடியில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

எழுதுமட்டுவாழ்-கிளாலியைச்

>> 24ஆம் பக்கம்

## தலையிடி கொடுத்த தமிழீழம்

கொழும்பு, ஓக. 15

ஆஸ்திரேலியாவில் நடத்தப்படும் தேசிய சனத்தொகைக் கணக்கெடுப்பில், தமிழீழத்தையும் உள்ளடக்கியதால் இலங்கைக்கு தலையிடி ஏற்பட்டது. பிறந்தநாடு என்ற கேள்விக்கு வழங்கப்பட்டிருந்த தமிழீழம் என்ற தெரிவு இலங்கைத் தூதரகத்தின் அழுத்தத்தால் நீக்கப்பட்டது.

ஆஸ்திரேலிய

>> 25ஆம் பக்கம்

## இரண்டாம் நாள்

### தொடர்கிறது பரவிப்பாஞ்சான் மக்களின் போராட்டம்



கிளிநொச்சி, ஓக. 15

இராணுவத்தினர் வசமுள்ள தமது காணிகளை உடனே விடுவிக்கவேண்டும் என வலியுறுத்தி பரவிப்பாஞ்சான் மக்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது. போராட்டம் நடத்தும் தமக்குப் படையினர் பல்வேறு இடையூறுகளை விளைவிக்கின்றனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பரவிப்பாஞ்சானில் உள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி, காணி உரிமையாளர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை

>> 24ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்குதமிழுக்கு ஒத்த மக்கள் பேரணி அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடக்கும்

## ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஸ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 15

"தமிழ் மக்களின் பிரதேசங்களில் சிங்கள மயமாக்கல் மற்றும் பௌத்த சின்னங்களை அமைப்பதை எதிர்த்து எதிர்வரும் செப்ரெம்பர் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மாபெரும் எழுச்சிப் பேரணி ஒன்றை முன்னெடுக்கப்படும். தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய பொங்குதமிழுக்கு பின்னர், வடக்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பைத் தெரிவிக்கும் பேரணியாக இது அமையும்."

இவ்வாறு அறிவித்தார் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

இது தொடர்பில் யாழ். பொது நூலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது:

வடக்கில் இராணுவ மயமாக்கல் மற்றும் பௌத்தமத சின்னங்கள் அமைக்கப்படுவது தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமிழ் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் நேற்று யாழ்.பொது நூலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டும், பௌத்த சின்னங்களை நிறுவியும், பௌத்த மயமாக்கலை ஏற்படுத்த அரசு முயற்சிக்கிறது. இதனை எதிர்த்து எதிர்வரும் செப்டெம்பர் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி முன்னெடுப்பதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படாது, மக்களின் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தி வருகிறார்கள். மக்களின் காணிகளை உடனடியாக அரசு விடுவிக்கப்படவேண்டும். காணாமற்போனவர்களைக் கண்டறிவதற்கான அலுவலகம் ஒன்றினை அமைப்பதாக கூறியிருந்தாலும், காணாமற்போனவர்கள் பற்றி முழுமையான பதில் எதனையும் அரசு தெரிவிக்கவில்லை.

காணாமற்போனவர்கள் பற்றி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கேட்டபோது, 2 வருடங்கள் காத்திருக்க வேண்டுமென நல்லிணக்க ஒருங்கிணைப்பின் தலைவியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க கூறியிருக்கின்றார். இப்போது பதில் கூறிவிட்டால் போர்க்குற்றம் ஆகிவிடும் என்பதற்காகவும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடியாத நிலைமை அலுவலகத்துக்கு இருப்பதனாலும், இவ்வாறு கூறப்படுகின்றது. ஐ.நாவின் தீர்மானத்துக்கு ஏற்ப பன்னாட்டு நீதிபதிகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அரசு கூறியிருக்கின்றது. எனவே, இவ்வாறான விடயங்களைக் கண்டித்தும், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியினை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த அரசும் முன்னைய அரசின் நிகழ்ச்சி நிரலைக்கொண்டுள்ளது. இந்த நிகழ்ச்சி நிரல்களை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி தமிழ் மக்கள் ஒட்டுமொத்த எதிர்ப்பை வெளிப்படுத்த தீர்மானித்துள்ளனர். அவ்வாறு நிறுத்தப்படாவிடின் தொடர்ச்சியாக, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மாபெரும் மக்கள் போராட்டமாக மேற்கொள்ளப்பின் நிற்கமாட்டோம்.

தமிழ் மக்களின் தனித்துவத்தை பாதுகாப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய பொங்குதமிழுக்குப் பின்னர், வடக்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்பினைத் தெரிவிக்கவுள்ளனர்.

தமிழ் மக்கள் இவ்வாறான போராட்டத்தை முன்னெடுப்பதற்கான சூழ்நிலைக்குத் தள்ளுவதற்கு அரசு நிர்ப்பந்தித்துள்ளது. இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் என்ற பொய்யான பரப்புரைகளை நிகழ்த்திக் கொண்டு, வடக்கு மாகாணத்தை சிங்கள மயமாக்குவதற்கான முழு நடவடிக்கைகளையும் மிக விரைவாக அரசு மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறானதொரு போராட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் கிளிநொச்சியிலும் முன்னெடுக்கப்படும் - என்றார். (வ-4,106)

## குடும்பஸ்தர் மீது கத்திக்குத்து

குடும்பஸ்தர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மட்டுவில் வடக்கில் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை சிவகுமாரன் (வயது- 54) என்பவரே காயமடைந்தார்.

காயங்களுக்கு உள்ளானவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ம-9)

## நூல்கள் அறிமுக விழா

கவிஞர் வேலணையூர் சுரேஸின் இரு நூல்களின் அறிமுக விழா இன்று திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது என வேலணைப் பிரதேச கலாசாரப் பேரவை தெரிவித்தது.

'கிளுவம் வேலியும் கிடுகுத் தட்டியும்' என்ற கவிதை நூல் மற்றும் 'பிள்ளைத் தமிழின்பம்' என்ற பிள்ளைப் பாடல் நூல் ஆகிய இரு நூல்களின் அறிமுக விழாவே நடைபெறவுள்ளது.

வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த அறிமுகவிழாவில், தலைமை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும், சிறப்பு விருந்தினராக வேலணைப் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரமும் கலந்து கொள்ளவார்கள் என தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

## யாழ். நகரில் விபத்து

யாழ். நகரில் நேற்றிரவு இடம்பெற்ற கன்ரர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்தார்.

யாழ். மின்சார நிலைய வீதியில் பயணித்த கன்ரர் ரக வாகன், ஒருவழிப் பாதை ஊடாக விதிமுறை மீறி பயணிக்க முற்பட்டு, கஸ்தூரியார் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளை மோதி இழுத்துச் சென்றது. இதன் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் வீதியில் பாய்ந்தார். இதனால் காயமடைந்த அவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (வ)

# அனந்தி, சிவகரனின் பதவிகள் பறிப்பு

## ஒழுக்காற்று நடவடிக்கை எனத் தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 15

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணித் தலைவி திருமதி அனந்தி சசிதரன் மற்றும் இளைஞர் அணிச் செயலாளர் வி.சிவகரன் ஆகியோருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணைக்கு அமைவாக, கட்சியின் சாதாரண உறுப்பினர் தரத்துக்குப் பதவியிறக்கம் செய்யப்பட்டனர்.

இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நடுவண் செயற்குழு அறிவித்தது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நடுவண் செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. இதன் போதே மேற்படி தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எடுத்த தீர்மானத்துக்கு எதிராக, திருமதி அனந்தி சசிதரன் மற்றும் வி.சிவகரன் ஆகியோர் செயற்பட்டது தொடர்பில் கட்சியின் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

ஒழுக்காற்று விசாரணையின் முடிவு நேற்று அறிவிக்கப்பட்டது. இதன் போது, இருவரையும் அவர்கள் கட்சியில் வகிக்கும் பதவிகளை நீக்கி, 5 ஆண்டுகளுக்கு சாதாரண உறுப்புரிமையில் வைத்திருப்பது என்று தெரிவிக்கப்பட்டது. இதன் போது பேராசிரியர் சிற்றம்பலம், அதனை 3 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அதனடிப்படையில் இறுதியில், 3 ஆண்டுகளுக்கு சாதாரண உறுப்புரிமையில் கண்காணிப்பில் வைத்திருப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. (வ-5)

# வீதி விபத்துக்களினால் நான்கு முறை இழப்பீடு பெற்ற மாற்றுத் திறனாளி

## அரச முதியோர் இல்லத்தில் சேர்க்குமாறு நீதிவான் உத்தரவு

நான்கு முறை வீதி விபத்துக்குள்ளாகி நான்கு முறையும் இழப்பீடு பெற்ற மாற்றுத் திறனாளியை கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்றம் உத்தரவிட்டது. அவருக்கு இழப்பீடாக வழங்க மன்றில் உத்தரவிடப்பட்ட தொகையை முதியோர் இல்லத்துக்கு வழங்குமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் கட்டளையிட்டார்.

கடந்த மாதம் 16ஆம் திகதி மிருசுவில் பகுதியில் உள்ள மகள் வீட்டிலிருந்து மாலை வேளையில் தனது முச்சக்கர சைக்கிளில் பளையில் உள்ள தனது மகன் வீட்டுக்குச் சென்றபோது, எழுதுமட்டுவாழ் பகுதியில் மோட்டார் சைக்கிளால் மோதுண்டு காயமடைந்தார். விபத்தில் இவரது முச்சக்கர சைக்கிள் சேதமடைந்தது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவரைக் கைது செய்த பொலிஸார், சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, ஏழாலைப் பகுதியைச் சேர்ந்த காது கேட்கும் தன்மையை இழந்திருந்த குறித்த மாற்றுத்திறனாளி, ஏற்கனவே மூன்று தடவைகள் வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்தமைக்காக நீதிமன்றினால் இழப்பீட்டுத் தொகை பெறப்பட்டு வழங்கப்பட்டமை நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனால் அவர் திட்டமிட்டு விபத்துக்களில் சிக்கி காயமடைகிறார் என நீதிமன்றம் கருதுகிறது என எச்சரிக்கை செய்த நீதிவான், அந்த மாற்றுத் திறனாளியை கைதடி முதியோர் இல்லத்தில் இணைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இழப்பீட்டுத் தொகையை முதியோர் இல்லத்துக்கு வழங்கமாறும் கட்டளையிட்டார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் ஆபத்தான முறையில் வாகனத்தை செலுத்தியமை, முன்னால் மாற்றுத் திறனாளியின் வாகனம் செல்வது தெரிந்தும் விபத்தைத் தடுக்கத் தவறியமை, விபத்தை ஏற்படுத்தி பாதிப்பினை ஏற்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான், சாரதிக்கு 12 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிக்கு இழப்பீடாக 30 ஆயிரம் ரூபா வழங்குமாறு உத்தரவிட்டார். (வ- 9)

# குழாய்க் கிணறுகள் அமைப்பது குறித்து அதிகாரிகள் விளக்கம் தரவேண்டும்

## முழங்காவில் மக்கள் கோரிக்கை

நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் முழங்காவில் பிரதேசத்தில் அமைக்கப்படும் 5 நிலக்கீழ் குழாய்க் கிணறுகள் அமைப்பதனால் எமது பிரதேசத்து நன்நீரை மாசு படுத்துமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே திட்டம் தொடர்பான முழு விளக்கத்தை அதிகாரிகள் தரவேண்டும்.

இவ்வாறு கேட்டுள்ளனர் முழங்காவில் மக்கள்.

'முல்லைத்தீவு மாவட்டத்தின் முழங்காவில் நன்நீர் வசதி கொண்ட பிரதேசமாகும். இதனால் இங்கு குடிதண்ணீருக்கு இன்று வரைக்கும் நிலத்தடி நீரே தட்டுப்பாடு இன்றி பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் மக்களின் முக்கிய வாழ்வாதாரமான வாழைச்செய்கை மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கைக்கு இந்த நீரே பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும் தற்போது கிளிநொச்சியின் கரையோரக் கிராமங்களான நாச்சிக்குடா மற்றும் இரணை மாதா நகர் போன்ற பிரதேச மக்களின் பாவனைக்கென முழங்காவில் பிரதேசங்களில் 5 நிலக்கீழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, நீர் வழங்குவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர். இதற்காக பெரியளவிலான இயந்திரங்கள் சகிதம் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுவதோடு, தொடர்ச்சியாக மணித்தியாலக்கணக்கில் நீர்பாய்ச்சிப் பட்டு பரிசோதனைகளும் இடம்பெறுகின்றன.

இது தொடர்பில் எமக்குள்ள சந்தேகங்களை உரிய திணைக்கள அதிகாரிகள் மட்டுமன்றி யாழ். பல்கலைக்கழக துறைசார் அதிகாரிகளும் இதற்கான ஆய்வின் பெறுபேற்றை எமக்காக மேற்கொண்டு வழங்க வேண்டுமென விரயமாக வேண்டுகின்றோம் என்று முழங்காவில் மக்கள் தெரிவித்தனர். (வ-10)

## 250 குடும்பங்களுக்கு ஜெரிகான்ஸ் கான்கள்

முன்னேற்றகரமான முகாமைத்துவ மற்றும் பாதுகாப்பான குடிதண்ணீர் சேவையை வழங்கும் உயர் நோக்கைக் கொண்டு வலி. மேற்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 250 குடும்பங்களுக்கு ஜெரிகான்ஸ் தண்ணீர்க் கான்கள் வழங்கப்படவுள்ளன.

"வலி. மேற்கு பிரதேச செயலக பிரிவில் 5 கிராமங்களில் இருந்து பிரதேச செயலாளரினால் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். பயனாளிகள் தெரிவானது பெண்களைத்தலைமையாகக் கொண்ட குடும்பங்கள், 3 கிலோ மீற்றர் தூரத்துக்கு மேல்குடிதண்ணீருக்காகப் பொதுக் கிணறுகளை நாடிச் செல்லும் குடும்பங்கள், மிகவும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்கள் என 250 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன" என்று ஆர். ஜெயால்ட் அன்ரனி தெரிவித்தார். (வ-50)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரணகம குழுவின் சகல ஆவணங்களையும் புதிய அலுவலகத்திடம் கையளிக்க முடிவு

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை நடத்திய பரணகம ஆணைக்குழுவின் ஆவணங்கள் புதிதாக அமைக்கப்படவுள்ள காணாமற்போனோர் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மகிந்த ஆட்சியின்போது நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவின் பதவிக்காலம் கடந்த ஜூன் 15ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. அதன்பின்னர் ஜனாதிபதி பதவிநீடிப்பை வழங்கவில்லை.

கடந்த வெள்ளியன்று தமது குழுவின் நடவடிக்கைகள் பற்றி இடைக்கால அறிக்கையை, ஜனாதிபதியின் செயலரிடம் பரணகம குழு ஒப்படைத்தது.

இறுதி அறிக்கையை கையளிக்க கால அவகாசம் போதாது. எனவே, இடைக்கால அறிக்கையுடன் அனைத்து ஆவணங்களையும் ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைத்துவிட்டோம் என்று காணமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் பரணகம தெரிவித்தார்.

கையளிக்கப்பட்ட ஆவணங்களுள் முக்கிய சில ஆவணங்கள் புதிய அலுவலகம் உருவாக்கப்பட்ட பின்னர் அதனிடம் கையளிக்கப்படவுள்ளன. அத்துடன், தேவையான நேரத்தில் பரணகம குழுவின் தரவுகளையும் அது திரட்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

# ஒரே தரத்திலுள்ள அதிபர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்துவது தவறு

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 14

போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து, நேர்முகத்தேர்வுக்குத் தோற்றி, முன்சேவைப் பயிற்சி பெற்ற புதிய அதிபர்களுக்கு மீண்டும் பரீட்சைகளும், நேர்முகத் தேர்வுகளும் நடத்தி ஒரே தரத்தில் உள்ளவர்களை பாரபட்சங்களுக்கு உட்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை முறையற்றதாகும்.

இவ்வாறு தெரிவித்தது இலங்கை ஆசிரியர் சங்கம்.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

அதிபர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டவர்களுக்கு பொருத்தமான பாடசாலைகள் இதுவரை வழங்கப்படவில்லை. இந்த நிலையில் பாதிக்கப்பட்டிருக்கும் தரம் -3 நியமனம்பெற்ற புதிய அதிபர்களுக்கு வடக்கு மாகாணத்தில் வலய ரீதியாக தரம் -3 அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆனால் கடமை நிறைவேற்று அதிபர்கள் பணியாற்றும் பாடசாலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படவில்லை.

வலிகாமம் கல்வி வலயத்தில் 42 உப அதிபர், பிரதிஅதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதிய அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இது முறையற்ற செயற்பாடு. இந்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளரிடம் கேட்டபோது, அதிபர் வெற்றிடங்களையே நிரப்புமாறு, தான் அறிவுறுத்தியதாகவும், உபஅதிபர், பிரதி அதிபர் வெற்றிடங்களை நிரப்புமாறு கூறவில்லை எனவும் இந்த விடயம் தொடர்பாகத்தான் கவனத்தில் எடுப்பதாக எமக்கு தெரிவித்தார்.

ஆனால் வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட புதிய அதிபர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனவும் கோரப்பட்டது. வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் இத்தகைய செயற்பாடானது அவருக்கு வேண்டியவர்களைப் பாதுகாக்கும் சூழ்ச்சி நிறைந்த செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம். எனவே இத்தகைய செயற்பாட்டை உடன் தடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கடமை நிறைவேற்று அதிபர்கள் தொடர்பாகவும், தரம் -3 நியமனம் பெற்ற புதிய அதிபர் நியமனங்கள் தொடர்பாகவும் நடுவண் கல்வியமைச்சின் இறுதி முடிவு அறிவிக்கப்படவில்லை. இந்தநிலையில் போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து, நேர்முகத் தேர்வுக்குத் தோற்றி, முன் சேவைப் பயிற்சிபெற்ற புதிய அதிபர்களுக்கு மீண்டும் பரீட்சைகளும், நேர்முகத் தேர்வுகளும் நடத்தி ஒரே தரத்தில் உள்ளவர்களைப் பாரபட்சங்களுக்கு உட்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை முறையற்றதாகும்.

அதிபர் வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளுக்கு வடக்கு மாகாண கல்வியமைச்சு தேர்வுகளை மேற்கொள்ளாமல் வலய ரீதியாகப் பரீட்சைகளையும், நேர்முக நடைமுறையையும் பின்பற்றி தெரிவு செய்வது என்பது சில கல்வி வலயங்களில் பல முறைகேடுகளை ஏற்படுத்தும்.

கடமைநிறைவேற்று அதிபர் தொடர்பாக நடுவண் கல்வியமைச்சின் தீர்மானத்துக்கு மாறாக வடக்கு மாகாணக் கல்வியமைச்சு தனித்து தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதுள்ளதாகக் கூறிக்கொண்டு புதிதாக நியமனம் பெற்ற அதிபர்களின் நியமனம் தொடர்பாக மட்டும் நடுவண் கல்வியமைச்சின் தீர்மானம் வருவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படுகின்றமை எவ்வகையில் நியாயம்? இந்தச் செயற்பாடானது முரண்பாடான தன்மையையும் பாரபட்சங்களையும் தோற்றுவித்துள்ளன. எனவே புதிய அதிபர்களுக்குத் தற்போது விண்ணப்பம் கோரப்பட்டுள்ள பாடசாலைகளை வழங்குவது தொடர்பான பரீட்சைகள், நேர்முகத்தேர்வுகளை நிறுத்தி, புதிதாக அதிபர் நியமனம் பெற்றவர்களுக்கு நடுவண் கல்வியமைச்சினால், அதிபர் நியமனம் தொடர்பான தீர்மானம் வழங்கப்பட்ட பின்னர் வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளுக்கு நேரடியாகவே நியமனங்களை வழங்குமாறு வடக்கு முதலமைச்சரிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (வ-4)

## தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் நா.முத்துக்குமார் காலமானார்



சென்னை, ஓக. 15

மஞ்சள் காமாலையால் அவதிப்பட்டு வந்த தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் நா.முத்துக்குமார் (வயது-41) சென்னையில் நேற்றுக் காலமானார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் நா.முத்துக்குமார். இயக்குநராக வேண்டும் என்ற முனைப்பில் பாலுமகேந்திராவிடம் உதவியாளராகப் பணியாற்றினார். சீமான் இயக்கிய வீரநடை படத்தின் மூலம் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் ஆனார்.

காதல் கொண்டேன், பிதாமகன், கில்லி, கஜினி, நந்தா, புதுப்பேட்டை, காதல், சந்திரமுகி, சிவாஜி, கற்றது தமிழ், 7 ஜி ரெயின்போ காலனி, காக்கா முட்டை, தெறி உள்ளிட்ட பல படங்களில் நா.முத்துக்குமார் எழுதிய பாடல்கள் பெரிய வரவேற்பைப் பெற்றவை.

தமிழ் சினிமாவில் 92 க்கும் மேற்பட்ட படங்களில் ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளார். தங்க மீன்கள் படத்தில் இவர் எழுதிய ஆனந்த யாழை மீட்டுகிறாய் பாடலுக்கும், சைவம் படத்தில் எழுதிய அழகே அழகே பாடலுக்கும் தேசிய விருதுகள் கிடைத்தன.

மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்ட நா.முத்துக்குமார் கடந்த ஒரு மாதமாக சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நா.முத்துக்குமார் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

முகப்பேரில் உள்ள நா.முத்துக்குமாரின் இல்லத்தில் திரையுலகினர் முத்துக்குமாருக்கு அஞ்சலி செலுத்தினர். நியூ ஆவடி ரோடு வேலங்காடு மின் மயானத்தில் இறுதிச் சடங்கு நேற்று மாலை நடைபெற்றது. இதில் திரையுலக பிரபலங்கள், கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள் என்று ஏராளமானோர் கலந்து கொண்டனர். (வ-5)

## காணாமற்போனோர் அலுவலகம்; ஜாதிக ஹெல உறுமய வரவேற்பு

காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டம் வரவேற்கப்பட வேண்டியதுஎன அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய தெரிவித்தது.

அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறீ வர்ணசிங்க இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காணாமற்போன ஆயிரக் கணக்கான படைவீரர்கள் மற்றும் பொலிஸார் பற்றிய தகவல்களும் கண்டறியப்படவேண்டும். புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளைக் கூட மீளவும் கைது செய்து, காணாமற்போன படையினர் பற்றிய தகவல்களை திரட்ட முடியும்.

தமிழ் அரசியல்வாதிகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டவற்றை மறந்து நல்லிணக்கப் பாதையில் நகர மறுத்தால், தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் பற்றியும் விசாரணை செய்யப்படவேண்டும்.

காணாமற்போனோர் பற்றிய அலுவலகமானது நாட்டு மக்களுக்கு பொறுப்பு சொல்ல வேண்டுமே தவிர, ஜெனிவாவுக்குப் பொறுப்பு சொல்லும் வகையில் அமையக்கூடாது என அவரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## கலந்துரையாடல்

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் இன்று 15.08.2016 பி.ப. 2.30 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

தகவல் - மாணவர் ஒன்றியம்

## பிரபாகரனின் படத்துடன் ரி சேட்டுகள்

யாழ்ப்பாணம், ஓக. 15

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படம் மற்றும் தமிழீழத்துக்கான வரை படம் ஆகியவற்றுடன் கூடிய ரிசேட்டுகளை, கண்டியில் உள்ள புடவைக்கடையிலிருந்து பொலிஸார் கைப்பற்றினர்.

விற்பனைக்கு எடுத்துவரப்பட்ட ஆடைகள் அடங்கிய மூடைகளிலேயே இந்த ரிசேட்டுகள் இருந்தன என்று பொலிஸார் கூறினர். இது தொடர்பில் கடையின் உரிமையாளர் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, புடவைக்கடைக்கு விரைந்த பொலிஸார், கடை உரிமையாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் ரிசேட்டுகளையும் கைப்பற்றினர். (வ-5)

## கூட்டுறவு தினத்தை முன்னிட்டு 22 பணியாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் ஓக .15

சர்வதேசகூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை, கூட்டுறவுச் சங்கங்களில்தொடர்ந்து 25வருடங்கள் சேவையாற்றி வரும் பணியாளர்களைப் பாராட்டிக் கௌரவித்தது.

கடந்த வியாழக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் சபையின் தலைவர் என்.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டுறவாளர் தின விழாவில் 22 பணியாளர்கள் மதிப்பளிக்கப்பட்டு அவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வடக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொன்.மோகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

திருமதி ரா.குகமலர், திருமதி வரதராசா புஸ்பராணி, பொ.கமலேஸ்வரன், மா.வரதராசா க.இராசலிங்கம், சி.தர்மகுலசிங்கம் நா.தவனேஸ்வரன், திருமதி இராஜசுலோசனா தேவராஜா, திருமதி ஷாமினி நவரத்தினம், திருமதி தர்மபூசணி சண்முகானந்தராசா, ஐ.செல்லையா, ச.இராஜமோகன், ஐ.செல்வசோதி, க.துரைசிங்கம், கி.நடேசலிங்கம், க.மகேசு, திருமதி வனயா உமாகாந்தன், க.கலைச்செல்வி, ஐ. பற்குணராசா, திருமதி சறோஜினிதேவி பரமானந்தம், இ.மகாலிங்கம், ஆ.மகேந்திரன் ஆகிய பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ற-17)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 14.08.2016 | 2017 | ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள்
11 28 49 51
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 3,756,400 /-
Galaxy Star
வெற்றி வாரம் 083 திகதி 14.08.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
07 10 34 48 58
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,383,820/-
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டு எதிர்க்கட்சியின் குரலை சபையில் செவிமடுக்கவில்லை

### பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 15

காணாமற்போனோர் அலுவலகத்தை உருவாக்குவதற்கான சட்ட வரைவு நிறைவேற்றப்பட்ட தினத்தன்று கூட்டு எதிர்க் கட்சியின் குரல் செவிமடுக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தினார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த வியாழக்கிழமை காணாமற்போனோர் விவகாரத்தைக் கையாளுவதற்கென அமைக்கப்படவுள்ள அலுவலகம் பற்றியதான சட்ட வரைவு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்தச் சட்ட வரைவுக்கு சகலரும் ஆதரவு வழங்கியுள்ளனர்.

நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்த போது சபாநாயகர் அதனை செவிமடுக்கவில்லை.- என்றார். (ந-4)

## காணாமற்போனோர் பணியக தலைமையகம் கொழும்பிலேயே

### நீதி அமைச்சர் விஜேதாச தெரிவிப்பு

கொழும்பு, ஓக.15

காணாமற்போனோர் பணியகத்தின் தலைமையகம் கொழும்பிலேயே இயங்கும். இந்தப் பணியகத்தின் ஆணையைநிறைவேற்றுவதற்குத் தேவைப்பட்டால், பிராந்தியப் பணியகங்களை அமைக்க சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

காணாமற்போனோர் பணியக சட்டத்தில் சபாநாயகர் கையெழுத்திட்ட பின்னர், இந்தப் பணியகத்துக்கான ஏழு உறுப்பினர்களை அரசமைப்புச் சபை பரிந்துரைக்கும்.

அடுத்தடுத்த வாரங்களில் காணாமற்போனோர் பணியகத்தை உருவாக்குவதற்கான பணிகளை அரசு மேற்கொண்டுவருகிறது. அரசமைப்புச் சபை தனது பரிந்துரைகளைச் சமர்ப்பித்த 15 நாள்களுக்குள் காணாமற்போனோர் பணியகத்தின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிப்பார்.

நியமனங்கள் விரைவில் மேற்கொள்ளப்படும். சபாநாயகரின் கையொப்பத்துக்காகக் காத்திருக்கிறோம். இந்தப் பணியகம் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவே செயற்படத் தொடங்கும். பணியகத்தின் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

எல்லா இனத்தவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஏழு உறுப்பினர்கள் இந்தப் பணியகத்துக்கு நியமிக்கப்படுவர். இதன் உறுப்பினர்களாக இருப்பவர்கள் உண்மையைக் கண்டறிவதில், விசாரணைகளை மேற்கொள்வதில், மனித உரிமைச் சட்டங்களில், அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டங்களில் அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் - என்றார். (ந-4)

## ஐ.தே.கட்சியின் அமைப்பாளர்கள் விரைவில் மாற்றம்

கொழும்பு, ஓக. 15

ஐக்கிய தேசிய கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வின் பின்னர் செயற்றிறன் அற்ற தொகுதி அமைப்பாளர்களை நீக்குவதற்குக் கட்சி தீர்மானித்துள்ளது என்று அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

செயற்றிறன் அற்ற தொகுதி அமைப்பாளர்கள் கட்சியால் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்ட அவர், அவர்களை நீக்கிப் புதிய அமைப்பாளர்களை நியமிப்பதற்குக் கட்சி தீர்மானித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

புதிதாக நியமிக்கப்படுகின்ற அமைப்பாளர் பதவிகளுக்கு இளைஞர்களை இணைத்துக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ந-4)

பஜாஜ் மோட்டார் சைக்கிள் பெறுவோருக்கான ஓர் நற்செய்தி

கிளிநொச்சி கரடிப் போக்கு சந்தியில் அமைந்துள்ள 'தரணீஸ்' மோட்டார் (பஜாஜ்) சைக்கிள்



விற்பனை நிலையத்தில் காசு அல்லது குத்தகை அடிப்படையில் பஜாஜ் மோட்டார் சைக்கிள் பெறுவோருக்கு 15.08.2016 ஆம் திகதி தொடக்கம் 10 லீற்றர் பெற்றோல் இலவசமாக வழங்கப்படும்.

தகவல்: உரிமையாளர்
தரணீஸ் மோட்டார் சைக்கிள் நிலையம்
தொடர்பு: 021 2280053

## முன்னாள் விமானப்படைத் தளபதிகளிடம் மிக் விமான மோசடி குறித்து விசாரணை

கொழும்பு, ஓக. 15

மிக்-27 போர் விமானங்களின் கொள்வனவு தொடர்பானமூல ஆவணம் காணாமற்போனமை குறித்து 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதவியில் இருந்த முன்னாள் விமானப்படைத் தளபதிகளிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

2005ஆம் ஆண்டு மிக் -27 போர் விமானங்களைக் கொள்வனவு செய்ததில் முறை கேடுகள் இடம்பெற்று தொடர்பாக கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. இது தொடர்பில் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மிக் போர் விமானக் கொள்வனவு தொடர்பான மூல ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு விமானப்படைக்கு கடந்த ஜூன் மாதம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மிக்-27 போர் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டது தொடர்பான மூல ஆவணங்கள் காணாமற்போய் விட்டன என்று விமானப்படை சார்பில் முன்னிலையான சட்ட அதிகாரி கடந்த ஜூலை 27ஆம் நாள் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தினார். இதுகுறித்து விசாரிக்க விமானப்படை விசாரணை நீதிமன்றம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 8ஆம் நாள் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட கோட்டை நீதிவான், மிக் விமானக் கொள்வனவு குறித்த மூல ஆவணங்கள் எவ்வாறு காணாமற்போயின என்பது தொடர்பாக நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

ஆவணங்களை மறைத்து, இந்த விசாரணைகளைக் குழப்ப எவர் நடவடிக்கை எடுத்திருந்தாலும், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் நீதிவான் பணித்தார்

மிக் கொள்வனவு ஆவணங்கள் காணாமற்போனமை தொடர்பாக, விமானப்படை அதிகாரி ஒருவர் கைது செய்யப்படும் நிலையை எதிர்நோக்கியுள்ளார்.

இந்த முறைகேடு குறித்து ரவி வைத்தியலங்கார தலைமையிலான நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு விசாரணை நடத்துகின்றது. இந்த விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ககன் புலத்சிங்களவிடம், ரவி வைத்தியலங்கார கோரிக்கை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-4)

## அமெரிக்க உதவிச் செயலர் அமைச்சர்களுடன் கலந்துரையாடல்

கொழும்பு, ஓக. 15

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களுக்கான உதவிச்செயலர் சார்ள்ஸ் எச்.றிவ்கின் நேற்றுமுன்தினம் இலங்கை அமைச்சர்களைச் சந்தித்துப் பேசினார்.

இரண்டு நாள்கள் பயணமாக இலங்கைக்குக் கடந்த வெள்ளிக்கிழமை வந்த சார்ள்ஸ் எச்.றிவ்கின் நேற்றுமுன்தினம் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, அனைத்துலக வர்த்தக மற்றும் அபிவிருத்தி மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, அமைச்சர் எரான் விக்கிரமரத்ன, சிறிலங்கா மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (ந-4)

## அம்மன் சிலை மீட்பு

கொழும்பு, ஓக. 15

பொகவந்தலாவ லோய்னோன் தோட்டத்தில் உள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் காணாமற்போன அம்மன் சிலை நேற்றுமுன்தினமிரவு மீட்கப்பட்டது. அது தொடர்பில் 3 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி 3 அடி உயரச் சிலை காணாமற்போனது. இரகசிய தகவலுக்கு அமைய பலாங்கொட பின்னவல தெதனகல கீழ் பிரிவு தோட்டத்தில் உள்ள வீடு ஒன்றில் இருந்து குறித்த அம்மன் சிலை மீட்கப்பட்டது.

அம்மன் சிலை கடந்த 5 நாள்கள் காட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-4)

சாவகச்சேரி நகராட்சி மன்றம்
ஆதன உரிமையாளரது பெயர் உட்புகுத்தல் ஆட்சேபனை அறிவித்தல்

**எமது பதிவேட்டின் பிரகாரம்:**
**ஆதன உரிமையாளர் பெயர் கணபதிப்பிள்ளை இராசரத்தினம் வட்டாரம் 4 பெருங்குளம் மட்டுவில் வீதி ஆதன இல.152**

மேற்குறித்த விவரத்துடன் உள்ள ஆதனத்தை இரு பிரிவுகளாக்கி ஒரு பகுதியை சுகந்தன் பெண் விநோதினியும் மறுபகுதியை ஜெயதீபன் பெண் யாழினியும் பெயர் உட்புகுத்தலுக்காக விண்ணப்பம் செய்துள்ளனர். குறித்த ஆதனத்திற்கான உறுதியை பரிசீலனை செய்தபோது 26.07.2009 ஆம் திகதிய 7 ஆம் இலக்க வே.சிவசுப்பிரமணியம் நொத்தாரிசு அவர்களது வெளிப்படுத்தல் உறுதிமூலம் கார்த்திகேசு வேதநாயகமும் பெண் ரெங்கநாயகியும் பரமசாமி இலங்கேஸ்வரனும் பெண் மேனகாவும் நிலப்பரப்பு 11இற்கான உரிமை கோரி பிரசித்த நொத்தாரிசு வே. சிவசுப்பிரமணியம் அவர்களின் உறுதி இலக்கங்கள் 17.18 (31.07.2005) இன் பிரகாரம் சுகந்தன் பெண் விநோதினி கிழக்குப்பக்கமாக 5½ பரப்பும் ஜெயதீபன் பெண் யாழினி மேற்குப்பக்கமாக 5½ பரப்பும் நன்கொடையாகப் பெற்றுள்ளனர்.

எனவே இவ்வாதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தல் உறுதியாகையால் இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாள்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் தெரிவிக்க முடியும் வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

(சி.24940)
(13.18)

## நான்காம் கட்டப் பேச்சுக்கு முன்னர் படகுகளை விடுவிக்க நடவடிக்கை

### புதுச்சேரி முதலமைச்சர் நம்பிக்கை

இந்திய - இலங்கை மீனவர்கள் இடையேயான நான்காவது கட்டப் பேச்சுக்கு முன்னர் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் விடுவிக்கப்பட்டு விடும்.

இவ்வாறு இந்தியாவின் புதுச்சேரி முதலமைச்சர் நாராயணசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

புதுச்சேரியில் நேற்று முன்தினம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜை புதுடெல்லியில் மரியாதை நிமித்தமாக சந்தித்தேன். இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பாக இரு தரப்புக்களுக்கிடையிலான நான்காம் கட்டப்பேச்சு விரைவில் சென்னையில் நடைபெறவுள்ளது. எந்தெந்தக் காலங்களில் இலங்கை மீனவர்கள் இந்திய கடல் பகுதியிலும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற் பகுதியிலும் மீன்பிடிப்பது என்பது குறித்தும், படகுகளை விடுதலை செய்வது குறித்தும் உரியதீர்வுகாணப்படும் எனவெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

பேச்சுக்குமுன்னரேபறிமுதல்செய்யப்பட்ட படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார் - என்றார். (ந-4)

வாடகைக்கு உண்டு
இருபாலைச்சந்திக்கு மிக அருகில் 3 அறைகள், சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
076 569 7165, 077 787 2907

பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
077 298 7506

விற்பனைக்கு
யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை நாச்சிமார்கோயிலுக்கு அண்மையில் 1¼ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
077 720 4167, 075 760 5244

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர்களிடமிருந்து மு.காவை தூரப்படுத்த எவராலும் இயலாது

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

அம்பாறை, ஓக. 15
அடிமட்டத் தொண்டர்களுடன் இணைந்த முஸ்லிம் காங்கிரஸை மக்களிடமிருந்து தூரப்படுத்துவதற்கு எவராலும் முடியாது.
இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸின் தேசியத்தலைவரும், நகர திட்டமிடல் நீர்வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூளுரைத்தார்.
முஸ்லிம் காங்கிரஸின் வீட்டுக்கு வீடு மரம் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்ட ஆரம்ப நிகழ்வு சாய்ந்தமருது பழைய தபாலக வீதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் தலைமை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முஸ்லிம் காங்கிரஸ் அடிமட்டத் தொண்டர்களுடன் இணைந்த இந்த நாட்டு முஸ்லிம்களின் பேரியக்கமாகும். இந்த ஆணித்தரமான வலுவை மேன்மைப் படுத்தவும், அகில இலங்கை ரீதியில் முஸ்லிம் சமூகத்தின் எழுச்சி மிக்க வலைப்பின்னலை ஏற்படுத்தவுமே வீட்டுக்கு வீடு மரம் எனும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
ஆனாலும் முஸ்லிம் காங்கிரஸ் எனும் பூர்வீக பலம் கொண்ட நம் இயக்கத்தை வேண்டுமென்றே சில கும்பல்கள் சிதறடிக்கலாமெனப் பகற் கனவு காண்கின்றன.
இத்தகைய சிறிய கும்பல்கள் முஸ்லிம் சமூகத்தின் பேரியக்கமான முஸ்லிம்



காங்கிரஸின் பலம் மற்றும் அதிகார வீச்சைக் கொச்சைப்படுத்தும் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன.
இது எமக்கு அச்சத்தின் பாற்பட்ட விடயமல்ல, இந்தக் கட்சியான முஸ்லிம்களின் பேரியக்கத்தை சில்லறை சித்து விளையாட்டுக்கள் மூலம் சிதைத்து விட முயற்சிப்போருக்கு எமது அடிமட்டத் தொண்டர்களே பதிலடி கொடுப்பர்.

### பலிக்காது

சொந்த அரசியலைச் செய்ய எவரும் முற்பட்டால் அது முஸ்லிம் காங்கிரஸ் தலைமையிடம் ஒரு போதும் பலிக்காது.
இத்தகைய சில்லறை சித்து விளையாட்டுக்களுக்கு மத்தியில் நாம் பக்குவமாகவே சமூக நலன்களை முன்னோக்கிய எமது பயணத்தைத் தொடர்வோம். முஸ்லிம் காங்கிரஸை முஸ்லிம் மக்களிடமிருந்து தூரப்படுத்துவதற்கு எந்தக் கொம்பனாலும் முடியாது.

### புதுயுகம்

இன்று இரு பெரும் கட்சிகள் இணைந்த நல்லாட்சி சிறுபான்மை சமூகங்களின் பேராதரவுடன் மலர்ந்து வீறுநடை போடுகின்றது.
இந்தப் புதிய யுகத்தில் நாம் திரும்பிப் பார்த்து எம் சமூகங்களைப் பின்னோக்கி இட்டுச் செல்லாது முன்னோக்கிப் பயணிக்க வேண்டும்.

### அரசியல் திருத்தம்

நல்லாட்சி அரசால் புதிய அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப்படவிருப்பதுடன் அதன் மூலம் நிரந்தர அரசியல் தீர்வும் எட்டப்பட விருக்கின்றது.
இந்த விடயத்தில் இந்த நாட்டு முஸ்லிம்களின்நலன்குறித்த விடயங்களைச் சரியானஉபாயங்களோடு கனகச்சிதமாக முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுக்கும்.
இந்த விடயத்துடன் கூடிய முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கும்தலையாயபொறுப்பு முஸ்லிம்காங்கிரஸுக்கு உண்டென்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்- என்றார். (ற-30)

## ஐ.எஸ். அமைப்பின் முகவர்கள் இலங்கைக்குள் ஊடுருவியுள்ளனர்

### பொதுபல சேனா கூறுகின்றது

கொழும்பு, ஓக. 15
வெளிநாடுகளிலிருந்து ஐ.எஸ் பயங்கரவாத முகவர்கள் கொழும்பு, வில்பத்து, காத்தான்குடி போன்ற பிரதேசங்களுக்குள் ஊடுருவியுள்ளனர் என்ற தகவல்கள் கிடைத்துள்ளன.
இவ்வாறு பொதுபல சேனா தெரிவித்தது.
பொதுபல சேனாவின் நிர்வாகப் பணிப்பாளர் கலாநிதி டிலந்த விதானகே இது குறித்து தெரிவித்ததாவது:
அரசு இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அது வலியுறுத்தியது. சிரியாவில் உயிரிழந்த இலங்கையின் ஐ.எஸ் பயங்கரவாதிக்கு அந்த இயக்கம் நட்டஈடு வழங்கியுள்ளது என்று தகவல்கள் கிடைத்துள்ளன.
பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மாலைதீவு, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து ஐ.எஸ். பயங்கரவாத முகவர்கள் இலங்கைக்குள் ஊடுருவியுள்ளனர். இவர்கள் கொழும்பு, வில்பத்து, காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் தங்கியுள்ளனர். இவர்களுக்கு அடையாள அட்டை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது- என்றார். (ற-4)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தரும் எமது சங்கத்தின் அங்கத்தவருமான
திரு.M. கந்தசாமி அவர்கள்
இன்று (15.08.2016) திங்கட்கிழமை தனது அறுபதாவது அகவையில் 19 வருடங்கள் சிறந்த சேவையினை வழங்கி ஓய்வு பெறுவதையிட்டுப் பாராட்டுவதுடன் சகல சௌபாக்கியங்களுடன் சிறப்புடன் வாழ இறைவனிடம் வேண்டுகின்றோம்.
வாழ்த்துவோர்:
பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

வேலணை - பெருங்குளம்
முத்துமாரியம்மன் திருக்கோயில்
வருடாந்த மஹோற்சவம்
துர்முகி வருடம் - 2016





தேர்த்திருவிழா - தீர்த்தத்திருவிழா
17.08.2016 புதன்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு அம்பாள் திருத்தேரில் பவனி வருதல்.
18.08.2016 - வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அம்பாளின் தீர்த்த உற்சவம்.
அம்பிகை அடியார்கள் அனைவரும் கலந்து தேரில் பவனிவரும் முத்துமாரி அம்மனைத் தரிசித்து மறுநாள் நடைபெறும் தீர்த்தோற்சவத்திலும் கலந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.
குறிப்பு:- மஹோற்சவ காலத்தில் அம்பிகை அடியார்களின் நலன்கருதி வழித்தடம் 776 குறிகாட்டுவான், 780 ஊர்காவற்றுறை இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பேருந்துகள் அம்மன் ஆலயம் வரை தங்களது சேவையை விஸ்தரித்துள்ளது.
வேலணை. தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா உபயகாரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சு.கட்சி ஆண்டு நிறைவு விழாவில் இந்நாள், முன்னாள் ஜனாதிபதிகள்

கொழும்பு, ஓக.15
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது வருட நிறைவு விழாவில் இந்நாள், முன்னாள் ஜனாதிபதிகள் ஒரே மேடையில் அமரவுள்ளனர் என்று கூறப்படுகின்றது. நிகழ்வில் மைத்திரிபால சிறிசேனவுக்கு இரு பக்கத்திலும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்கவுக்கும், மகிந்த ராஜபக்சவுக்கும் ஆசனங்கள் ஒதுக்கப்படும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.
குருநாகல் வெலகெதர விளையாட்டு மைதானத்தில் செப்ரெம்பர் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள இக்கூட்டத்தின் போது இக்காட்சியைக் காணலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ற-4)

## திருவடிநிலைத் தீர்த்தக் கரையை சுற்றுலாத் தலமாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 15
திருவடி நிலைபுனித தீர்த்தக் கரையை நவீன சுற்றுலாத் தலமாக மாற்ற வலி.மேற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த பிரதேசத்தை அழகுபடுத்துவதற்காக வேள்ட்விசன் தன்னார்வத்தொண்டுநிறுவனம் வழங்கும் இருபத்தைந்து இலுப்பை மரங்கள் திருவடி நிலையில் நடப்படவுள்ளன என்று வலி.மேற்கு பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ந. சிவரஞ்சன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நான்கு ஆலயங்களின் தீர்த்த உற்சவங்கள் வலி.மேற்கு திருவடி நிலை கடற்கரையில் இடம் பெறுகின்றன.
சுற்றுலாப் பயணிகள், பிதிர்க் கடன் நிறைவேற்றுவோர் மற்றும் ஆன்மிக தொண்டர்கள் வருகை தந்து வெள்ளைக் கடற்கரையில் நீராடி, சுவாமி தரிசனம் செய்து இளைப்பாறிச் செல்கின்றனர். திருவடிநிலை கடற்கரையை மேலும் அழகுபடுத்துவதற்காக வட மாகாண முதலமைச்சர்மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் ஊடாக 40 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். இதன் ஊடாக மடம், குளியலறை, உடுபுடைவை மாற்றும் இடம், திண்மக்கழிவு கொட்டும் தொட்டி, குடிதண்ணீர் மற்றும் நவீனவசதிகள் துரிதமாக அமைக்கப்படுகின்றன.
திருவடிநிலை கடற்கரைப் பிரதேசம் மேலும் அழகு நிலைகொண்ட சுற்றுலாத் தலமாகவும் புனித பிரதேசமாகவும் விரைவில் மாறும். - என்றார். (ற-50)

## விமான நிலையத்தில் முதியவர் மாயம்

கொழும்பு, ஓக. 15
கொழும்பில் இருந்து யாத்திரீகர்கள் சிலருடன் யாத்திரை சென்ற முதியவர் ஒருவர் புதுடில்லி விமான நிலையத்தில் காணாமற் போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. மஹியங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த முதியவரே காணாமற் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

31 ஆம் நாள் நினைவஞ்சலி
(15.08.2016)

தொம்மைக்குட்டி
செபமாலை
(சமாதான நீதிவான்)
"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவா-11.25)
நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் ஆண்டவரே! முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் பிரகாசிக்கக்கூடாது.
இவரின் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி எழுவை தீவு புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.
பிரிவால் துயருறும்.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
3ஆம் வட்டாரம், எழுவை தீவு.
0779668585
தோற்றம்
04.10.1940
மறைவு
16.07.2016

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 16.07.2016 இறைபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்
அமரர்
ஜெயபாலினா
இராஜேஸ்வரி
(ரோகினி ரீச்சர்)
தோற்றம்
04.12.1933
மறைவு
16.07.2016
அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் (13.08.2016) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.08.2016) திங்கட்கிழமை மு.ப 9.00 மணியளவில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் தியாகி அறக்கொடை நிலையத்தில் (T.C.T) நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
160, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
076 546 5600
திரு.திருமதி கோடீஸ்வரன்
தம்பதிகள்.

## பாதுகாப்பு அமைச்சின் சிறப்புக் கணக்கு மூலமே விகாரைகள் சீரமைக்கப்பட்டன

### கோத்தபாய ராஜபக்ச கூறுகின்றார்



கொழும்பு, ஓக. 15
பாதுகாப்பு அமைச்சுக்குட்பட்ட சிறப்புக் கணக்குகள் மூலமே கடந்த அரசின் காலப்பகுதியில் வேஹர விகாரைகள் சீரமைக்கப்பட்டன என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.
மத்துகம பெல்லன சிறி தர்ம பால பிரிவெனவில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வேஹர விகாரைகள் சீரமைப்புக்காக அரசிடம் இருந்து பணம்பெற்றுக்கொள்ளப்பட்டது என்றுகூறப்படுகின்றது. ஆனால் அவ்வாறு பணம்பெற்றுக்கொள்ளப்படவில்லை. போர் நிறைவடைந்த பின்னர், ஆயிரத்துக்கும் அதிகமான விகாரைகளைச் சீரமைப்பதற்குப் பாதுகாப்புத் தரப்பினரை ஈடுபடுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார் - என்றார். (ற-4)

## புதிய கல்விக் கொள்கையின்படி பாடங்களை மாணவரே தெரிவர்

### கல்வி அமைச்சின் உயரதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15
அரசின் புதிய கல்விக் கொள்கையில், மாணவர்கள் ஒரு குறிப் பிட்ட தொகுதிப் பாடங்களில் என்றில்லாமல் பல்வேறு பாடங்களில் இருந்து தமது கற்கைக்கான பாடங்களைத் தாமே தெரிவு செய்து கொள்ளக்கூடியதாக இருக்கும். அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான புதிய பாடங்களும் அதில் இடம் பெற்றிருக்கும். இவ்வாறு கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அரசின் புதிய கல்வித் திட்டம் 2018 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வரும். அதனைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிமுகப்படுத்துவார். க.பொ.த. சாதாரணம் மற்றும் உயர் தரங்களுக்கான பாடங்கள் உட்பட பாட விதானங்களில் காணப்படும் ஏராளமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் புதிய கல்விக் கொள்கை அமைந்திருக்கும். ஒரு குறிப்பிட்ட தொகுதிப் பாடங்களில் என்றில்லாமல் பல்வேறு பாடங்களில் இருந்து மாணவர்கள் தமது கற்கைக்கான பாடங்களைத் தெரிவு செய்து கொள்ளக்கூடியதாக இருக்கும். அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான புதிய பாடங்களும் இடம் பெற்றிருக்கும். கணிதம் அல்லது விஞ்ஞானத்துடன் தொழில்சார் பாடங்களையும் அவர்கள் தெரிவு செய்து கொள்ளக்கூடியதாய் இருக்கும்.
க.பொ.த. உயர்தரத்துக்கு தமது பாடங்களைத் தெரிவு செய்யும் மாணவர்கள் கலந்துரையாடல் ஒன்றிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முடியும். அவர்கள் தெரிவு செய்யும் பாடம் அவர்களுக்கு எந்த அளவு பொருத்தமாய் இருக்கும் என்பது இதன் மூலம் கண்டறியப்படும். இவ்வாறான கலந்துரையாடல்களில் குறித்த பாடப் பிரிவுகளுக்கு உரிய அதிபர்களும், ஆசிரியர்களும் கூட கலந்து கொள்வர். தற்பொழுது வருடத்தில் ஏறத்தாழ 3 லட்சம் சிறுவர்கள் கல்வித்துறையில் உள்வாங்கப்படுகிறார்கள். இவர்களில் 60 ஆயிரம் பேர் க.பொ.த. சாதாரணதரத்துக்கு இடையே கல்வியை கைவிடுகிறார்கள். அதேபோல் உயர்தரத்தை நாடும் போது 1 லட்சத்து 30 ஆயிரம் பேர் இடையில் நின்றுவிடுகிறார்கள். இந்த நிலைமையில் ஏற்பட்டுள்ள சிக்கலான பிரச்சினைகளுக்கு முடிவுகாண்பதுவே புதிய கல்வித்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருக்கும்.
புதிய திட்டத்தின் பிரகாரம் இடையில் கல்வியைக் கைவிடுபவர்களின் தொகை குறைவடையும். மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் வாய்ப்புக்கள் பெறுவார்கள்.
இந்தப் புதிய கல்விக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் பொருட்டு 12 ஆயிரம் ஆசிரியர்களை உள்வாங்கவும் புதிய பாடங்களைக் கற்பிக்கும் வகையில் அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கவும் ஆலோசித்து வருகின்றது.- என்றார். (ப)

## பெண் சடலமாக மீட்பு

கொழும்பு, ஓக. 15
ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தோட்டம் ஒன்றில் சடலம் புதைக்கப்பட்டிருந்த நிலையில் தோட்ட உரிமையாளரால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சடலத்தை மீட்டனர்.
கொலை செய்யப்பட்ட பெண் , எத்தேலதெல்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், எஹெளியகொட பலீபல பிரதேசத்தில் வசித்தவர் என்றும் தெரிவிக்கப் பட்டது.
ஆடைத் தொழிற்சாலையில் தொழில் புரியும் ஆண் ஒருவருடன் ஒரே வீட்டில் இருவரும் வசித்தனர் என்றும், இருவரும் திருமணம்செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. குறித்த பெண்ணுக்கு குழந்தையொன்று உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
குறித்த இருவருக்கும் இடையில் தினமும் சண்டை சச்சரவு காணப்பட்டது என்று பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.
கொலையைத் தொடர்ந்து குறித்த சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## இலங்கையை பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றச் சீனா உதவும்

### தூதுக் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது

கொழும்பு, ஓக.15
இலங்கையைத் தெற்காசியாவின் பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றுவதற்கு முழுமையான உதவிகள் வழங் கப்படும் என்று சீனா தெரிவித்தது. சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் தலைமையிலான தூதுக்குழுவிடம் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.
உலகப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளக்கூடிய வாய்ப்பு ஆசிய நாடுகளுக்கே இருக்கின்றது என்று பிரதமர் தலைமையிலான தூதுக்குழு குறிப்பிட்டது. இந்தியா, சீனா, ஜப்பான், சிங்கப்பூர் உட்பட்ட ஆசிய நாடுகள் உலக பொருளாதாரத்தைத் தீர்மானிக்கக் கூடிய சக்திகளாக மாறியுள்ளன என்றும் தூதுக் குழு சுட்டிக்காட்டியது. இலங்கையை தெற்காசியாவின் நிதி, பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றுவதே அரசின் பிரதான நோக்கம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராம மட்ட அமைப்புக்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு 3 மில்லியன் ரூபா நிதியில் மன்னாரில் புதிய விற்பனை நிலையம் அமைக்கப்பட உள்ளது. அதற்கான அடிக்கல் நடும் விழா நேற்றுமுன்தினம் மடுச் சந்தியில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனின் திட்டத்துக்கு அமைவாக 2016ஆம் ஆண்டு மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலே இந்த விற்பனை நிலையம் அமைக்கப்பட உள்ளது. (ற)

# சர்வதேச நீதிபதிகளின் மூலமே விசாரணை நடக்க வேண்டும்

## *மக்கள் கருத்தறியும் செயலணியிடம் வவுனியா மக்கள் கருத்து*

வவுனியா, ஓக.15
நாட்டில் பல ஆண்டுகளாக இடம்பெற்ற அசம்பாவிதங்களில் 2009ஆம் ஆண்டு எமது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையே பாரதூரமானது. அது மன்னிக்கமுடியாத குற்றமாகும். அதற்குப் பன்னாட்டு நீதிபதிகளாலேயே தண்டனைகள் வழங்க முடியும்.

இவ்வாறு மக்கள் கருத்தறியும் நல்லிணக்கச் செயலணியிடம் வவுனியா மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

போர்க்குற்ற விசாரணைகளை எவ்வாறு முன்னெடுப்பது, காணாமற் போனோர் தொடர்பான அலுவலகங்களை அமைப்பது தொடர்பாக மக்கள் கருத்தறியும் வவுனியா வலய நல்லிணக்க செயலணியின் அமர்வு நேற்றுமுன்தினம் வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:
நாங்கள் உயிர் வாழ்கின்றோம் என்றால் அது எங்களுடைய கணவர், பிள்ளைகள் இன்னும் உயிருடன் இருக்கின்றார்கள் என்ற ஒரு நம்பிக்கையில்தான். எங்களுடைய உயிரிலும் மேலானவர்கள் அவர்கள். அதனாலேயே அவர்கள் காணாமற் போனது தொடர்பாக எங்களுடைய உயிரைக் கூட துச்சமாக மதிக்காது சாட்சிகளையும், கருத்துக்களையும்தெரிவிக்கின்றோம்.

போர் நிறைவடைந்து இத்தனை ஆண்டுகளாக விசாரணைக்காக வரும் ஆணைக்குழுக்கள் அனைத்துக்கும் எங்களது துயரங்களைத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம். காணாமற் போனவர்களைக் கண்டறியும் ஆணைக் குழுவில் கூட இரண்டு தடவைகள் திரும்பத் திரும்ப எங்களுடைய ஆதங்கங்களை கூறினோம். எங்களது உறவினர்கள் காணாமற் போனதற்குக் காரணமானவர்கள் யார் என்றும் தெரிவித்தோம். ஆனால் இதுவரை என்ன நடந்தது?.

ஏதாவது தீர்வு கிடைத்ததா, அதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றதா, எதுவும் இல்லை. அங்கிருந்து அறிக்கை விடுவார்கள், இங்கிருப்பவர்கள் போராடுவார்கள். இதுதான் கடந்த 7 ஆண்டுகளாகநடைபெறுகின்றது. இது எங்களை ஏமாற்றுவதற்காக அரசால் மேற்கொள்ளப்படும் நாடகம் என்றுதான் கருதுகிறோம். இன்று நீங்கள் வந்திருக்கின்றீர்கள். எதுவும் நடக்காது. ஒரு வருடத்தின் பின் வேறு ஒரு குழு வரும், இப்படியே காலத்தைக் கழிப்பார்கள்.

இங்கிருக்கும் யாராலும் எங்களுக்கான தீர்வுகளைத் தரமுடியாது, இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க முடியாது. சர்வதேசம் இலங்கைக்குவரவேண்டும். அவர்கள் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் விசாரணைகள் செய்யப்படவேண்டும்.

எங்களால் குற்றஞ்சாட்டப்படும் இராணுவத்தினரை எங்கள் முன்பாக நிறுத்தி சர்வதேச நீதிபதிகள் விசாரிக்க வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இராணுவத்தினருக்கு எதிராக உண்மைகளைக் கூற வருபவர்கள் விசாரணைகளின் பின்னர் பாதுகாக்கப்பட வேண்டும். அதை சர்வதேசம் உறுதிப்படுத்த வேண்டும்.

குற்றம் இழைத்தவர்களுக்குத் தண்டனைகள் வழங்கும்போதே அவர்களுக்கு ஆறுதல் கிடைக்கும். இந்த அரசு மீது நம்பிக்கை ஏற்படும். அப்போதுதான் நல்லிணக்கம் ஏற்படும்.

நாட்டில்உள்ள இனங்கள்அனைத்தும் சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற பேதமின்றி சமமாக பார்க்கப்பட வேண்டும். அனைவருக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். இவை சீர் செய்யப்படுமானால் இந்த நாட்டில் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை ஏற்படும். நல்லிணக்கம் ஏற்படும். இன்று நடப்பது போன்று தொடர்ச்சியான நாடகங்களில் அரசு ஈடுபட்டால் நல்லிணக்கம் எந்தக் காலத்திலும் சாத்தியமற்றது - என்றனர்.

அமர்வில் 100ற்கும் மேற்பட்ட மக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர். அடுத்த அமர்வு நாளை மறுதினம் புதன்கிழமை வவுனியாப் பிரதேச செயலகத்தில் நடைபெறும். (ற-21)

## தெய்வீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 15
நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள் என்பன நடைபெறுகின்றன.

இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள எட்டாம் நாள் திருவிழாவில் நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் திருமுறையும் வாழ்வும் எனும் தலைப்பில் சைவப்புலவர் க.கமலநாதனின் தெய்வீக சொற்பொழிவு மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும். நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் துர்க்காதேவி இல்லத்தின் அனுசரணையில் தெய்வீக இசையரங்கமும் மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணி வரை நடைபெறும்.

நல்லை ஆதீன மண்டபத்தில் மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனத்தின் தெய்வீக இசைச் சங்கமமும் இரவு 7 மணி முதல் 8 மணிவரையும் நடைபெறும். (ற-ரி)

## பெண்ணுக்கு 200 மணி நேர சமூகப் பணி

சாவகச்சேரி ஓக.15
சாவகச்சேரி நீதிமன்றில் முதற் தடவையாக பெண்ணொருவரை 200 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கசிப்பு விற்பனை செய்த 27 வயது குடும்பப்பெண்ணொருவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது அவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. பெரிய தொகை தன்னால் செலுத்த முடியாது என்று பெண் கூறியதையடுத்து 200 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயம்சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் பெண்ணுக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருடச் சிறைத்தண்டனை விதித்தார். (ற-9)

## உள்ளூராட்சி சபைகள் 5எஸ் திட்டத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 15
யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள் உற்பத்தித் திறன் செயலகத்தால் 5 எஸ் திட்டத்தில் உள்வாங்கப்பட்டமை போன்று உள்ளூராட்சி சபைகளும் 5எஸ் திட்டத்துக்குள் மறுசீரமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களும் 5எஸ் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு நவீன முகாமைத்துவத்தின் கீழ் நிர்வாக மற்றும் திட்டமிடல் சேவைகள் இடம் பெறுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என்பனவும் அவ்வப் பிரதேச உற்பத்தித்திறன் செயலக அபிவிருத்தி அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் இந்தத் திட்டம் முன்னகர்த்தப்படவுள்ளன.

எதிர்வரும் 19ஆம் திகதி முதற்கட்டமாக வலி.மேற்குப் பிரதேசசபை 5எஸ் திட்டத்திற்குள் உள்வாங்குவதற்கான ஆரம்பக் கட்டம் சங்கானை பிரதேச செயலக அதிகாரிகளால் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-50)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 15
சர்வதேச மனித உரிமைச் சாசனம் 1948 நூல் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 5 மணிக்கு நடை பெறவுள்ளது என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

நீர் வளச் சபை நீர்ப்பாசன அமைச்சின் பணிப்பாளர் எஸ். சதிஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்தலைமைவிருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜனும் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)

## ஆடிச் செவ்வாய் விசேட பூசைகள்

யாழ்ப்பாணம், ஓக .15
நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நாளை ஆடிச் செவ்வாயை முன்னிட்டு அம்மனுக்கு விசேட பூசைகள் அபிசேகங்கள் இடம்பெற்று கர்ப்பூரச்சட்டி, பாற்செம்பு எடுத்தல் என்பன நடைபெறும். (ற-17)

## விளக்கமறியலில் இருந்தவர் மாரடைப்பால் உயிரிழந்தார்

பளை, ஓக.15
பளை நகரில் உள்ள விடுதியொன்றில் 14 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துர்நடத்தை தொடர்பான வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த விடுதி முகாமையாளர் மாரடைப்பால் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்தது.

பளை மல்லையடியைச் சேர்ந்த அப்புக்குட்டி இராஜேந்திரம் என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பளையில் உள்ள விடுதியொன்றில் சிறுமி பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாகச் சிறுமி கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இளைஞன் ஒருவரும், விடுதி முகாமையாளரும் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் விடுதியை சீல் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

வவுனியா சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த வேளையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சிறைச்சாலை அதிகாரிகளால் சேர்க்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பயனின்றி சாவடைந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-4,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ரயில் கடவைக் காப்பாளர்கள் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்தனர்

## தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி

வவுனியா, ஓக. 15

வடமாகாண ரயில் கடவைப் பணியாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக ரயில் கடவைச் சங்கத் தலைவர், எதிர்கட்சித் தலைவர் இரா.சம்மந்தனுடன் கலந்துரையாடினார். கலந்துரையாடல் நேற்று வவுனியாவில் நடைபெற்றது.



வடமாகாணத்தைச்சேர்ந்த ரயில்கடவைப் பணியாளர்கள் தமக்கான சம்பளத்தை உயர்த்துமாறு கோரி இரண்டு தடவைகள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். அண்மையில் வடக்கு மாகாணத்துக்கு வந்த மூன்று ரயில்களை மறித்து தண்டவாளங்களில் படுத்திருந்து போராட்டம் நடத்தினர். அவர்களின் பிரச்சினைக்கு இது வரை தீர்வு வழங்கப்படாத நிலையில் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றுக் காலை வவுனியாவில் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடந்தது. அதற்குத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமாகிய இரா. சம்பந்தன் வந்திருந்தார். கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக ரயில் கடவைக் காப்பாளர் சங்கத் தலைவர் பணியாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

ரயில் கடவைக் காப்பாளர்கள் தமது அடிப்படைச் சம்பளம், வேலை நிரந்தரமாக்குவது தொடர்பாக பல சுற்றுச் சந்திப்புக்கள் போராட்டங்களை நடத்தியும் எதுவிதமான சாதகமான பதில்களும் நல்லாட்சி அரசால் வழங்கப்படவில்லை. நாம் மேற்கொண்ட போராட்டங்களை நல்லாட்சி அரசு நசுக்கியது. இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் தலையிட்டு எமது அடிப்படைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுள்ளோம். எல்லாவிடயங் களயும் கேட்டறிந்த அவர் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்ளும்போது சகல ஆவணங்களுடன் தன்னைச் சந்திக்குமாறும் நாடாளுமன்றத்தில் அமைச்சர்களுடன் தொடர்பு கொண்டு சாதகமான பதில் பெற்றுத் தருவேன் என்று தெரிவித்தார் - என்றும் வடமாகாண ரயில் கடவைக்காப்பாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார். (ற-21)



# ஊர்காவற்றுறை - காரைநகர் பாலக் கட்டுமானம் விரைவில்

யாழ்ப்பாணம், ஓக. 15

ஊர்காவற்றுறையில் இருந்து காரைநகர் செல்வதற்கான கடல் வழிப் பாதைக்கான பாலம் அமைக்கும் பணிகள் நடைபெறவுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி தெரிவித்தார்.

இந்தப் பாலம் அமைக்கும் நடவடிக்கை, மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் நிதியுதவியுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்படவுள்ளது. 450 மீற்றர் நீளம் கொண்ட இந்தப் பாலத்தை அமைப்பதற்கு ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இது வரை காலமும் இரண்டு பகுதிகளுக்கும் இடையிலான போக்குவரத்தானது படகு மூலமாகவே நடைபெற்று வந்தது. குறித்த பாலம் அமைக்கப்படுவதால் மக்கள் விரைவாகவும் இலகுவாகவும் தமது பயணங்களை மேற்கொள்ள முடியும்.

பாலம் அமைப்பதற்கு கடலின் தரையமைப்பு எவ்வாறு உள்ளது என்பது பற்றிய பரிசோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் அறிக்கை அடுத்த கிழமைக்குள் வரும் பட்சத்தில் பாலம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும். பாலம் அமைப்பதற்கு ஒன்றரை வருடங்கள் தேவைப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி தெரிவித்தார். (ற-ரி)

# மட்டுவில் தெற்குப் பகுதியில் இளைஞர்கள் அட்டகாசம்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

தென்மராட்சி, ஓக.15

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயச் சந்தியில் இருந்து மட்டுவில் சிவன் கோயிலுக்குச் செல்லும் வீதியில் நடமாடும் இளைஞர்கள் மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

மாலை 5 மணி முதல் 10 மணி வரை வீதியில் நிற்கும் இளைஞர்கள் மது போதையில் வீதியில் செல்வோருடன் சேஷ்டைகளில் ஈடுபடுகின்றனர் என்று மட்டுவில் தெற்கு மக்கள் விசனம் தெரிவித்தனர். அவர்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மகா வித்தியாலய மைதானத்தில் மாலை நேரத்தில் விளையாட்டுப் பயிற்சிகளைப் பார்வையிடுவது போன்று கூடும் இளைஞர்கள் அந்த வழியே செல்லும் மாணவிகள், பெண்களிடம் தகாத வார்த்தைகளைப் பிரயோகிக்கின்றனர் என்றும், இரவு வேளையில் அங்குள்ள மதகுகளில் அமர்ந்து வீதியால் பயணிப்போரை அச்சுறுத்தும் வகையில் நடக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இளைஞர்களின் அட்டகாசத்தை நிறுத்தப் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-9)

# ஜனாதிபதி வழங்கிய அம்புலன்ஸ் அவசர தேவைக்கு பன்படுத்தப்படும்

யாழ்ப்பாணம் ஓக. 15

யாழ். மாநகராட்சி மன்றத்துக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டி அவசர தேவைக்குப் பயன்படுத்தப்படும் என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்த அம்புலன்ஸ் வண்டி மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தயாரான நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மாநகர தீயணைக்கும் வாகனத்துடன் இந்த அம்புலன்ஸ் வண்டியையும் சேர்த்து பயன்படுத்தவும் ஆலோசிக்கப்படுகின்றது. தீயணைப்பின்போது ஏதாவது இடர் ஏற்பட்டால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக இந்த அம்புலன்ஸ் வண்டி மூலம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-17)

# மருதமடு திருத்தலத்தின் திருவிழா திருப்பலி இன்று

மன்னார், ஓக. 15

மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள மருதமடு திருத்தலத்தின் வருடாந்த ஆவணி மாத உற்சவம் நவநாள் திருப்பலிகளுடன் இடம் பெற்று வரும் நிலையில் இன்று திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நவநாள் திருவிழா திருப்பலிகள் தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை 14 ஆம் திகதி மாலை வேஸ்பர் ஆராதனைகள் இடம்பெற்றன. மாலை 5.30 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து வேஸ்பர் ஆராதனைகளும் இடம் பெற்றன.

இன்று திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு திருநாள் திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஆயர்கள் மற்றும் குருக்கள் இணைந்து ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை, கண்டி மறைமாவட்ட ஆயர் வியானி பெர்ணான்டோ ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர் றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை, அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபட் அன்றாடி ஆண்டகை ஆகியோர் இணைந்து திருநாள் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுப்பர்.

காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி ஆரம்பமாகி திருச்சொரூப பவனி இடம் பெற்று திருச்சொரூப ஆசிர் வாதத்துடன் நிறைவடையவுள்ளது. (ற-56)

# பிராந்திய கருத்தமர்வு கண்டியில்

யாழ்ப்பாணம், ஓக.15

எட்டு நாடுகள் பங்குபற்றும் பன்னாட்டு ரீதியான பிராந்தியக் கருத்தமர்வு மாநாடு கண்டியில் நடைபெறவுள்ளது. இவ்வாறு வேள்ட் விசன் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் ரிவோஸ் III இன் செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயால்ட் அன்ரனி தெரிவித்தார்.

தெற்காசிய நாடுகளின் பிராந்திய கற்கைகள் தொடர்பான மீளாய்வு தொடர்பான கருத்தமர்வு எதிர்வரும் நவம்பர் 7, 8, 9, 10 ஆகிய நான்கு நாள்கள் இடம் பெறும். வேள்ட்விசன் நிறுவன ஒருங்கிணைப்பில் இந்த மாநாடு நடைபெறும். அதில் இலங்கையின் சார்பில் 20 பிரதிநிதிகள் பங்குபற்றுவர். அதில் நாடுகளின் அனுபவம் தொடர்பிலும் வேள்ட் விசன் பங்களிப்புத் தொடர்பிலும் கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-50)



மதுபாவனைக்கு எதிராக திருகோணமலையில் நேற்று நடைபவனி நடத்தப்பட்டது. உலக இளைஞர் தினத்தை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் திருகோணமலைக் கிளையின் இளைஞர் பிரிவும்,திருகோணமலை ஹீரோ லியோ கழகத்தினரும் இணைந்து இந்தக் கவனவீர்ப்பு நடைபவனியை ஏற்பாடு செய்தனர். நடைபவனி திருமலைக் காளி கோவில் முன்பாக ஆரம்பித்து டொக்யாட் வீதி, பிரதான பேருந்து நிலையம், பிரதான வீதி, கடற்காட்சி வீதியூடாக உட்துறைமுக வீதியில் திரும்பி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க திருகோணமலைக் கிளையை வந்தடைந்தது. ஊர்வலத்தின் முடிவில் கலந்து கொண்ட இளைஞர், யுவதிகளுக்கு போதை வஸ்து, மது பாவனைத் தடுப்புப் பற்றிய விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கு ஒன்றும் நடத்தப்பட்டது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனோர் பணியகம் குறித்து என்னுடன் பேசலாம்

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15
காணாமற் போனவர்கள் தொடர்பில் கண்டறியும் அலுவலகத்துக்கு யாராவது எதிர்ப்புத் தெரிவிப்பதாக இருந்தால், அது தொடர்பில் என்னுடன் கலந்துரையாட முடியும்.
இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
நேற்றுமுன்தினமிரவு தொலைக் காட்சியில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–



காணாமற் போனோர் தொடர்பில் கண்டறியும் அலுவலகம் இராணுவத்தைப் பலிக்கடாவாக்கும் நடவடிக்கை எனச் சிலர் விமர்சனத்தை முன் வைக்கின்றனர்.
கடந்த காலங்களிலும் காணாமற் போன சம்பவங்கள் பல இடம்பெற்றன. 88, 89 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இடம்பெற்ற காணாமல் போன சம்பவம் தொடர்பிலும் இதன் போது கண்டறியப்படும். இதனை அறியாதவர்கள் ஒரு தரப்பை மாத்திரம் மையப்படுத்திக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். – என்றார். (ற–4)

## ஓய்வு பெற்ற இராணுவத்துக்கு தொழில்வாய்ப்பு

கொழும்பு, ஓக. 15
பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ள இராணுவத்தினருக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத்தரும் வேலைத்திட்டமொன்று விரைவில் முன்னெடுக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.
பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
ஜனாதிபதியின் பரிந்துரையின் கீழ், சேவையில் இருந்து ஓய்வு பெற்ற இராணுவத்தினருக்குப் பல்வேறு நிறுவனங்களிலிருந்து வேலைவாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பிலான மேலதிகதகவல்களஎதிர்வரும் சில தினங்களில் அறிவிக்கப்படும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற–4)

## உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் மீது கத்திக் குத்து

கொழும்பு, ஓக. 15
மாத்தறை அக்குரஸ்ஸ பிரதேசத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதி விட்டு வீடு திரும்பிய மாணவர்கள் மீது இருவர் கத்திக் குத்துத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த சம்பவத்தில் 3 மாணவர்கள் கத்திக் குத்துக்கு இலக்காகினர். அக்குரஸ்ஸ பஸ் நிலையத்தில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.
மாணவர்கள் அக்குரஸ்ஸ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.
மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட இரு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற–4)




தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வை உனடியாக வழங்குமாறும், காணி மற்றும் வீட்டுரிமைகளை வழங்கி உரிமை உடையவர்களாக தொழிலாளர்களை மாற்றுவதற்கு அரசு மற்றும் தொழிற்சங்க ரீதியில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரி ஹற்றனில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தை செட்டிக் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. ஹற்றன் நகரின் கிறிஸ்தவ தேவாலயத்தில் இருந்து ஊர்வலமாக பதாதைகளை ஏந்தியவாறு நடைபவனியாகச் சென்ற 100க்கும் அதிகமானோர் ஹற்றன் பஸ் தரிப்பிடத்தில் போராட்டம் நடத்தினர். (ற–4)

## அரச வருமானத்தை தடுக்க 29 வழக்குகள்

கொழும்பு, ஓக. 15
தேசிய அரசின் வருமானங்களைத் தடுக்கும் விதத்தில் இதுவரை உயர் நீதிமன்றத்தில் 29 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். அரசுக்குக் கிடைக்கும் பல்வேறு வருமானங்களை நிறுத்தும் வகையில் வரலாற்றில் என்றுமில்லாத அளவு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இந்தச் சவாலை அரசு வெற்றி கொள்ளும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ற–4)

## தற்போதைய அரசுக்குள் பல்வேறு நெருக்கடிகள்

### ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, ஓக. 15
தற்போதைய அரசுக்குள் பல்வேறு நெருக்கடிகள் தோன்றியுள்ளன என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.
அவிசாவளைப் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
இலங்கையில் கடன்மூலமான நிதி நெருக்கடி, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, உற்பத்தித் துறையின் வீழ்ச்சி, அரச நிறுவனங்களுக்கான வருமான வீழ்ச்சி, இலாப பங்கீட்டில் முரண்பாடு என்ற 5 பிரதான பிரச்சினைகள் உள்ளன.
இந்த 5 பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்காத நிலையில்எவர் ஆட்சிக்கு வந்தாலும் பயனில்லை. இவற்றுக்கு மக்கள் விடுதலை முன்னணியிடம் மாத்திரமே தீர்வு உள்ளன.– என்றார். (ற–4)

# தேர்தல் சட்டத்திலுள்ள குறைபாட்டால் வாக்காளராக பதிய முடியாத நிலைமை

## மனித உரிமைகள் ஆணையகத்தில் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 15
இலங்கையில் 18 வயது நிரம்பியதும் வாக்காளராகத் தகுதி பெறுகின்ற உரிமை அரசமைப்பில் உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.
வருடத்துக்கு ஒருமுறை ஜூன் மாதம் முதல் திகதி மட்டும் வாக்காளராகப் பதிவு செய்யும் நடவடிக்கை இடம்பெறுகின்றது.
இதனால் லட்சக் கணக்கான இளைஞர்கள், யுவதிகள் வாக்காளராகப் பதிவு செய்ய முடியாதுள்ளது என்று முறையிடப்பட்டுள்ளது.
ஜூன் மாதம் முதலாம் திகதி 18 வயதை எட்டாத ஒருவர் அடுத்த வருடம் ஜூன் முதலாம் திகதி வரையில் 18 வயதை எட்டி, பல மாதங்கள் கடந்த நிலையில் வாக்காளராகப் பதிவு செய்வதற்காகக் காத்திருக்க வேண்டியிருக்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
வாக்காளராகப் பதிவு செய்யும் தற்போதைய இந்த நடைமுறை காரணமாக நாடளாவிய ரீதியில் லட்சக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் அரசமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள வாக்காளராகப் பதிவு செய்து கொள்ளும் உரிமையை இழந்துள்ளனர் என்றும் கவலை வெளியிடப்படுகின்றது.
இளைஞர், யுவதிகளுக்காகச் செயற்பட்டு வருகின்ற அவ்ரியல் எனப்படும் நிறுவனத்தினரே மனித உரிமைகள் ஆணையகத்தில் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.
ஜூன் மாதம் முதலாம் திகதி, 18 வயதை எட்டியதும் வாக்காளராகப் பதிவு செய்தாலும் கூட, அந்தப் பதிவுகள் உடனடியாக அங்கீகரிக்கப்படாத காரணத்தால் அத்தகைய பதிவின் பின் உடனடியாக வருகின்ற தேர்தல்களில் இளைஞர்கள், யுவதிகள் வாக்களிக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வாக்காளர் பதிவு செயற்பாட்டில் இத்தகைய குறைபாடு இருப்பதை ஒப்புக்கொண்டுள்ள தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, இக்குறை பாட்டை நீக்குவது தொடர்பில் அரசியல் கட்சிகளின் தலை வர்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.
தேர்தல் சட்டத்தில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவதன் ஊடாகவே இந்தக் குறைபாட்டை நீக்க முடியும் என்பது அரசியல் தலைவர்களுக்கு விளக்கப்பட்டுள்ளது என்றும், அவர்களே இதற்கு உரிய நடவடிக்கையை நாடாளுமன்றத்தின் ஊடாக மேற்கொள்ள வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். (ற–4)

## எம்.பிக்களுக்கு தனியான ஒழுக்கக் கோவை

கொழும்பு, ஓக. 15
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கெனத் தனியான ஒழுக்கச் சட்டக் கோவை ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பிரதியமைச்சர் கருணாரத்தின பரணவிதான தெரிவித்தார். காலியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அதற்கான ஆவணங்கள் தற்போது தயார் செய்யப்பட்டுள்ளன. அவற்றை விரைவில் சட்டமாக்க எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் 5,000க்கும் அதிக முறைப்பாடுகள்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தகவல்

கொழும்பு, ஓக. 15

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கைக்கு எதிராக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் குவிந்துள்ளன. அவற்றுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே காரணம். அவை தொடர்பில் பதில் கூற வேண்டிய கடப்பாடு அரசுக்கு இருக்கின்றது.

இவ்வாறு இலங்கை அரசின் விசேட வேலைத்திட்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நல்லிணக்கத்தை வடக்குக்கு மட்டுமோ அல்லது ஒரு இனத்தவர்களுக்கோ அல்லது ஒரு சாராருக்காகவோ செய்ய முடியாது. அனைவருக்கும் ஏற்ற வகையில் அதனைச் செய்வதே நல்லாட்சி அரசின் நோக்கம்.

ஜெனிவாவிலுள்ள பலவந்தமாக அல்லது சுயமாகக் காணாமற் போனவர்கள் தொடர்பான செயற்குழு தொடர்ச்சியாகக் கூடிவருகின்றது. அந்தக் குழுவின் அறிக்கையே ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது. மனித உரிமைகள் அமைச்சராக இருந்தபோது அடிக்கடி நான் அந்தக் குழுவினரைச் சந்தித்து, இலங்கை மீது இருந்த முறைப்பாடுகள் மற்றும் சம்பவங்களைக் குறைத்துக் கொள்ளவும் முயற்சித்தேன். தற்போது அந்தக் குழுவிடம் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் மீறல் தொர்டர்பில் 5 ஆயிரத்து 750 முறைப்பாடுகள் காணப்படுகின்றன. முன்னர் 12 ஆயிரத்து 341 முறைப்பாடுகள் அந்தக் குழுவிடம் இருந்தன.

1995ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் மூன்று ஆணைக் குழுக்கள் நிறுவப்பட்டன. அந்த ஆணைக்குழுக்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுத் தொகையில் அதிகளவான பகுதிகள் ஜெனிவாவிலுள்ள பலவந்தமாக அல்லது சுயமாகக் காணாமற் போனவர்கள் தொடர்பான செயற்குழுவிடம் முன்வைக்கப்பட்டன. அவற்றை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே கொண்டு சென்றார்.

12 ஆயிரத்து 341 முறைப்பாடுகளில் 6 ஆயிரத்து 551 முறைப்பாடுகள் அந்தக் குழுவுடன் நடத்திய பேச்சின் பின்னர் குறைத்துக்கொள்ளப்பட்டன.

நாட்டில் 1971ஆம், 72 ஆம் ஆண்டுகளிலும் 1987, 88ஆம் ஆண்டுகளிலும் இருவேறு கலவரங்கள் ஏற்பட்டன.

அவற்றுக்கான காரணத்தைக் கண்டறிய முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் குழு அமைக்கப்பட்டு, காரணங்களை ஆராய்ந்து, பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. அதற்கும் நாங்கள் பதிலளிக் கவே வேண்டும்.

வடக்கு, கிழக்கில் போரில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு மட்டுமல்ல, இவ்வாறான சம்பவங்களுக்கும் நாம் பதில்கூற வேண்டும் - என்றார். (ற-4)

# விளக்கமறியலில் உள்ள ஒரு சிலருக்கு கட்டணம் செலுத்தும் நோயாளர் விடுதி

### மக்கள் தம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர் என்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, ஓக. 15

விளக்கமறியலில் உள்ள சந்தேக நபர்களில், சிறப்புரிமைகளைப் பெற்ற ஒரு சிலருக்கு மட்டும் சிறைச்சாலை வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தும் நோயாளர் விடுதி ஒதுக்கப்படுவது எவ்வளவு தூரம் நியாயமானது என்று பொதுமக்கள் என்னிடம் கேள்வி எழுப்புகின்றனர்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆசிய சட்ட மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சட்டம் அனைவருக்கும் நியாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சட்டம் சுயாதீனமாகவும் பக்கச் சார்பற்றதாகவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். ஒரு நாட்டின் அரசியல் யாப்பு அந்த நாட்டின் சட்டத்தைப் பலப்படுத்தும் முக்கிய காரணி. சட்ட ஆட்சியை பலப்படுத்தும் போது சட்டவாக்கம், நீதித் துறை, நிறைவேற்று அதிகாரம் ஆகிய மூன்றும் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் சரியாக நிறைவேற்றவேண்டியது அவசியமாகும். சட்டத் தீர்வுகளைத் தாமதமின்றிப் பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய அரசியல் யாப்பு நாட்டின் சட்டத்தைப் பாதுகாக்கும் வகையிலும் மனித சமூகத்தை வளப்படுத்திப் பாதுகாக்கும் வகையிலும் அமையும் - என்றார்.

ஆசிய பசுபிக் சட்ட மாநாடு நிறுவப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவின் பொன்விழா நிகழ்வுகள் இலங்கையில் நடைபெறுகின்றன. அதனோடு இணைந்ததாக 2016 சட்டமாநாடு கடந்த சனிக்கிழமை முதல் இன்று திங்கட்கிழமை வரை கொழும்பில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

# புதிய வேலைத் திட்டத்துடன் பயணிக்கிறது சுதந்திரக் கட்சி

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 15

சிறிலங்கா சுதந்திரக் கட்சி முற்றிலும் புதிய வேலைத் திட்டத்துடன் பயணிக்கின்றது. எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் 65 ஆவது நிறைவு விழாவில் எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பில் அறிவிக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

இந்தப் புதிய வேலைத்திட்டங்கள் பல குழுக்கள் மூலம் தற்போழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன. வேலைத் திட்டம் வெளியிடப்பட்ட பின்னர், புதியவர்களை இணைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும். எதிர்காலத்தில் சுதந்திரக் கட்சி அரசு ஒன்றை அமைப்பதற்காகவே இந்தப் புதிய வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன- என்றார். (ற-4)

# மகிந்த தலைமையிலான அரசு அமைதியைச் சீர்குலைத்தது

### அமைச்சர் சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 15

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு நாட்டின் அமைதியையும் சமாதானத்தையும் சீர்குலைத்தது.

இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வெளிநாடுகளில் இலங்கையின் நற்பெயரைக் கெடுத்து நாட்டை மோசமானமான நிலைக்குக் கொண்டு சென்றவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

கொள்ளையர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாத்து சு[illegible] ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து கட்டியெழுப்பி வருகின்றனர் - என்றார். (ற-4)





ஏழாம் நாள் உள்வீதியுலா

# எட்டாம் திருவிழா

## தலைவிதி உன்னிடமே!

நாளை நமதாக வேண்டுமே முருகா
நாளும் உனதாக வரம் வேண்டும்
ஏழை மனங்குளிர உலா வரவேண்டும்
இடம்பெயர்ந்தோர் வீடு செல்ல வேண்டும்

பாலை வனம் போல் உலகம் மாறுகிறது
பசுத்தோல் போர்த்த புலிகள் பசியாறுகின்றனர்
வேளையறிந்து சொல்ல விசாரணை வருகிறது
வேல் முருகா! எங்களின் தலைவிதி உன்னிடமே!

- கே.எஸ்.சிவஞானராஜா.

## மயிலேறி எப்போ வருவாய் கந்தா

நல்லூரில் வீற்றிருந்து அருள்புரியும் கந்தா!
அடியவர்கள் குறைதீர்க்கும் அலங்காரக் கந்தா!
ஆனைமுகன்சோதரனே வேலேந்தும் கந்தா!
சூரபத்மனை அழித்தெம்மை ஆட்கொண்ட கந்தா!
தேவர்களைச் சிறைமீட்டுக் காத்திட்ட கந்தா
எம்மவர் படும் பாட்டுக்கோர் எல்லை இல்லையா கந்தா
அல்லல்படும் மக்களின் துயர்துடைக்க உந்தன்
அபயக் கரத்தை ஒருமுறை நீட்டிடுவாயா கந்தா
மக்களது துயரமது போக்கியருள் நல்க
மயிலேறி எங்களிடம் வந்திடுவாய் கந்தா!

- நயினை விசு இராசநாயகம்

## நல்லதொரு தீர்வைத் தந்திடையா

ஆடிவரு மயிலேறும்
ஆணழகா முருகா
நம் அவலங்கள் அடியோடு
மண்ணினிலே மறைய
கோடி முறையுனைப் பணிந்தோம்
கோமகனே மருகா
கொண்ட வள்ளி தெய்வானை
யுடனுறையும் மணவாளா
பாடித்துதித்த சித்தர் மனம்
போற்றும் பாங்கான வேலவா
நாடி வந்தோருக்கு
நலமளிக்கும் நல்லூரா
நல்லதொரு தீர்வைத்
தந்திடையா

– க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NLB

திருவிழாக் காலம் கொண்டு வரும்

# தங்க யோகம்




நல்லூர் கந்த சுவாமி கோயில் திருவிழாவின் போது தங்க யோகத்தைப் பெற்றிட நீங்களும் தயாராகுங்கள். மூன்று வாசனா சம்பத லொத்தர் சீட்டுக்களை வாங்கும் போது உங்களுக்குக் கிடைக்கும் தங்க யோகக் கூப்பனை பூர்த்தி செய்து விற்பனையாளருக்கு அல்லது விற்பனை முகவருக்குக் கையளியுங்கள். குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளருக்கு தங்க ஆபரணங்கள் பரிசாக வழங்கப்படும்.

**இக்குலுக்கல் முறைப் போட்டி வட மாகாணத்தில் கொள்வனவு செய்யும் லொத்தர் சீட்டுகளுக்கு மாத்திரமே செல்லுபடியாகும்.**

**வாசனா சம்பத**

அதிர்ஷ்டத்தின் மகாலக்ஷ்மி

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
234/2,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமல் போனோர் பணிமனை சட்டம் நிறைவேறி இருப்பது ஆறுதல்

காணாமற்போன நபர்களுக்கான காரியாலயம் அல்லது பணிமனையை அமைப்பதற்கான சட்டவரைவு கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் கூட்டு எதிர்க் கட்சியினரின் பலத்த எதிர்ப்பு, கூச்சல், குழப்பங்களுக்கிடையில் நிறைவேற்றப்பட்டிருப்பது ஆறுதல் அளிப்பதாகும்.

30 வருடகாலத்துக்கு மேல் நடந்து முடிந்த போரின் போதும் போரின் இறுதிக்காலத்திலும் போர் முடிவுற்ற உடனடி காலப்பகுதியிலும் காணாமற் போன அல்லது பலவந்தமாகக் காணாமற் போகச் செய்யப்பட்ட தமது உறவினர்களுக்கு என்ன நேர்ந்தது, அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா, இரகசிய முகாம்களில் இன்னமும் வதைகளுக்குள்ளாக்கப்பட்டு வருகிறார்களா, இரகசியமாகவே கொல்லப்பட்டு மறைக்கப்பட்டு விட்டார்களா என்பவை குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் அறிந்துகொள்ள ஆவலாய் காத்திருக்கிறார்கள். காணாமற் போனவர்கள் இறந்திருப்பார்களாகில் அது உறுதிப்படுத்தப்பட்டால் தான் அவர்களுக்குரிய சமயக் கடன்களைச் சம்பந்தப் பட்டவர்கள் நிறைவேற்றி ஆத்ம திருப்தியடைய முடியும். காணாமற்போனவர்களில் அநேகம் பேர் உறவினர்களாலேயே ராணுவத்தினரிடம் சரணடையச் செய்யப்பட்டவர்கள் அல்லது விசாரித்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையில் ஒப்படைக்கப்பட்டவர்கள். மேலும் பலர் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டவர்கள். வீடுகளுக்கு வந்து தாய் தந்தையர், மனைவியின் கண்களின் முன்னால் ஈவிரக்கமின்றி தரதரவென்று இழுத்துச் செல்லப்பட்டவர்கள். இவ்வாறு பாதிப்புக்குள்ளான குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்துக்கான வழிகளை இழந்து தவிப்பது ஒருபுறமிருக்க அன்றாட நாள்களைக் கவலையோடும் கண்ணீரோடுமே கழித்து வருகின்றனர்.

எனவே தான் காணாமற் போன உறவினர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிவதும் அதனை அவர் தங்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களின் கண்ணீரைத் துடைப்பதும் பதவியிலிருக்கும் அரசின் கடமையும் பொறுப்புமாகின்றது. போரை நடத்தி முடித்தவர்கள் வேறு ஒரு தரப்பினர் என்றாலும் அதனால் ஏற்பட்ட விளைவுகளைக் கண்டறிவதும் பரிகாரம் காண்பதும் பதவியிலிருக்கும் அரசின் கடமையும் பொறுப்புமாகின்றது. அந்த வகையில் இன்றைய அரசு சரியான வழியொன்றில் நகர முற்பட்டிருந்ததையே இந்தச் சட்ட வரைவு நிறைவேற்றப் பட்டிருப்பது எடுத்துக் காட்டுவதாகக் கொள்ள முடியும்.

இருந்தபோதும் இவ்வாறு போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சார்பாக எடுக்கப்படும் சிறு முயற்சிகளையும் முளையிலேயே கிள்ளி எறிந்து விடவும் குற்றம் புரிந்த அனைவரையும்- இராணுவத்தினர், ராணுவத் தளபதிகள், அவர்களுக்குப் பணிப்புரை வழங்கியவர்கள். காப்பாற்றிக் கொள்ளவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களான கூட்டு எதிர்க் கட்சியினர். பகீரத பிரயத்தனங்களில் இறங்கியுள்ளனர்.

கூட்டு எதிரணியினர் ஆட்சி அமைக்க வாய்ப்பு ஏற்பட்டால் குறித்த சட்ட வரைவு செல்லுபடியாகாமல் செய்யப்படும் என்று அதன் முக்கிய பிரமுகர் தினேஷ் குணவர்த்தன அறிக்கை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சட்ட வரைவின் பிரகாரம் உருவாக்கப்படும் காணாமற் போனோர் தொடர்பான பணிமனையானது எவ்வாறு செயற்படும் என்பதை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

ஆள்கள் காணாமற் போன சூழ்நிலைகளைக் கண்டறிவதற்கான உண்மையைக் கண்டறியும் ஆணையம் ஒன்று அடுத்தமாதம் நிறுவப்படும். ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு வழங்கப்பட்ட உறுதிமொழி ஒன்றை நிறை வேற்றுவதாக இது அமைவதோடு ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்கள் அளித்த பணிப்புக்கு ஏற்ற வகையிலும் இது அமைகின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் காணாமற் போனவர்கள் தொடர்பாக வெவ்வேறு புள்ளி விவரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தந்துள்ள மிகப் பிந்திய அறிக்கையில் 16,008 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பலவந் தமாகவும் தன்னிச்சையாகவும் காணாமற்போகச் செய் யப்பட்டவர்களின் ஐ.நா.பணிக் குழுவானது 12 000 என்று குறிப்பிட்டுள்ளது. பரணகம ஆணைக் குழு 24 000 என்று தெரி வித்துள்ளது. இதில் சரியான எண்ணிக்கையைக் கண்டறிவது முக்கியமாகும். இது சட்டம் சம்பந்தமானதொரு பொறி முறையன்று. இது உண்மையைக் கண்டறியும் பொறிமுறை. காணாமற் போனவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதையும் அதற்கான சூழ்நிலையையும் இந்த ஆணையம் தேடிக் கண்டறியும் அத்துடன் அவ்வாறு இனிமேல் நடவாதிருப்பதற்கான வழிமுறைகளையும் விதந்துரைக்கும். நபர்கள் தடுத்து வைத்திருக்கக் கூடிய எந்த ஒருதடை முகாமுக்கும் முன்னறி வித்தலின்றியே திடீர்பயணம் செய்து ஆராயவும் அதனால் முடியும். அவசியமான செயற்பாடுகள் தொடர்பில் வெளி நாட்டு நிபுணர்களின் ஆலோசனையும் பெறப்படும். இதில் இன்னொரு முக்கியமான அம்சம் என்னவெனில் ஆணையத்துக்கு தகவல் தருபவர்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதாகும்.

இவ்வாறு உண்மையைக் கண்டறிந்ததன் பின்னர் என்ன நடக்கும் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இருந்தாலும் இந்த விசாரணைகளில் கண்டறியப்படும் உண்மைகளின் படி குற்றம் புரிந்திருப்பவர்கள் பற்றிய விவரங்கள் பகிரங்கப் படுத்தப்பட வேண்டும். அத்துடன் அவ்வாறானவர்கள் மீதான விசாரணைகள் பாகுபாடின்றி நீதிமன்றங்களால் நடத்தப் படுவதையும் தண்டிக்கப்படுவதையுமே பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.



> செஞ்சோலை வளாகத்தில் அப்பாவி மாணவிகளைக் கொன்றது மாத்திரமல்லாமல் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திலுள்ள சிறுவர் போராளிகளெனக்கூறி வெளியுலகுக்கு உண்மையைமூடிமறைக்க மகிந்த அரசு கடும் பிரயத்தனங்களை எடுத்திருந்தது.

மு.ஈழத்தமிழ்மணி

ஈழத்தமிழர்களின் நீண்டகாலச் சோக வரலாற்றிலும், தமிழர்களின் விடுதலைக்கான போரியல் வரலாற்றிலும் இடம்பெற்ற பல படுகொலைச் சம்பவங்களை இலேசில் வார்த்தைகளால் வர்ணித்துவிட முடியாது. விடுதலை வேண்டி ஆயுதப் போராட்டங்கள் விடுதலைப் புலிகளாலும், மற்றும் விடுதலை அமைப்புக்களாலும் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப காலம் தொடங்கி, முள்ளிவாய்க்காலில் போர் முடியும் வரையில் ஆயிரக் கணக்கான மாணவ மாணவியர்கள் அரசுப்படைகளால் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இலங்கை அரச படையினரால் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் கொல்லப்பட்டவர்களில் பாடசாலைகளில் கல்விகற்கின்ற சாதாரண மாணவர்களிலிருந்து உயர்தர வகுப்பு மாணவர்கள், பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று வந்த மாணவர்கள் வரையிலும் ஆயிரக் கணக்கானவர்கள் அடங்குவர்.

1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சியிலும், 1989ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஆர்.பிரேமதாச ஆட்சியிலும், 1994ஆம் ஆண்டு முதல் பெண் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்த சந்திரிகா குமாரதுங்க ஆட்சியி லும், பின்னர் 2005ஆம் ஆண்டு பதவியில் அமர்ந்து 9ஆண்டுகள் ஆட்சி செய்த மகிந்த ராஜபக்ச ஆட்சியிலும் விடுதலைப் புலிகளை அழிக்கின்றோம், பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுகிறோம் என்ற போர்வையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மாணவர்களைக் கொன்றொழித்துள்ளனர்.

### நாகர்கோயில் பாடசாலை மீது குண்டு வீச்சு

நாகர்கோயில் பகுதியிலுள்ள பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையில் அரசுப் படையினரின் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் பல மாணவர்கள் சந்திரிகா ஆட்சியின்போது கொத்தாகக் கொல்லப்பட்டிருந்தனர். மகிந்த பதவிக்கு வந்து ஒன்பது மாதங்களில் மாணவர்களையும் இல்லாதொழிக்க வேண்டும்,அல்லது மரண அச்சுறுத்தல் மூலம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற சிந்தனை அடிப்படையில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள வள்ளிபுனம் செஞ்சோலையிலும் 60க்கு மேற்பட்ட ஒன்று மறியாத பிஞ்சு மாணவர்களின் உயிர்களை அரச படைகள் அன்று காலை மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்டு குருதியினால் எழுதப்பட்ட நாளாகவே 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி, வன்னிப் போரியல் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வன்னியில் வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலைவளாகத்தில் அரசுப்படைகளின் மிலேச்சத்தனமான விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் 61 மாணவிகளின் உடல்கள்யாவும் சிதறிய நிலையில் அவர்களது உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருந்தன. 155இற்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தனர். காயமடைந்த பல மாணவிகளின் உயிர்கள் ஊசலாடிய நிலையிலிருந்தன. பலர் அங்க அவயவங்களை இழந்திருந்தனர். இந்தச் சம்பவம் இடம் பெற்று பத்தாண்டுகள் கழிந்து போயுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வள்ளிபுனம் மக்கள் குடியிருப்புகள் மிக நெருக்கடிகள் நிறைந்த பகுதியாகும். யாழ். குடாநாட்டிலிருந்து 1995ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து வன்னிப்பிரதேசம் சென்றவர்களால் இதனை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். அப்பகுதியிலே செஞ்சோலை வளாகமும் அமைந்திருந்தது. மனிதநேய நடவடிக்கைகள் அமைந்த பகுதியாகவே வள்ளிபுனம் விளங்கியது.அந்தப்பகுதியில் வேறு சில சிறுவர் இல்லங்களும் அமைந்திருந்தன.

வள்ளிபுனம் செஞ்சோலை வளாகம் தொடர்ந்தும் செயற்பட்டுவந்தது, இங்கு வதிவிடப் பயிற்சிப் பட்டறைகள் நடப்பது வழமையானதொரு செயற்பாடாகும். ஏற்கனவே சிறுமியர் இல்லமாக இது செயற்பட்டமையினால் மாணவிகள் தங்கியிருந்து பயிற்சிகளை மேற்கொள்வதற்கு வசதியாக அமைந்திருந்தது. அத்துடன் செஞ்சோலை வளாகம் ஐ.நா. அமைப்புகளுடாகப் பயிற்சிப்பட்டறைக்கான இடமாவும் இலங்கை அரசினாலும் பதிவு செய்யப்பட்டிருந்தது. பல பயிற்சிப்பட்டறைகள் செஞ்சோலை வளாகத்தில் நடைபெற்று வந்துள்ளன.

வன்னிப் பிரதேசத்தில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலை மாணவர்களில் 500 பேரை இணைத்து தலைமைத்துவப் பயிற்சி நெறியொன்றுக்காக செஞ்சோலை வளாகத்தில் ஒன்றுகூடினர். 11.08.2016 திங்கட்கிழமை பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட இருந்தது.

இயற்கை இடர்களிலிருந்து பாதுகாப்புத் தேடும் நடவடிக்கைகள், பால்சமத்துவம், குழுவேலை, நேரமுகாமைத்துவம், தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள், தலைமைத்துவத்துக்கான மேம்பாடு, ஆளுமை விருத்தி இணைப்பாட விதான செயற்பாடுகள் போன்றவற்றுக்கான பயிற்சிகள் வழங்கப்பட விருந்தன.

கிளிநொச்சி கல்வி வலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயிற்சி நெறியில் பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிலையத்தின் நிதியுதவியின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கல்வி வலயத்தை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அரசின் கொடூரத்தின் உச்சம் செஞ்சோலை சிறுவர் இல்லத் தாக்குதல்

சேர்ந்த 18 பாடசாலைகளை உள்ளடக்கிய க.பொ.த. உயர்தரத்தைச் சேர்ந்த சுமார் 500 மாணவர்களும் மாணவிகளும் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

### செஞ்சோலை வளாகத்தை விமானப்படை நோட்டம்

11.08.2006 இலிருந்து செஞ்சோலை வளாகத்தில் க.பொ.த.உயர்தர மாணவிகளுக்கான பத்து நாள் வதிவிடப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து நான்காம் நாளான 14.08.2006திங்கட்கிழமையான அன்றைய தினம், தீ மற்றும் மின் இடர்களிலிருந்து பாதுகாப்புப்பெறல், குழுவேலை போன்ற பயிற்சிகளை வழங்க துறைசார் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர்.

காலை 7மணிக்கு ஒன்றுகூடலானது ஆரம்பிக்கின்ற நேரமாகும். சகல மாணவ மாணவியர்களும் ஒன்று சேர்ந்து கொள்வதற்கு முன்பாக அன்றைய தினம் அதிகாலை வேளையில் 4 மணிக்குப் பின்னர் பரந்தன் முல்லைத்தீவு பகுதியை உள்ளடக்கிய தேவிபுரம், வள்ளிபுனம் கிராமங்களுக்கு மேலாக வன்னி மக்களால் வண்டு என அழைக்கப்படுகின்ற ஆளில்லா வேவு விமானம் தாழப்பறந்து கொண்டிருந்தது. வண்டு தாழப்பறந்த நிலையில் அப்பகுதியில் உள்ளமக்கள் ஓரளவு அச்சத்தில் உறைந்தனர். வண்டு சுற்றியபடியினால் கிபீர் வந்து குண்டு போடப் போகிறது என்றவாறு செஞ்சோலை வளாகத்திலுள்ளவர்கள் மத்தியிலும் நேரம் செல்லச் செல்ல பலவாறாகக் கதைகள் பரவிக் கொண்டிருந்தன.

அந்தப் பகுதியில் முகாம்களிலிருந்த பல போராளிகள் அந்த இடத்தை விட்டு வாகனங்களோடு வீதியில் அதிகாலையில் நின்றிருந்தனர். அக்கிராமத்திலுள்ள பெற்றோர்கள் பாடசாலைக்குத் தமது பிள்ளைகளை அனுப்பாது பதுங்கு குழிகளுக்குள் பாதுகாத்துத் தக்க வைத்தனர். இதேவேளை செஞ்சோலை வளாகத்திலும் பயிற்சி நெறிகளுக்காக உற்சாகத்துடன் மாணவர்கள் திளைத்து நின்றனர். பல பாடசாலை மாணவ மாணவியர்கள் ஒன்றுகூடிய இடமல்லவா? பலவிடயங்களை அறிந்துகொள்ளக்கூடியவாறும் அறிமுகத்தை ஏற்படுத்துகின்ற சம்பவங்களும் மாணவர்கள் மத்தியில் குதூகலத்தை ஏற்படுத்தியிருந்தது.

### மனிதாபிமானமற்ற அரக்கத்தனம்

இந்த வேளையில் காலை 7 மணிக்கு ஒலிபரப்பாகின்ற புலிகளின் வானொலியில் போர் சூழ்நிலை சம்பந்தமான செய்திகள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன. மாணவர்களில் பலர் அந்தச் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தனர். வன்னியில் போரை அரசு பிரகடனப்படுத்தியிருந்தமையினால் முக்கிய பல பாதைகள் மூடப்பட்டிருந்தன. எறிகணைத் தாக்குதல்கள், ஆழ ஊடுருவும் படையினரின் கிளைமோர்த் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள் என பல முனைகளில் இருந்து தாக்குதல்கள் இரவு பகலாக இடம் பெறுவது வழமையாக இருந்தன. தினமும் பலர் கொல்லப்படுகின்ற செய்தியை வன்னி மக்கள் அறிந்து கொண்டுமிருந்தனர். அதே போல் மாணவர்களும் புலிகளின் குரல் வானொலிச் செய்தியை கேட்பதும் தவிர்க்க முடியாதிருந்தது. காலை 7மணியைத் தாண்டியது. இந்த வேளையில் கிபீர் விமானம் ஒன்று இரைச்சலோடு வந்ததுடன் செஞ்சோலை வளாகத்தை நோக்கி மாணவர்கள் சிறிதும் எதிர்பாராத வேளையில் முதலில் ஒரு குண்டை வீசியது. மாணவர்கள் திகைத்து நிற்கும் வேளையில் அடுத்தடுத்து மேலும் இரண்டு குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டதால் மாணவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினர். எங்கும் புகைமண்டலம் எவரையும் அடையாளம் காண முடியாதவாறு செஞ்சோலை வளாகம் அல்லோலகல்லோலப்பட்டது.

அந்த வேளையில் பேரிரைச்சலோடு வட்டமிட்டு நான்கு கிபிர் விமானங்கள் வளாகத்தை நோக்கி குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டு 62 மாணவச்சிறுமிகளின் உயிர்களை ஈவு இரக்கமின்றிக் காவு கொண்டன.

62 மாணவிகளில் பலரின் உடலங்கங்கள் அந்தப் பகுதியில் சிதறிக்கிடந்தன. 155 மாணவிகள் படுகாயமடைந்திருந்தனர். இதில் பல மாணவிகள் கைகளையும், கால்களையும் இழந்திருந்தனர். குருதி வெள்ளத்தில் மிதந்து படுகாயப்பட்ட மாணவிகள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். காயமடைந்து, உயிரிழந்த மாணவிகளைத் தவிர ஏனைய மாணவிகள் யாவரும் தவழ்ந்தும், ஊர்ந்தும் செஞ்சோலை வளாகத்து வேலியைத் தாண்டிச் சென்றதனால் அவர்களால் உயிர்தப்ப முடிந்தது.

காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, தர்மபுரம் போன்ற வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மாணவியரின் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் நிலை குறித்து அறிந்துகொள்ள செஞ்சோலை வளாகத்தை நோக்கி வந்ததும், குருதி வெள்ளத்துக்குள் கிடந்த மாணவியரின் சடலங்களைக் கண்டு கதறி அழுதனர். புதுக்குடியிருப்புப் பிரதேசம் முழுவதும் சோகமயமாகியது. 62 சிறுவர் போராளிகளையும் அவர்கள் தங்கியிருந்து பயிற்சி பெற்ற முகாமையும் நிர்மூலமாக்கிவிட்டோமென அரசுப்படைகள் தென்னிலங்கையில் பரப்புரைகளைச் செய்து கொண்டிருந்தன.

செஞ்சோலை வளாகத்தில் அப்பாவி மாணவிகளைக் கொன்றது மாத்திரமல்லாமல் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திலுள்ள சிறுவர் போராளிகளெனக்கூறி வெளியுலகுக்கு உண்மையை மூடி மறைக்க மகிந்த அரசு கடும் பிரயத்தனங்களை எடுத்திருந்தது.

மகிந்த ஆட்சியின்போது அமைச்சராக இருந்தவரும், பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக பேசவல்லவருமான கெஹலிய ரம்புக்வெலவின் கூற்றானது கொல்லப்பட்டவர்கள் சிறுவயதுப் போராளிகளே. அரசுக்கெதிராக செயற்படுகின்ற எவராயினும் அதாவது வயது, பால் வேறுபாடின்றிக் கொல்வோம் என்று கூறிய விடயங்கள் தமிழ் மக்களின் மனநிலையைக் கடுமையாகப் பாதித்திருந்தது. செஞ்சோலை வளாகத்துக்கும், வைத்தியசாலைக்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு விசாரணைகளை நடத்திய போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும், யுனிசெப் நிறுவனமும் கொல்லப்பட்டவர்கள் ஒன்றுமறிந்திராத அப்பாவி மாணவிகளே என்பதனை உறுதிப்படுத்தியிருந்தது. அப்படியிருந்தும் மகிந்த அரசு உண்மையை ஜீரணிக்காமல் மறுத்து வந்திருந்தது.

விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம் ஒன்றின் மீது அரச போர் விமானங்கள் நடத்திய வெற்றிகரத் தாக்குதலில் தளம் முற்றாக நிர்மூலம் என அரச படைகள் திரும்பத் திரும்ப அறிவித்துக் கொண்டிருந்தன.

செஞ்சோலை வளாகம் என்பது குழந்தைகளைப் பராமரிக்கும் இடம் என்று மகிந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். தாக்குதல் நடத்த வள்ளிபுனம் பகுதிக்குள் ஐக்கிய நாடுகள் சபையின் பல அலுவலகங்கள் இருந்தன. அப்படியிருக்கையில் புலிகள் பயிற்சி முகாம் அந்த இடத்தில் எப்படியிருக்க முடியும்? திட்டமிட்டே மாணவச்சிறுமிகள் மீது இந்தக் கொடூரத்தை மகிந்த அரசு நடத்தி முடிந்திருந்தது. தங்களது பள்ளிக்கூட வாழ்விலும், பல்வேறு சுற்றுலாக்களுக்குச் செல்லக் கூடியவாறு செஞ்சோலை மாணவிகளுக்கு அப்போதைய காலம் அமைந்திருக்கவில்லை. போர்க்காலத்தில் தாங்கள் பிறந்த இடமே உலகமாகத் தெரிந்தது. அப்படியிருந்தும் மாணவிகளுக்கு அறிவுபூர்வமான பலதரப்பட்ட கல்விக்கேற்ற விடயங்களைக் கற்கக் கூடியதாவும் அறியக்கூடியதாகவுமிருந்தது.

இரண்டாவது ஈழப்போரில் பிறந்தவர்களான 62 மாணவிகள் நான்காவது ஈழப்போரில் மகிந்த ஆட்சியின் அசுரப் படைகளால் துவம்சம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மனிதநேயமற்ற கொடூரமான நிகழ்வு நடைபெற்று இன்றுடன் பத்து ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்த நாளில் செஞ்சோலை வளாகத்தில் இடம்பெற்ற 62 மாணவிகளின் படுகொலைகளை நினைக்கின்றபோது இன்றும் வள்ளிபுனம் மக்களின் கண்களில் கண்ணீர் குளமாகின்றது.

செஞ்சோலை வளாகத்தில் 14/08/2006 அன்று மகிந்த அரசினால் மேற்கொள்ளப்பட்ட 62 மாணவியர்கள் மீதான படுகொலைகளை யார் செய்தனர் என்பதை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் யுனிசெப் நிறுவனமும் அப்போதைய போர்ச்சூழலில் நேரடியாகக் கண்ட சாட்சிகளாவர். மற்றும் ஏராளமான பொதுமக்கள்இறந்த மாணவியரின் உறவுகளும் இன்றும் உள்ளனர். இதற்கான விசாரணையை மைத்திரி அரசு மேற்கொள்ள வேண்டும். உண்மை வெளிவர வேண்டும். நீதி கிடைக்க வேண்டும்? காலம் முன்வருமா? இன்றைய சூழ்நிலையில் சாத்தியமாகுமா? யார் முன்வருவர்...?

## சமூகநலன் விரும்பிகள் உருவாக உதவுமா உதயன்?

தினமும் வெளியாகும் பத்திரிகைச் செய்திகளில்–உதயன் உட்பட பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து அல்லது அநாமதேயத் தொலைபேசித் தகவலை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட திடீர்ச் சுற்றிவளைப்பில் கசிப்புக்குகை பிடிபட்டது; பொலிஸாரது அதிரடி வேட்டையில் மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டது; மணல் களவாக ஏற்றி வந்த பாரவூர்தி மடக்கப்பட்டது ; பஸ்ஸில் கடத்தி வரப்பட்ட போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது; , பொலிஸார் வருவதை அறிந்த கொள்ளையர் தப்பி ஓட்டம் எனப் பல்வேறு செய்திகள் வெளிவருகின்றன.

இப்படியான சமூக விரோதச் செயற்பாடுகள் இடம்பெறும் போதெல்லாம் அவை பற்றி அறிந்து கொண்ட, தெரிந்து கொண்ட பொதுமக்கள், குறித்த குற்றச் செயல்கள் தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டிய அவசர தொலைபேசி இலக்கங்களைப் பெரும்பாலான பொதுமக்கள் அறிந்திருப்பதில்லை.

இவற்றைச் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பெற்று உதயன் பிரசுரிக்க வேண்டும். சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதான இந்தச் செயற்பாட்டை இடைக்கிடையாவது பிரசுரிப்பதனால் சமூகவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு உதயன் தனது பங்கினைச் செலுத்துவதாகவும் அமையும். இவ்வாறு வெளியிடப்படும் தொலைபேசி இலக்கங்களை பொதுமக்கள் பயன்படுத்தி சமூகப்பாதுகாப்புக்கு உதவுகிறார்களோ, பொலிஸார் இவ்வாறு வரும் பொதுமக்களின் தகவல்கள் தொடர்பில் துரித நடவடிக்கையில் ஈடுபடுகிறார்களோ என்பது வேறுவிடயம்.

நூற்றுக்கு 50 வீதமானோர் இவற்றைப்பயன்படுத்தினாலே அது சமூக அமைதியை, பாதுகாப்பை ஏற்படுத்துவதிலும் இதன் மூலம் சமூகவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதிலும் தமது பங்களிப்பை வழங்க முடியும். மக்கள் விழிப்பாய் இருக்கிறார்கள், உடன் தகவல்கள் கொடுப்பார்கள் எனும் பயப்பிராந்தியையும் சமூக விரோதிகளிடையே ஏற்படுத்திவிடலாம்.

எனவே எமது பிரதேசங்களில் உள்ள சகல பொலிஸ் நிலையங்கள், மதுவரித் திணைக்களம் ஆகியனவற்றின் அவசரத் தகவல் வழங்கும் தொலைபேசி இலக்கங்களையும் பொதுமக்கள் அறிந்திருக்கும் விதமாக தங்கள் உதயனில் பிரசுரித்துதவுமாறு வேண்டுகின்றேன்.

குறிப்பாக சந்திகளில் , வெற்றுக்காணிகளில், மறைவிடங்களில் கூடி மது அருந்துவோர், கல்விச்சாலைகளுக்குச் செல்லும் மாணவிகளுடன் சேட்டை விடுபவர்கள், விபத்தை ஏற்படுத்திவிட்டுத் தப்பி ஓடுபவர்கள், தங்க நகை களை அறுத்துக் கொண்டு ஓடுவோர், திருட்டு மின்சாரம் பெறுவோர், களவாகச் சாராயம் விற்போர், போதைப் பாக்கு விற்போர், ஆயுதங்களுடன் நடமாடுவோர், களவாக மாடு வெட்டுவோர் மற்றும் சமூக விரோதச் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை வழங்கவேண்டிய தொலைபேசி இலக்கங்களை அவசியம் பிரசுரியுங்கள்.

தன்நலம்விடுத்து சமூகப் பற்றும் சமூகப் பொறுப்பும் மிக்கவர்களாக எம்மவர்களை உருவாக்க இம்முயற்சி உதவலாம் என்பதை உண்மையான சமூக நலன்விரும்பிகள் ஆமோதிக்கவே செய்வர் என நம்புகிறேன்.

வே.வைரவதாசன்
வண்ணார்பண்ணை

## உரியவர்கள் கவனம் எடுப்பார்களா?

கற்சிலைமடுவிலிருந்து பேராறு மற்றும் பண் டாரவன்னி கிராமங்கள் ஊடாக செல்லும் வீதியில் உள்ள பாலத்தின் திருத்த வேலைக்கான மணல் மற்றும் கல் என்பவை வீதியின் குறுக்கே பறிக்கப் பட்டு ஒரு மாத காலமாகியும் பாலத்தின் புனரமைப்பு வேலைகள் செய்யப்படவும் இல்லை, மணல் கல் என்பன அகற்றப்படவும் இல்லை. இதனால்போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ளது.

மழைவெள்ளம்ஏற்பட்டதைத்தொடர்ந்து பாலம் உடைந்தும் வீதிகள் சேதமாகியும் போக்குவரத்திற்கு மிக வும் இடையூறாக இருந்த நிலையில் இடர் முகாமைத்துவப்பிரிவினரால் பாலத்தின் திருத்த வேலைக்கென கல் மணல் என்பன வீதியின் குறுக்காக பறிக்கப் பட்ட நிலை ஒரு மாதகால மாகத் தொடர்கின்றது. பாலத்தைப் புனரமைக்க வேண்டும். இல்லையேல் இடையூறாக உள்ள கல் மணலை அகற்ற வேண்டும். சம்பந்தப்பட்டவர் கள் இதில் கவனம் எடுப்பார்களா?

கிராம மக்கள்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு ீஎண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் தொடர் வரலாற்றில் அமெ. 1000 தங்கப் பதக்கம்

ஒலிம்பிக் தொடர் வரலாற்றில் அமெரிக்கா தனது ஆயிரமாவது தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தது.
ஒலிம்பிக் தொடரில் அமெரிக்கா காலாகாலமாகப் பெரும் ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறது. ரியோ ஒலிம்பிக் தொடரிலும் அமெரிக்காவின் ஆதிக்கம் நீண்டு செல்கிறது. நேற்று நடைபெற்ற 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் நீச்சலில் அமெரிக்காவின் பெண்கள் அணி தங்கம் வென்றது. இந்தப் பதக்கத்துடன் அமெரிக்கா ஒலிம்பிக் வரலாற்றில் தனது 1000ஆவது தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது. (ம-ரி4)



பெல்ப்ஸ்

# ஒலிம்பிக் சம்பியனாவதில் உலகச் சம்பியன் தீவிரம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான கால்பந்தாட்டக் காலிறுதிகளில் ஜேர்மன், நைஜீரியா, ஹொண்டூரஸ், பிரேஸில் ஆகிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. இவற்றில் ஜேர்மனியின் வெற்றி ஆகச் சிறந்த வெற்றியாகப் பதிவானது.
ஜேர்மனி தனது காலிறுதியில் போர்த்துக்கலை எதிர்த்து மோதியது. முதல் பாதி 2:0 என்ற ஜேர்மனின் ஆதிக்கத்துடன் முடிவு கண்டது. இரண்டாம் பாதியிலும் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தது ஜேர்மனி. மேலும் இரு கோல்கள் அந்த அணியின் சார்பாகப் பதிவாகின. ஜேர்மனி முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கலை வீழ்த்தியது.
ஏனைய காலிறுதிகளில் நைஜீரியா, டென்மார்க்கை 2:0 என்ற கோல் கணக்கிலும், ஹொண்டூரஸ், தென்கொரியாவை 1:0 என்ற கோல் கணக்கிலும், பிரேசில், கொலம்பியாவை 2:0 என்ற கோல் கணக்கிலும் வீழ்த்தின. (ம-ரி4)



# பெல்ப்ஸை வீழ்த்திய ஸ்கூலிங்குக்கு 11 

## பன்னாட்டு தடகளப் பயிற்சிச் சம்மேளனம்

சிங்கப்பூர் நீச்சல் வீரரான ஜோசப் ஸ்கூலிங், உலகச் சம்பியன் பெல்ப்ஸை வீழ்த்தித் தங்கப் பதக்கம் வென்றமையை அடுத்து பன்னாட்டுத் தடகள வீரர்களுக்குப் பயிற்சி வழங்கும் சம்மேளனம் இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 11 கோடி ரூபாவைப் பரிசாக அறிவித்தது.
ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் பட்டர்பிளைய் நீச்சலில் உலக நீச்சல் ஜாம்பவானான பெல்ப்ஸை வீழ்த்தி சிங்கப்பூர் வீரர் ஜோசப் ஸ்கூலிங் தங்கம் வென்றார். பெல்ப்ஸை வீழ்த்துவதென்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. நடப்பு வருடத்துடன் சேர்த்து அவர் 23 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார். தனிநபர் போட்டியில் 13 பதக்கங்களை வென்றுள்ளார். இந்த நிலையில் ஸ்கூலிங், பெல்ப்ஸை வீழ்த்தியமை பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றது.
பன்னாட்டு சம்மேளனங்கள் பல அவருக்குத் தமது வாழ்த்துக்களைத்



தெரிவி
றன.
யிலே
தடகள
மேள
கான
யாக
அறிவி
பெல்ப்
ஜாம்ப
வீழ்த்து
மில்லி
டொல
ரான
தனது
இதைச்
எனவே
பரிசுத்
அறிவி
ஆனா
னைப் பணமாகப்

# தங்கத்தைத் தவறவிட்டார் ரபேல் நடால்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ரென்னிஸ் அரையிறுதி ஆட்டத்தில் ஸ்பெய்னின் நடாலை வீழ்த்தி தங்கத்துக்கான மோதலில் பிரிட்டனின் முர்ரேயுடன் இணைந்தார் ஆர்ஜென்ரீனாவின் மாட்டீன் பொட்ரோ.
இந்த ஆட்டத்தில் வெற்றி பெறுபவர் தங்கப் பதக்கத்துக்கான போட்டியில் இணைவார் என்ற காரணத்தால் ஆட்டம் ஆரம்பம் முதல் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பொட்ரோ. இரண்டாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில்


நடாலை வீழ்த்திய தருணத்தில் மாட்டீன்

கைப்பற்றிப் பதிலடி கொடுத்தார் ரபேல் நடால். மூன்றாவதும் இறுதியானதுமான செற்றில் வெற்றி பெறுபவரே தங்கப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் இணையும் நிலை ஏற்பட்டது. அந்த செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய மாட்டீன் பொட்ரோ முடிவில் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுத் தங்கப் பதக்கத்துக்கான ஆட்டத்துக்கு முன்னேறினார்.
வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் நடாலை எதிர்த்து ஜப்பானின் நிசி கோரி மோதவுள்ளார். (ம)

# சீனாவிலு

சீனாவின் நீச்சல்
ஒருவர் தடைசெய்
மருந்தை உபயோ
விக்கப்பட்டுச்சர்ச்சை
கடந்த வியாழக்கிழ
குருதி மாதிரிச்
சீனாவின் நீச்சல்
சென் சின்யி எ
மருந்தை உபயோ
றியப்பட்டது. அ
நேற்றுமுன்தினம்
நீச்சல் போட்டிக
கொண்டார். அவ
கம் செய்யாதமை
களின் ஒலிம்பிக் ச
கொதித்தெழுந்தன
களையடுத்து குறி
யின் இரண்டாம் க
எடுக்கவில்லை எ
விளையாட்டுக்கள
வாய்ப்புள்ளதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஸ்கூலிங்

# யமைக்காக
# கோடி பரிசு
## எம் அறிவிப்பு

தெரிவித்து வருகின்றன. இந்த நிலையிலேயே பன்னாட்டுத் தடகளப் பயிற்சிச் சம்மேளனம் அவருக்கான ... த் தொகையாக 11 கோடியை அறிவித்தது.
பெல்ப்ஸ் ஓர் உலக ஜாம்பவான். அவரை வீழ்த்துவதென்பது ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு நிகரானது. ஸ்கூலிங் தனது 21 வயதில் இதைச் சாதித்துள்ளார். எனவேதான் இந்தப் பரிசுத் தொகையை அறிவித்துள்ளோம். ஆனால் அவர் இத ாகப் பெறமுடியாது. இந்தத் தொகைக்குரிய சலுகைகளையே பெறமுடியும். அதாவது, அவருக்கான பயிற்சியாளர், உணவுகள், பயணச் செலவுகள், ஆடம்பர விடுதிச் செலவுகள் போன்றவற்றுக்கு பன்னாட்டுத் தடகளப் பயிற்சிச் சம்மேளனம் பொறுப்பேற்றுக் கொள்ளும் என அந்தச் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
பெல்ப்ஸ் நீச்சல் ஜாம்பவானாக உருவெடுத்த போது அவரது கடைக்கண் பார்வைக்காக ஏங்கிய பல நீச்சல் சிறார்களில் நானும் ஒருவன் என ஸ்கூலிங் தெரிவித்துள்ளார். மட்டுமல்லாமல் பெல்ப்ஸுடன் தனது 13 ஆவது வயதில் எடுத்துக்கொண்ட புகைப்படமொன்றையும் பதிவிட்டுள்ளார். இந்தப் படமும் சமூக வலைத்தளங்களில் தற்போது விரைவாகப் பரவி வருகிறது. (ம-ரி4)

# ஜமைக்காவுக்கு தங்கப் பதக்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்கா தங்கப் பதக்கம் வென்றது.
ஜமைக்காவின் சார்பாகக் களமிறங்கிய, எலைன் தொம்சன் 10 செக்கன்கள் 71 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தைக் கைப்பற்றினார். 10 செக்கன்கள் 83 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்த அமெரிக்காவின் றோஜர் பௌவி வெள்ளிப் பதக்கத்தையும், ஜமைக்காவின் பிறிதொரு வீராங்கனை 10 செக்கன்கள் 86 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையம் கைப்பற்றினர்.
(ம-ரி4)




# இந்தியாவை ஊதித்தள்ளி காலிறுதியில் ஆர்ஜென்ரீனா



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான ஹொக்கி ஆட்டங்களில் இந்தியாவை இலகுவாக வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது ஆர்ஜென்ரீனா.
ஆட்டம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஆர்ஜென்ரீனா 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது. இந்தத் தோல்வியின் மூலம் பெண்கள் பிரிவு ஹொக்கியில் பதக்கம் வெல்லும் என்ற இந்தியாவின் கனவு முடிவுக்கு வந்தது. இன்று நடைபெறவுள்ள காலிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவை எதிர்த்து ஜேர்மனியும், நியூசிலாந்தை எதிர்த்து ஆஸ்திரேலியாவும் மோதவுள்ளன. நாளை நடைபெறவுள்ள காலிறுதிகளில் நெதர்லாந்தை எதிர்த்து ஆர்ஜென்ரீனாவும், பிரிட்டனை எதிர்த்து ஸ்பெய்னும் மோதவுள்ளன. (ம-ரி4)

# விலும் ஊக்கமருந்து உபயோகம்?



நீச்சல் வீராங்கனை டைசெய்யப்பட்ட ஊக்க பயோகித்ததாகத் தெரி சர்ச்சை கிளம்பியுள்ளது. ழக்கிழமை இடம்பெற்ற திரிச் சோதனையில் நீச்சல் வீராங்கனை யி என்பவர் ஊக்க பயோகித்தமை கண்டது. ஆனால் அவர் தினம் நடைபெற்ற சில போட்டிகளில் கலந்து . அவரைத் தகுதி நீக் ாதமைக்கு பல நாடு ம்பிக் சம்மேளனங்கள் ழுந்தன. இந்தச் சச்சரவு து குறித்த வீராங்கனை டாம் கட்டப் பரிசோதனையில் அவர் தடை செய்யப்பட்ட மருந்தை லை என்று வெளிப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பன்னாட்டு ட்டுக்களின் தீர்ப்பாயத்துக்கு விடயம் எடுத்துச் செல்லப்படவும் ாதாக அறியப்படுகிறது. (ம-ரி4)

# தனது சாதனையைத் தானே தகர்த்தார் ஈரானின் பளுதூக்கும் வீரர் ரோஸ்ராமி



ரியோ ஒலிம்பிக் தொடரில், ஈரானின் பளுதூக்கும் வீரர் கியன்னோ ரோஸ்ராமி தனது உலகச் சாதனையைத்தானே தகர்த்தெறிந்து புதிய சாதனையை நிலைநாட்டினார். நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் கியன்னோ ரோஸ்ராமி ஒட்டுமொத்தமாக 396 கிலோ பளுவைத் தூக்கி உலக சாதனையுடன் தங்கத்தைக் கைப்பற்றினார். 2012 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் இவர் 395 கிலோ பளு தூக்கியமையே இதுவரை உலக சாதனையாக இருந்தது. தற்போது அவர் தனது சாதனையை தானே முறியடித்தார். கியன்னோ றொஸ்ராமிக்குபயிற்சியாளர்கள்வரும்இல்லை. அவர், தனது பயிற்சிகளைத் தானே மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

குருப் பெயர்ச்சி, ஒகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை சவுடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

## கன்னி

### உத்தரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதங்கள் வரை



அக்கா, தங்கை, அண்ணன், தம்பி என்ற உறவில் விரிசல் ஏற்படலாம். சிக்கனத்தைக் கடைப்பிடித்துச் செலவுகளைச் சமாளிக்க நேரிடும். உங்கள் ராசிக்கு 4,7க்கு அதிபதியானவர் குரு. அவர் இப்பொழுது உங்கள் இல்லம் தேடி வந்து பலன் தரப் போகிறார். அவரை வீட்டிற்கு வரும் விருந்தினர் போல, வரவேற்க வேண்டியது அவசியமாகும். வண்ண மலர் மாலை சூட்டினால் எண்ணமெல்லாம் நிறைவேறும். குரு கவசம் பாடினால் குழப்பங்கள் தீரும். மங்கல நிகழ்ச்சிகளுக்கு அத்திபாரம் அமைத்துக் கொடுப்பவர் குருதான். எனவே தங்கு தடைகள் அகலவும், தனவரவு தழைக்கவும் குருவை வழிபடுங்கள்.

சுகாதிபதியாக குரு விளங்குவதால் மாற்று மருத்துவத்தை மேற்கொண்டு, உடல் நலத்தைச் சீராக்கிக் கொள்வீர்கள். கூட்டாளிகளால் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். தாய்வழியில் ஏற்பட்ட விரோதங்கள் விலகும். சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். புத்திர பாக்கியம் கிடைக்கும். தொழில் வளர்ச்சி கூடும். உத்தியோகத்தில் நீண்ட நாள்களாக மறுக்கப்பட்டு வந்த பதவி உயர்வு வந்து சேரலாம். ஒரு சிலர் விருப்ப ஓய்வில் வெளிவந்து, புதிய தொழில் தொடங்க முயற்சிப்பர். வாகன மாற்றம் செய்ய வேண்டிய நேரமிது. புதிய வாகனங்களை வாங்கவும், புதிய தொழிலை விரிவு செய்யவும் எதிர்பார்க்கும் இடத்திலிருந்து சலுகைகள் கிடைக்கும்.

**குரு பார்வை கொடுக்கும் பலன்கள்!**

நவக்கிரகங்களில் சுப கிரகமாக விளங்கும் குரு ஜென்மத்தில் அடியெடுத்து வைக்கும் பொழுது, அதன் பார்வை 5,7,9 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகிறது. அந்த இடத்திற்குரிய ஆதிபத்யங்கள் எல்லாம் இனித் துரிதமாக நடைபெறப் போகின்றன.

புத்திர ஸ்தானம், பூர்வ புண்ணிய ஸ்தானம், களத்திர ஸ்தானம், பிதுர்ரார்ஜித ஸ்தானம், பயண ஸ்தானங்கள் புனிதமடைவதால் அந்த இடங்களுக்குரிய ஆதிபத்யங்களில் இருந்த தடைகள் எல்லாம் விலகி ஓடும். தக்கபலன் உங்களுக்கு கிடைக்கும். ஆரோக்கியப் பாதிப்புக்கள் அகலும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும். இல்லறம் இனிதாக அமையும். பிரிந்த தம்பதியர்கள் இணையக்கூடிய சூழ்நிலை உண்டு. எதிர்பாராத தனலாபம் வந்து இதயத்தை மகிழ்விக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். குழந்தைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

குரு, பகவான் சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை): விரயங்கள் அதிகரிக்கும். எதையும் ஒருமுறைக்கு இருமுறை செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம். பணிகள் பாதியிலேயே நிற்கலாம். மனப்போராட்டம் அதிகரிக்கும். மறைமுகப் பகையும் உண்டாகும் என்பதால், கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை.

குரு, சந்திர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை): எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும். வெளிநாட்டு பயணம் அனுகூலம் தருவதாக அமையும். புனித யாத்திரை மேற்கொள்வீர்கள். புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு புதிய பாதை கிடைக்க வழிவகுத்துக் கொடுப்பர்.

*(தொடரும்)*

மருத்துவர்
சி. யமுனானந்தா

# உயிரிகளில் குவாண்டம் பௌதீகத் தாக்கங்களை ஆராய்தல்

உயிர் அங்கிகளின் குவாண்டம் பௌதீகம் (Quantum Physics) பற்றிய செல்வாக்கை ஆராய்தல் எதிர்கால மானிட குல முன்னேற்றத்துக்கு இன்றியமையாததாகும். பல உயிர்களில் குவாண்டம் பௌதீகப் பொறிமுறைகள் அவதானிக்கப்பட்டு உள்ளன. அவற்றுள் முக்கியமானவை.

1. ஒளித்தொகுப்பு–ஒளிக்கற்றைகள் அதாவது போட்டோன்கள், இலைகளில் பச்சையத்தினுள் இலத்திரன்களுடன் மோதுகின்றன. இதன் மூலமே ஒளித்தொகுப்பு நடைபெறுகின்றது. ஒளித்தொகுப்பு அடிப்படையில் குவாண்டம் பௌதீகப் பொறிமுறையே ஆகும்.
2. வலசைப் பறவைகளின் புலப்பெயர்வுக்கும் குவாண்டம் பௌதீகப் பொறிமுறையே விளக்கத்தை அளிக்கின்றது.
3. எமது உடலின் உடற்றொழிலியல் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பது மூளையில் உள்ள பரிவகக் கீழ்ப் பரிவகம் (Hypothalamus) ஆகும். இதன் செயற்பாடு ஒருங்கிணைந்து ஓர் உயிரியல் கடிகாரமாக (Biological clock) நடைபெறுவதற்குக் காரணம் குவாண்டம் பௌதீகப் பொறிமுறையே ஆகும்.
4. குவாண்டம் குணப்படுத்தல் (Quantum Healing) முறை ஒலி அலைகளைப் பயன்படுத்தி உடலையும், மனதையும் கட்டுப்படுத்தும் செயன்முறையில் குவாண்டம் பௌதீகப் பொறிமுறை காணப்படுகின்றது.
5. எமது நினைவாற்றலும், விழிப்புணர்வும் குவாண்டம் பௌதீகப் பொறிமுறைக்கு உட்பட்டது.
6. விந்து, சூலுடன் இணையும் போது ஒளிக்கற்றைகள் வெளிப்படுவதும் குவாண்டம் பௌதீகப் பொறிமுறையை உயிரியல் விளக்குகின்றது.

குவாண்டம் இயல்பு (Quantum superposition) குவாண்டம் உயர்நிலை என்பது பல இடங்களில் ஒரே நேரத்தில் செயற்படுவது. அணுக்களில் சோடியாக இலத்திரன்கள் காணப்படும். தனித்துக் காணப்படும் இலத்திரன் போட்டோன்களில் (ஒளி அலைகளின்) தாக்கத்தினால் துரித நிலையில் செயற்படும். ஒளித்தொகுப்பின் போது பச்சையங்களில் இந்த இயல்பு அவதானிக்கப் பட்டுள்ளது. எனவே அணுப்பிளவு, அணுச்சக்தி, உற்பத்தியின்போது சூழலில் ஏற்படும் கதிரிவீச்சுக்கள் அணுக்களின் சோடியற்றுக் காணப்படும். இலத்திரன்களில் தாக்கத்தைச் செலுத்தி வெவ்வேறு கோணவேகத்தில் அவற்றை அதிரச் செய்யும். இது சாதாரண ஒளித்தொகுப்பின் குவாண்டம் பௌதீகப் பொறிமுறையைப் பாதிக்கும். ஒளித்தொகுப்புப் பாதிக்கப்படல் பூமி வெப்பமடைய ஏதுவாக அமையும்.

அதாவது உலக காலநிலை மாற்றத்துக்கு அணுசக்தியின் கதிர்வீச்சினால் ஏற்படுன்ற பாதகமான குவாண்டம் இயல்பு, ஒளித்தொகுப்பைப் பாதிப்பதுவும் ஒரு பிரதான காரணமாக அமையும். ஒளித்தொகுப்பில் குறிப்பாக கடலில் பிளாங்டன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை அணுக்கதிர் வீச்சால் அழிவடையும் அபாயம் உள்ளது. கடலில் மீன்வளம் குன்றவும் அணுக்கதிர்களின் குவாண்டம் உயிரியல் தாக்கம் ஏதுவாக அமையும். இது பற்றிய விழிப்பு மிகவும் இன்றியமையாததாகும். அடுத்து பூகோள வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த அணுக்கருப் பிளவுகள், அணுமின்சக்தி உற்பத்தி என்பன கட்டுப்படுத்தப்படல் மிகவும் முக்கியமானது.


வலசைப் பறவைகளின் புலம் பெயர் பறத்தலுக்கும் குவாண்டம் இயல்பு ஏதுவாக அமையலாம். அணுக்களின் சோடியற்றுக் காணப்படும் இலத்திரன்கள் காந்தப்புலன்களால் பாதிக்கப்படும். புலம் பெயர் பறவைகளின் கண்கள் குறித்த திசையில் பார்க்கும்போது புவிக்காந்தப்புலன்கள் பறவையின் பார்வைப் புலத்தில் உள்ள சுயாதீன மூலகங்களில் இலத்திரன்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் தொடர்ச்சியான இரசாயனத் தாக்கங்கள் ஏற்பட்டு நரம்புக் கணத்தாக்கங்கள் கடத்தப்படும். இது அந்தப் பறவை குறித்த திசையை நோக்கும்போது தொடர்ந்து நடைபெறும். இது, குவாண்டம் திசைகாட்டிப் பொறிமுறை வலசைப் பறவைகளில் செயற்படுவதை உய்த்தறிய உதவும். (Quantum Compass in Migrating birds)

Turin எனும் கிறீஸ் ஆய்வாளர் மணநுகர்ச்சியில் குவாண்டம் பௌதீகப் பொறிமுறையை விளக்கப்படுத்தினார். இதில் [illegible] Quantum tunneling நிகழ்வதை எடுத்துக் காட்டினார். இவ்வாறே, மனித உடலின் உடற்றொழிலியல் செயற்பாட்டில் உயிரியல் கடிகாரத்தின் செயற்பாடும் (Biological Clock) குவாண்டம் இயல்பை அடிப்படையாகக் கொண்டது. அடுத்து மூளையின் நுண்ணறிவுச் செயற்றிறனும் குவாண்டம் இயல்பின் அடிப்படையைக் கொண்டது.

குவாண்டம் குணப்படுத்தல் (Quantum Healing) என்பது ஒலி அதிர்வுகளை அடிப்படையாகக் கொண்ட உடல், உள, ஆன்மிக ஆற்றுப்படுத்தல் ஆகும். இது மனிதரின் மூளை, முண்ணான் அடங்கிய மையநரம்புத் தொகுதியில் வெவ்வேறு நிலைகளில் செயற்படுத்தப்படுகின்றது.

உயிரின் உற்பவமான விந்து சூலுடன் இணையும் கணத்தில் ஒளிக்கற்றைகளின் தோற்றுவாய் மிகவும் அண்மையில் அமெரிக்க விஞ்ஞானிகளால் அவதானிக்கப்பட்டுள்ளது. இது உயிரின் பரிமாணத்தில் குவாண்டம் இயல்பின் தாக்கத்தை வெளிப்படுத்தி உள்ளது.

எனவே உயிரியல் விஞ்ஞானம், குவாண்டம் பௌதீகம் இணைந்த துறையின் ஆராய்ச்சிகள் இந்த நூற்றாண்டின் விஞ்ஞான முன்னேற்றத்துக்கு அடிப்படையாக அமையும். இதனை எமது இளம் சந்ததியினர் கருத்திற் கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரும்புப் பெண்மணியான இரோம் ஷர்மிளா

மகான்கள், சத்தியாக்கிரகிகள் போன்றோரின் நற்செயல்களைக் காலப்போக்கில் உறையச்செய்து, அவர்களைச் சிலையாக்கி ஒரு பீடத்தில் வைப்பதுதான் எமது வழக்கம். உறை படிவத்தில் படிந்ததைப் போன்ற ஒரு தன்மையை அவர்களின் நற்செயல்கள் பெற்றுவிடுகின்றன. உயிருள்ள ஒரு ஜீவனாக இருப்பதற்குப் பதிலாக மகான்களும் திருவுருக்களும் விளம்பரப் பதாகையாகவும் அற்புதக் காட்சியாகவும் அல்லது திரும்பத் திரும்பக் காட்டப்படும் மேற்கோளாகவும் ஆகிவிடுகிறார்கள். நாட்காட்டியில் இடம்பெறும் புகைப்படத் தொகுப்புகளாகவோ, அசையாமல் நிற்கும் சிலைகளாகவோ ஆகிவிடுகின்றன புனிதத்தன்மையும் வீரச் செயலும்: நற்பண்பு என்பது காலத்தின் வார்ப்பெழுத்துகளாகிவிடுகின்றன.

தொடர்ந்து படைப்பூக்கத்துடன் செயற்பட்டு, மேற்கண்டதுபோல் உறைந்துவிடாமல் இருப்பதற்குப் போராடியவர்கள் இரண்டு பேரை நாம் உதாரணம் காட்ட முடியும். ஒருவர் காந்தி. அவரைப் பொறுத்தவரை ஒவ்வொரு உணவு தவிர்ப்புப் போராட்டமும், ஒவ்வொரு எதிர்ப்புச் செயலும் சுயவிமர்சனத்தை உள்ளடக்கியதே. வன்முறைகள் தலைதூக்குவதாக உணர்ந்தால் காந்தி பெரும்பாலும் தனது சத்தியாகிரகச் செயற்பாட்டை நிறுத்திக்கொள்வார். தனது எதிர்ப்புச் செயற்பாடுகள் அவர் நினைத்த விதத்தில் செயற்படவில்லை என்றால் தனது பிரம்மச் சரிய வாழ்க்கையையே அவர் ஆய்வுக்கு உட்படுத்திக்கொள்வார்.

அந்த அர்த்தத்தில், உணவு தவிர்ப்பாக இருந்தாலும், போராட்டமாக இருந்தாலும் அவை இரண்டுமே உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் தொடர்ந்து மேற்கொண்ட பரிசோதனைகளே; அவையாவும் தொடர்ந்து மறுஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய பரிசோதனைகளாகவே அவரால் பார்க்கப்பட்டன. சுயவிமர்சனம், பரிபூரணத் தன்மை இரண்டையும் ஒருங்கே பின்பற்றிய அது போன்ற தருணங்களில் காந்தியைச் சமாளிப்பது அவ்வளவு எளிதாக இல்லை. அறம் சார்ந்து படைப்பூக்கமான அரசியலை உரு வாக்குவதற்கான முயற்சியில் அவர் ஈடுபட்டதால் அவருக்கு ஈடுகொடுப்பது மற்றவர்களுக்குப் பெரும் சிரமமாக இருந்தது.

### இன்னொரு பரிசோதனையின் வரலாறு

மற்றுமொரு பரிசோதனையும் இன்றைய இந்தியாவை ஆட்கொண்டிருக்கிறது. இரோம் ஷர்மிளாவின் உணவு தவிர்ப்புத்தான் அது. 2000ஆம் ஆண்டில் அவர் தொடங்கிய உணவு தவிர்ப்புதான் வரலாற்றின் மிக நீண்ட உணவு தவிர்ப்பாகப் பெயரெடுத்தது. மணிப்பூர் அரசியல் வெளியை அவரது உணவு தவிர்ப்புதான் ஆக்கிரமித்திருக்கிறது. அப்படிப்பட்ட உணவு தவிர்ப்பைத் தற்போது நிறுத்திக்கொள்வதாக அவர் அறிவித்திருக்கிறார். ஷர்மிளாவின் உணவு தவிர்ப்பு அந்த அளவுக்குப் பிரபலமடைந்திருப்பதற்குக் காரணம், அது நீண்ட காலம் மேற்கொள்ளப்பட்டதால் மட்டுமல்ல, அந்த உணவு தவிர்ப்புக்கு வேராக இருக்கும் மாபெரும் துணிவுதான்.

அறத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பிரபலமான செயற்பாடு அது. அதற்கு அங்கீகாரம் கொடுக்க எந்தக் கின்னஸும் தேவையில்லை. டில்லியின் ஆளுகைக்கு விடுக்கப்பட்ட மிகப் பெரிய சவால் அது. அரசின் மனிதத்தன்மைக்கும், அதன் நேர்மைக்கும் விடப்பட்ட சவால். தற்கொலைக்கு முயன்றதாக இரோம் ஷர்மிளா திரும்பத் திரும்பக் கைது செய்யப்பட்டிருக்கிறார். அரசு அவருக்குக் கட்டாயமாக உணவு புகட்டுகிறது. திரவ உணவு செலுத்துவதற்கான குழாய் மூக்கில் செருகப்பட்டிருக்கும் ஷர்மிளாவின் ஒளிப்படம் மணிப்பூர் போராட்டத்தின் அடையாளமாக மிகவும் பிரசித்தி பெற்றது.

> ஒரு வாரத்தில் வீடு திரும்பிவிடலாம் என்று எண்ணக்கூடிய பள்ளிச் சிறுமி போல அவர் தொடங்கிய போராட்டம் 16 ஆண்டுகள் நீடித்தது. அரசியலில் ஈடுபடுவோருக்குத் தேவையான திடசித்தம் தனக்கு இருப்பதாக அவருக்கு அந்தப் போராட்டமே உணர்த்தியது. மேலும், மணிப்பூர் மக்கள் மீதும் இந்தியா மீதும் அவர் கொண்டிருந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாகவும் அந்தப் போராட்டம் அமைந் தது. அவர் உணவுத் தவிர்பபை முடித்துக் கொள்வதில் இல்லை ஆச்சரியம், ஜனநாயக அரசியல் மீது அவர் கொண்டிருக்கும் நம்பிக்கைதான் பெரும் ஆச்சயம்.

உணவு தவிர்ப்பை முடித்துக் கொள்வதாக ஷர்மிளா அறிவித்தது அரசுக்கும் ஷர்மிளாவின் ஆதரவாளர்களுக்கும் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. எனது உத்தியை நான் மாற்றியாக வேண்டும். ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்ற செயற்றிட்டத்துடன் நான் தேர்தலில் போட்டியிடுவேன் என்று அவர் விளக்கமளித்தார். நான் உயிருடன் இருக்கும் போதே எனது செயற்றிட்டம் நிறைவேறுவதைப் பார்க்க விரும்புகிறேன். ஜனநாயக அதிகாரத்தைப் பயன்படுத்துவதுதான் எனது புதிய உத்தி என்றும் அவர் சொல்கிறார். ஷர்மிளாவின் இந்தச் செயற்பாடு பெரும் விவாதத்தைத் தூண்டும்.

### இயல்பு வாழ்க்கையின் மொத்த வடிவம்

உணவுத் தவிர்பபை முடிக்கும் தருணத்தில் நம்பிக்கையை வெளிப்படுத்தும் இரண்டு அறிவிப்புக்களை அவர் முன்வைத்தார். தேர்தலில் நிற்பதென்பது ஒரு முடிவு. கோவா- பிரிட்டிஷ் காரரும் தன்னுடைய காதலருமான டெஸ்மண்ட் குட்டீனோவை மணப்பது இன்னொரு முடிவு. ஒன்றுக்கொன்று முரண்பட்ட இந்த அறிவிப்புக்களின் வலிமையைத்தான் நாம் கொண்டாடவேண்டும். 16 ஆண்டுகளாக அவர் எதற்காகப் போராடினாரோ அந்த இயல்பு வாழ்க்கையின், அன்றாடத்தன்மையின் மொத்த வடிவம்தான் ஷர்மிளாவின் அறிவிப்பு.

ஷர்மிளா சானு என்ற இயற்பெயர் கொண்ட அவர் இரும்புப்பெண்மணிஎன்றுஅழைக்கப்பட்டார். பல ஆண்டுகாலப் போராட்டங்களுக்குப் பிறகு அவர் துருப்பிடித்துவிட்டார் என்று மக்கள் நக்கலாகச் சிரிக்கக்கூடும். தனது மனவுறுதியின் திடத்தையும் நெகிழ்வுத் தன்மையையும்தான் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தான் போராடிக்கொண்டிருப்பது ஆயுதப் படைச் சிறப்பு அதிகாரச் சட்டத்துக்கு எதிராக என்பது அவருக்குத் தெரியும். ஆனால், இம்முறை புதிய உத்திகளைப் பின்பற்றுகிறார். பிரதேசம் சார்ந்தும் வாழ்க்கைப் போக்கு சார்ந்தும் எழக்கூடிய கேள்விகளுக்கு அப்பால்தான் அந்த உத்திகளைப் பார்க்கவேண்டும். காங்கிரஸாக இருந்தாலும் சரி, பா.ஜ.கவாக இருந்தாலும்சரி, தனது போராட்டத்தை எந்த அரசும் கண்டுகொள்வதே இல்லை என்று அவர் கூறுகிறார். ஆயுதப்படைச் சிறப்பு அதிகாரச் சட்டத்தை மறுஆய்வுக்கு உட்படுத்துவதற்காக ஐந்து பேரை உறுப்பினர்களாகக் கொண்ட ஜீவன் ரெட்டி கமிட்டி சமீபத்தில் நியமிக்கப்பட்டது. அந்தச் சட்டத்துக்குப் பதிலாக சற்று மனிதத் தன்மை கொண்ட சட்டத்தை அந்த கமிட்டி பரிந்துரைத்திருந்தாலும் அரசு கண்டுகொள்வதாக இல்லை. அரசியல் கட்சிகளுக்குத் துணிவும் புத்தியும் இருந்திருந்தால் பல ஆண்டுகளுக்கு முன்பே ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தைக் கைவிட்டிருக்கலாம் என்று ஓமர் அப்துல்லாவும் ப.சிதம்பரமும் கூறியிருப்பதையும் இங்கு சேர்த்துக் கொள்ளலாம்.

சட்டம் தோல்வியடைந்தாலும் அரசியல்வாதிகள் பாராமுகம் காட்டினாலும் அரசியல் செயல்முறையின் மீது இரோம் ஷர்மிளா நம்பிக்கை கொண்டிருக்கிறார் என்பதுதான் இதில் சிறப்பான விடயம். ஒரு வாரத்தில் வீடு திரும்பிவிடலாம் என்று எண்ணக்கூடிய பள்ளிச் சிறுமிபோல அவர் தொடங்கிய போராட்டம் 16 ஆண்டுகள் நீடித்தது. அரசியலில் ஈடுபடுவோருக்குத் தேவையான திடசித்தம் தனக்கு இருப்பதாக அவருக்கு அந்தப் போராட்டமே உணர்த்தியது. மேலும், மணிப்பூர் மக்கள் மீதும் இந்தியா மீதும் அவர் கொண்டிருந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாகவும் அந்தப் போராட்டம் அமைந்தது. அவர் உணவுத் தவிர்ப்பை முடித்துக்கொள்வதில் இல்லை ஆச்சரியம், ஜனநாயக அரசியல் மீது அவர் கொண்டிருக்கும் நம்பிக்கைதான் பெரும் ஆச்சரியம். பணயம் வைப்பது போன்ற செயலாகவும், நம்பிக்கை வைக்கும் செயலாகவும், அரசியலுக்குத் தேவையான திடசித்தத்தின் மீது அவருக்கு உள்ள நம்பிக்கை குறித்த அறிக்கையாகவும் ஜனநாயக அரசியலுக்கு அவர் வழங்கிய மாபெரும் கொடையாகத்தான் அவருடைய செயலை நாம் கருத வேண்டும். அது அவ்வளவு எளிதான முடிவாக இருந்திருக்காது. அரசியல் என்ற மெழுகுக் காட்சியகத்தில் தான் ஒரு மெழுகு பொம்மைபோல ஆகிவிடமுடியாது என்பதையே அவர் உணர்த்துகிறார். அதாவது, தனது புனித பிம்பத்தை நீடிக்கும் விதத்தில்தான் செயற்பட முடியாது என்கிறார்.

### திருவுரு தொடர்வது முக்கியமல்ல

அரசியல் என்பது வலுவை அடிப்படையாகக் கொண்ட விடயம் என்றால், அதற்கு நெகிழ்வுத்தன்மை என்பது மிகவும் அவசியம். இந்த நெகிழ்வுத்தன்மையைத்தான் ஷர்மிளாவின் முடிவு பின்பற்றுகிறது. ஒரு வழிமுறை எவ்வளவு அறம் சார்ந்ததாக இருந்தாலும், அதை வழிபாட்டுக்குரிய ஒன்றாக ஆக்கிவிடக் கூடாது என்பதைத்தான் ஷர்மிளா உணர்த்துகிறார். வழிமுறை என்பது அறம்சார்ந்த ஒரு விளைவைப் பெறுவதற் கான வழியே. ஆயுதப்படைச் சிறப்பு அதிகாரத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்பதுதான் அவருடைய எதிர்பார்ப்பே தவிர, தனக்கிருக்கும் திருவுரு தொடர வேண்டும் என்பதல்ல. (தொடரும்)

நன்றி: த இந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூளை இல்லாதவர் யார்?

வயதான பணக்காரர் ஒருவர் வாலிப மிடுக்குடன் திகழ வேண்டும் என்பதற்காக நரைத்துப் போன தன்னுடைய தலைமயிருக்குக் கறுப்புச் சாயம் பூசிக் கொண்டிருந்தார்.

அப்போது ஆசிரியர் ஒருவர் வந்தார்.

அவரிடம், "ஆசிரியரே! தலைமயிருக்குச் சாயம் பூசினால் மூளைக்கு ஏதாவது கோளாறு உண்டாகுமா?" என்று கேட்டார் பணக்காரர்.

அதற்கு ஆசிரியர், "ஐயா செல்வந்தரே! மூளை இல்லாதவர்களே தலைமயிருக்குச் சாயம் பூசிக் கொள்வார்கள். ஆகையால், மூளைக்குக் கெடுதி உண்டா? இல்லையா? என்பதைப் பற்றி ஆராய வேண்டிய அவசியமே இல்லை" என்றார்.

"அத்தகையவர்களுக்கு மூளை இல்லை என்று நீங்கள் கூறுவது எவ்வாறு பொருந்தும்?" என்று கேட்டார் பணக்காரர்.

"செல்வந்தரே! வாலிப மிடுக்கும், கவர்ச்சியும் மனிதனுடைய வாழ்வில் ஒருமுறைதான் வரும். அவற்றை மீண்டும் பெற ஆசைப்பட்டு, வீண் முயற்சி செய்கிறவனை மூளை இல்லாதவர்என்றுகூறாமல்வேறுஎன்னவென்று கூறுவது" என்று கேட்டார் ஆசிரியர்.

# நெருப்புக்கோழி



பறவைகளில் அதிகம் எடை கொண்டது நெருப்புக் கோழி. 90 கிலோ முதல் 160 கிலோ வரை இதன் எடை இருக்கும். உயரம் 7 முதல் 9 அடி. இரண்டு கால்கள் கொண்ட உயிரினங் களில் வேகமாக ஓடக் கூடியது இதுதான்.

# மரம் நடுவோம்

மரம் நடுவோம் - நாமும்
மரம் நடுவோமே

அன்று வைத்த மாமரம்
இன்று பழம் தருகின்றது
இன்று மரம் வைப்பதால்
என்றும் பழம் கிடைக்குமே

ஆளுக்கொரு மாமரத்தை
நாமும் வைப்போமே
அன்று மரம் வைத்தவரை
இன்று வாழ்த்தியே







# வரலாற்றில் இன்றைய தினம்

1038 – முதலாம் ஸ்டீபன் அரசர் இறந்ததால் அவரது மருமகன் பீற்றர் ஓர்செலோ ஹங்கேரி அரசரானார்.

1281 – ஜப்பான் மீதான மொங்கோலிய ஆக்கிரமிப்பு; குப்ளாய்கானின் கடற்படைகல அணி, இரண்டாவது முறையாகவும் தெய்வீக சுழற்காற்றால் அழித்தொழிக் கப்பட்டது.

1511 – போர்த்துக்கல் அபோன்சோ டி அல்பேர்க்கினால் மலாக்கா சுல்தானேற்றின் தலைநகர் மலாக்கா வெற்றி கொள்ளப்பட்டது.

1534 – லொயலாவின் இக்னேஷியசும் அவரது வகுப்பறை சகபாடிகள் ஆறுபேரும் யேசு சபையை உருவாக்க உறுதி யெடுத்தனர்.

1843 – அமெரிக்காவில் தற்போதும் பயன்பாடிலுள்ள சமாதான மாதா தேவாலயம், ஹவாய் ஹொனாலுலுவில் றோமன் கத்தோலிக்க திருச்சபையால் மக்களுக்கு அர்ப்பணிக் கப்பட்டது.

1944 – இரண்டாம் உலகப் போரின் ட்ரகன் நடவடிக்கை; தெற்கு பிரான்சில் கூட்டுப்படைகள் தரையிறங்கின.

1947 – பாகிஸ்தானை உருவாக்கிய முஹமட் அலி ஜின்னா பாகிஸ்தானின் முதலாவது கவர்ணர் ஜெனரலாக கராச்சியில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

1954 – பராகுவேயில் அல்பெர்டோ ஸ்ரோஸென்னர் தமது சர்வாதிகார ஆட்சியைத் தொடங்கினார்.

1995 – வேலூர் சிறையிலிருந்து 43 தமிழர் தப்பியோட்டம். ஈழத்தவர்களான அவர்கள் புலிச் சந்தேக நபர்களாம்.

1995 – அப்பாறைப் பகுதியில் தமிழரின் வீடுகள் தீக்கிரை. முஸ்லிம் ஊர்காவலர் அட்டகாசம்.

1995 – நவாலி குண்டு வீச்சில் இறந்தவர்களில் 51 பேர் வலி. மேற்குப் பகுதி மக்கள் எனத் தெரிவிப்பு.

2006 – பலாலி பெரும்தளம் மீது தொடர்ந்து ஷெல் வீச்சு. விமானங்களைத் தரையிறக்க முடியாத நிலை நீடிப்பு.





# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி பிறந்தாலே எங்கட சனங்களுக்குக் கொண்டாட்டம்

ஆடி பிறந்தாலே எங்கட யாழ்ப்பாணத்துச் சனங்களுக்குப் பெரிய கொண்டாட்டம். நல்லூரான்ர திருவிழா ஆரம்பித்து விட்டால் யாழ்ப்பாணத்தின் அந்தத் தொங்கலில இருந்து இந்தத் தொங்கல் வரைக் கும் இருக்கிற முழுச்சனமும் இந்தத் திருவிழாவுக்கு வந்துபோகும். வழமையா இஞ்ச இருக்கிற எல்லா கோயில்களிலயும் திரு விழாக்கள் நடக்கின்றன, தேரும் இழுக்கப்படும், அதுகள விட அப்படி என்ன அங்க விசேசமா இருக்கப்போகுது எண்டு நான் எங்கட பெடியளிட்ட அடிக் கடி சொல்லுறனான். ஏனெண்டா எங்க ஊரும் யாழ்ப்பாணத் தின்ர தொங்கலில காரைநகருக்குப் பக்கத்திலதான் இருக்கு, நான் நல்லூரானின் திருவிழாவுக்குப் போறது கிடையாது, ஆனா பெடியள் நெடுகப் போவாங்கள், இது பக்தி. என்ன நினைக்கிறியளோ தெரியாது. எனக் கெண்டா அப்பிடிப் படேல்ல. பின்னர் சரி எண்டு போட்டு போன வருசத்துக்கு முதல் வருசம்தான் நானும் ஒருக்கா அங்க போய்ப் பாப்பம் என்ன நடக்குது எண்டு கோயிலுக்கு வெளிக்கிட்டன், கோயிலுக்குப் போறது எண்டா வேட்டி கட்டோணும் எண்டு எட்டுமுழ வேட்டி எடுத்துச் சுத்திக் கட்டி மோட்டச் சயிக்கிள எடுத்துக் கொண்டு நல்லூருக்குப் போனன்.

அங்க போய்ப் பாக்கத்தானே தெரிஞ்சு, எங்கட பெடியள் ஒவ்வொரு நாளும் வாறது இதுக்கு தான் எண்டு, என்ன சனமப்பா, கோயிலின்ர முன் வீதி பின் வீதி, சயிற்று வீதி எல்லாம் சனம், அதோட அங்க இருந்த கடையள், சுண்டல் கடையள், பான்சி கடையள், அப்பப்பா நான் நினைச்சு கூடப் பாக்கேல்ல, இதுகளை சொல்லிப் புரியாது அனுபவிச்சாத் தான் தெரியும் எண்டது, அண்டைக்கு எனக்கு விளங்கிற்றுது பாருங்கோ. இந்தக் கடையளை எல்லாம் பாத்துக்கொண்டு கோயிலின்ர முன்பக்க வீதியால போனன். அந்த வீதியில ஒரு பனர். என்னெண்டு வாசிச்சன். அதுவும் நாடகத் திருவிழா எண்டு கிடந்திச்சு, பாணான் குளத்துக்கு முன்னுக்கு எண்டு, எனக்கு நாடகங்கள் எண்டா ஒரு அலாதிப் பிரியம். ஊரிலயும், அரிச்சந்திர மயான காண்டத்தில இருந்து, "வெடி வீரன்" வரைக்கும் எல்லா நாடகங்களும் விடிய விடிய முழிச்சிருந்து பாக்கிறனான். இந்த நாடகத்திருவிழாவுக்கும் ஒருக்காய்ப் போய் அங்க என்ன நடக்கு எண்டு பாப்பம் எண்டு போனன். அங்க என்னடா எண்டா, புதுவிதமான ஒரு மேடை, வட்டம், சதுரம், முக்கோணம், எண்டதுகள எல்லாம் தாண்டி விசாலமான ஒரு பெரிய மேடை, இதுக்குப் பேர் பஞ்ச பூத அரங்கு எண்டு சொல்லிச்சினம், பூதம் எண்டோன்ன பயப் பிடாதேங்கோ. அந்த மேடையில நாடகங்கள் போட்டுக் கொண்டு இருந்திச்சினம், மேடைக்கு முன்னுக்கு இருந்த சின்னன்கள் எல்லாம் கைதட்டி சிரி சிரி எண்டு சிரிச்சுதுகள், அங்க மேடையேற்றப்பட்டதுகள் எல்லாம் அந்த அளவு திற மையான நாடகங்கள் பாருங்கோ, வர்ணங்கள் போட்ட லைற்றுகள், வேட உடையள், மேக்கப்புகள் எண்டதுகளோட நடிப்புகளும் அற்புதமாத்தான் இருந்திச்சு, ஒவ்வொரு பாத்திரங்களும் மேடைக்கு வரும் போது அந்த சின்னனு களின்ர சிரிப்பை எங்கயுமே பாத்திருக்க மாட்டியள். இப்ப எல்லாம் ஒரு மனிசர் சிரிக்கிறத்த பாக்கிறதே கஸ்ரம், அந்த அளவுக்கு எங்கட மனிசர் மாறிப் போச்சினம், ஆனா அங்க சிரிப்புக்கு பஞ்சம் இருக்காது எண்டு தான் சொல்ல வேணும், அது மட்டுமில்ல, ஒவ்வொரு கதையும் அற்புதமாத்தான் இருந்திச்சு, நாட்டில நடக்கிற பிரச்சினையள அப்படியே போட்டாங்கள், ஆருக்குப் பயப் பிடோனும், இதுகள் தானேப்பா நடக்கு எண்டு அங்க நிண்ட பெரிசுகள் கதைச்சது இப்பவும் என்ர காதில நிக்குது. இப்பிடியே நாடகங்கள பாத்துக்கொண்டு நிண்டதால நான் கோயிலுக்கு வந்தத மறந்து போனன். பின்ன நேரத்தைப் பாத்தா அது பங்க 9 மணிக்கு மேல ஆச்சு. பிறகென்ன கோயில். இஞ்ச பாத்ததுகளே கோயிலுக்குப் போனமாதிரித்தான் இருக்கு எண்டு நினைச்சுக்கொண்டு வீட்ட வந்திட்டன். பஞ்ச பூதம் எண்டு பேர வைச்சாலும் வைச்சாங்கள். இஞ்சால வாறதுக்கு மனம் கேக்கேல்ல. சும்மா சொல்லேல்ல, அங்க ஒருக்காப் போய்ப் பாருங்கோ, இந்த முறையும் அப்பிடித்தான் நாடகங்கள் போடுகினமாம், முகப்புத்தகங்களில எல்லாம் போடுகினம், அதோட இந்த வருசம் சிறப்பா கிராமிய நடனங்களும் இருக்காம், இந்தியாவில இருந்து வந்த பிரபலமான கிராமிய கலைஞன் தான் எங்கட பிள்ளையளுக்கு பழக்கிறாராம். அவர் முதலும் ஒருக்கா இஞ்ச வந்து பழக்கி கம்பஸ்சுக்க எல்லாம் போட்டவங்கள், பறை ஆட்டம், குச்சி ஆட்டம், லேஞ்சி ஆட்டம், மயில் ஆட்டம் எண்டு அந்த ஆட்டங்களுக்குப் பேர். அப்ப இந்த முறையும் நல்லூரான்ர திருவிழாவோட எனக்குப் பிடிச்ச நாடகத் திருவிழாவும் களைகட்டப் போகுது. நசிஞ்சு, வெதும்பிக் கிடக்கிற எங்கட மனதுகளுக்கு ஒரு றிலாக்சுக் காகவாவது அங்க போய் ஆகோணும், நான் வெளிக் கிட்டன், நீங்களும் ஒருக்கா வாங்கோ, பிடிக்கா டிப் பிறகு கதைப்பம்.




# யாழ்ப்பாணத்துடனான இணைப்பை அமெரிக்க விமானப்படை வலுவூட்டும்



வணக்கத்துகுரிய சாமுவேல் நெவில் என்பவர் 1813ஆம் ஆண்டு தெல்லிப்பழையில் முதலாவது அமெரிக்கன் மிசனரிப் பாடசாலையை ஆரம்பித்தது முதல் அமெரிக்கர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றனர். அமெரிக்கா, யாழ்ப்பாணத்தை அண்டிய பிரதேசங்களில் வாழ்ந்த மக்களுக்காக நூற்றுக் கணக்கான பாடசாலைகளையும், வைத்திய நிலையங்களையும் அமைத்துக் கொடுப்பதிலும் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளையும் கற்பிப் பதிலும் விசேட அக்கறை கொண்டிருந்தது. இந்தப் பாடசாலைகள் எமது மக்களுக்கிடையிலுள்ள மிக ஆழமான இந்த இணைப்பை மேலும் தொடர்வதற்காக எமது ஐக்கிய அமெரிக்க விமானப்படையினரின் ஒப்பரேஷன் பசுபிக் ஏஞ்சல் வேலைத்திட்டத்தின் மூலம் பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்யவும் இந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு வைத்திய சேவைகளை வழங்கவும் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருவதைக் காண்பதில் நான் பெருமையடைகின்றேன். 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் இந்த நாட்டின் அரசியல் செல்திசையில் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாற்றத்தை ஏற்படுத்தியது. தேசிய நல்லிணக்கம், நல்லாட்சி என்னும் உறுதிமொழியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டஒரு புதிய அரசைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் ஜனநாயக நிறுவனங்களையும், சட்ட பூர்வமான தேசிய நீதித்துறையையும், தொடர்ந்து வளர்ச்சியடையக் கூடிய சிவில் சமூக அமைப்புக்களையும் சிதைப்பதற்கு உறுதிபூண்டிருந்த அதிகரித்துசென்ற சர்வாதிகார ஆட்சி முறையைக்கொண்ட அரசை உங்கள் வாக்காளர்கள் கடந்த ஆண்டு இரண்டு முறை நிராகரித்துள்ளனர். இந்த அரசு, இலங்கையின் வெவ்வேறு சமூகங்களுக்கிடையிலும் பன்னாட்டு சமூகங்களுக்கிடையிலும் உறவை வளர்ப்பதற்கும், மிகவும் பிரகாசமான அரசியல் மற்றும் பொருளாதாரத்தை நோக்கிய எதிர்காலத்துக்காகவும், பல முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி, நீங்கள் ஓர் உறுதியான ஜனநாயகத்தையும் பல ஆண்டுகளாக துன்பங்களையும் வேதனைகளையும் கடந்து வந்து சமாதானத்தையும் சௌபாக்கியத்தையும் குறிக்கும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும்போதும் உங்கள் பக்கத்தில் ஐக்கிய அமெரிக்கா இருக்கும் என்று கூறிய உறுதிமொழியின் பிரதிபலனாக இலங்கைக்கு வரும் அமெரிக்கர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை உங்களில் அதிகமானோர் அவதானித்திருப்பீர்கள். இலங்கையின் பன்னாட்டு நிலைப்பாடு, பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி உதவி மற்றும் போர்ப் ப்யிற்சி நிலை என்பவற்றைத் தாங்கி நிற்பதற் கான ஐக்கிய அமெரிக்காவின் முழுஅளவிலான தொடர் ஆதரவை இப்படியான வருகைகள் முதன்மைப்படுத்திக் காட்டுகின்றன.

கடந்த மூன்று தசாப்தங்களாக நடந்த வன்முறைகளின் பயங்கரத்தையும் ஜனநாயகத்துக்கெதிரான அரசுகளையும் நாம் எல்லோரும் மறந்திருக்கமாட்டோம். அந்த நிலையை இன்று ஒப்பிடுவோமானால். சிவில் சமூக அமைப்புக் குழுக்கள் உயர்ந்த நிலையில் இருந்து அரசின் தரமானங்களிலும் மற்றும் காரிய சாதனைப் படையணியிலும் முக்கிய ஆலோசகர்களாகத் திகழ்கின்றன. ஊடகவியலாளர்களில் அனேகமானோர் சுதந்திரமாக எழுதுவதுடன் கடத்தல் தொடர்பான கவலையின்றி பாரம்பரிய மற்றும் சமூக ஊடகங்களில்பலமான விமர்சனங்களையும் வெளியிடுகின்றனர். ஹோட்டல்கள், வியாபார ஸ்தாபனங்கள், உணவகங்கள், விடுதிகள் யாழ்ப்பாணத்திலும் வேறு பல இடங்களிலும் புதிதாக ஆரம்பிக்கப்படுகின்றன. மற்றும் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டவரைபு காணாமற் போனோர் மற்றும் அவர்களது குடும்பத்தவர்களின் உரிமைகளையும் அக்கறையையும் பாதுகாப்பதில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.

> இந்த அரசு இலங்கையின் வெவ்வேறு சமூகங்களுக்கிடையிலும் சர்வதேச சமூகங்களுக்கிடையிலும் உறவை வளர்ப்பதற்கும், மிகவும் பிரகாசமான அரசியல் மற்றும் பொருளாதாரத்தை நோக்கிய எதிர்காலத்துக்காகவும், பல முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் பசுபிக் ஏஞ்சல் உதவி செயற்றிட்டம் யாழ்ப்பாணத்தில் உபகரணங்களை வழங்குவதற்காகவும், உள்ளூர் மக்கள் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக புனர்நிர்மாண வேலைகளைச் செய்யவும் இலங்கை விமானப்படையுடன் இணைந்து செயற்படும். எங்களது வேலைத் திட்டங்களும் இங்கு வரும் விருந்தினர்களும் உங்களுடன் இணைந்து செயற்படுதல், இலங்கையின் பலதரப்பட்ட சமூகங்களுக்கிடையில் சகல மட்டங்களிலும் உறவை வலுப்படுத்துதல்என்னும் விடயங்களில் எங்களது உறுதியளித்தலின் ஓர் அங்கமாகும். ஜனநாயக நிலை மாற்றத்துடன், தொல்லைகள் அதிகரித்துவரும் உலகில் இலங்கை உங்களது நாடு சமாதானத்துக்கும், ஒருமைப் பாட்டுக்கும், ஜனநாயகத்துக்கும், சுபீட் சத்துக்கும் ஒரு பிரகாசமான உதாரணமாக விளங்கவேண்டும் என்ற இலங்கை மக்களின் நோக்கத்தை நாம் எல்லோரும் பகிர்ந்து கொள்வதால் பரந்துபட்ட பன்னாட்டு உதவிகள் மிகவும் சிறப்பாக உங்கள் பின்னால் வருகின்றன.

[தமது யாழ்ப்பாணத்துக்கான வருகையை முன்னிட்டு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நா. முத்துக்குமார் காலமானார்



மஞ்சள்காமாலை நோயால் பாதிக்கப்பட்ட நா. முத்துக்குமார் நேற்றுச் சென்னையில் காலமானார். சீமானின், ‘வீர நடை’ திரைப்படத்தில் பாடலாசிரியராக அறிமுகமான நா. முத்துக்குமார், 1500 இற்கும் அதிகமான பாடல்களை எழுதியுள்ளார்.

‘தங்க மீன்கள்’ மற்றும் ‘சைவம்’ படத்தில் அவர் எழுதிய பாடல்களுக்கு தேசிய விருது வழங்கப்பட்டது. ‘சைவம்’ படத்தில் இடம்பெற்ற “அழகு.. அழகு..” பாடலுக்கும், ‘தங்க மீன்கள்’ படத்தில் இடம்பெற்ற “ஆனந்த யாழை...” பாடலுக்கும், சிறந்த பாடலாசிரியருக்கான விருதைப் பெற்றுள்ளார். மற்றும் தமிழக அரசு விருதையும் வாங்கியுள்ளார்.

பாடலாசிரியர் நா.முத்துக்குமார் 1975 ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் திகதி காஞ்சிபுரத்தில் பிறந்தவர். இயக்குநராக வேண்டும்என்று தனது வாழ்க்கைப்பயணத்தை தொடங்கிய அவர், சிறந்த பாடலாசிரியர் ஆனார். அவருடைய இறப்பு திரையுலகம் மட்டுமன்றி அனைத்துத் தரப்பினருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. முத்துக்குமார் கவிதை மற்றும் கட்டுரைத் தொகுப்புகள், புத்தகங்களையும் எழுதியுள்ளார். நா. முத்துக்குமார் இறப்புக்கு திரையுலகத்தினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.










## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 3 | | 5 | | | 1 |
| | 9 | | | 8 | | | 2 | |
| | | | 6 | | 1 | | | |
| | 8 | | | | | | 7 | |
| 1 | | 7 | | 5 | | 2 | | 9 |
| | 6 | | | | | | 8 | |
| | | | 2 | | 9 | | | |
| | 1 | | | 6 | | | 9 | |
| 9 | | | 5 | | 3 | | | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 6 | 4 | 5 | 8 | 2 | 7 | 3 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 4 | 5 | 9 |
| 7 | 5 | 4 | 9 | 2 | 3 | 8 | 1 | 6 |
| 1 | 3 | 9 | 2 | 8 | 5 | 6 | 4 | 7 |
| 8 | 6 | 2 | 3 | 4 | 7 | 1 | 9 | 5 |
| 5 | 4 | 7 | 6 | 9 | 1 | 3 | 2 | 8 |
| 6 | 9 | 1 | 7 | 3 | 4 | 5 | 8 | 2 |
| 3 | 7 | 8 | 5 | 1 | 2 | 9 | 6 | 4 |
| 4 | 2 | 5 | 8 | 6 | 9 | 7 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




ஒரு பெண்மணியின் கார் தொலைந்து விட்டது. புகார் கொடுக்க பொலிஸ் நிலையம் வந்தார். பொலிஸ்காரர் கேட்டார், “உங்க கார் பெயர் என்ன?” “பெயர் மறந்து விட்டது. ‘T’ லே ஸ்டார்ட் ஆகும்” “ஓ, வித்தியாசமான காரா இருக்கே! ‘T’ யிலே ஸ்டார்ட் ஆகுது. எனக்கு பெற்றோலில ஸ்டார்ட் ஆகிற கார்தான் தெரியும்”





**மேடம்:** நிதானமுடன் செயற்படுவது நல்லது. நண்பர்களிடம் சச்சரவு பேசக் கூடாது. தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்:** எதிர்பார்த்த நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். உறவினர் வருகையால் குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் கூடும். போட்டி, பந்தயத்தில் வெற்றி பெற வாய்ப்புண்டு. நண்பர்களுடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**கடகம்:** பேச்சில் சுபத் தன்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி நிலை உருவாகும். குடும்பத்தினர் விருப்பம் அறிந்து நிறை வேற்றுவீர்கள். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**சிங்கம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். நேரத்திற்கு உண்பதால் உடல்நலம் சீராகும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி:** குடும்ப சிரமத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**துலாம்:** நல்லவர்களின் நட்பால் மகிழ்ச்சி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். சொத்துச் சேர்க்கை உண்டாகும்.

**விருச்சிகம்:** சிறிய செயலும் கடினமாகத் தோன்றலாம். நண்பரின் ஆலோசனை, புதிய நம்பிக்கையைத் தரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது.

**தனுசு:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். உறவினர், மத்தியில் செல்வாக்கு உயரும். வெகுநாள் வாங்க நினைத்தப் பொருள் வாங்குவீர்கள்.

**மகரம்:** உணர்ச்சி வசப்படுகிற சூழல் ஏற்படலாம். குடும்ப விடயங்களை, பிறரிடம் விவாதிக்க வேண்டாம். கடின உழைப்பால் தொழில், வியாபாரத்தில் வருமானம் காண்பீர்கள். திட்டமிட்ட பயணத்தில் மாறுதல் செய்வீர்கள்.

**கும்பம்:** விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் உருவான இடையூறு விலகும். ஆதாயம் படிப்படியாக உயரும். வழக்கு, விவகாரங்களில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**மீனம்:** செயலில் திறமை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். அரச வகையில் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 800 | 600 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 350 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 700 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 600 | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | 700 | – |
| சீலா | 300 | 400 | 400 | 600 | 400 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 600 | 500 | 450 | 420 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 300 | 300 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 400 | – |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 300 | 200 | 380 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | 200 | 400 |
| சூடை | 150 | 250 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 200 | 150 | – | 300 | 400 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 300 | 160 |
| மதனம் | 150 | 250 | 180 | 400 | 350 | 200 | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 70 | 80 | 200 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 600 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 400 | 300 | – |

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 50 | 120 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 80 | 70 | 100 | 80 | 40 | 60 | 90 | 40 |
| கரட் | 120 | 110 | 200 | 140 | 100 | 120 | 110 | 120 |
| மரவள்ளி | 100 | 100 | 80 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 70 | 40 | 40 | 40 | 40 | 40 | 100 | 40 |
| பாகல் | 120 | 100 | 180 | 120 | 100 | 80 | 240 | 100 |
| கருணைக்கிழங்கு | 180 | – | 140 | – | 80 | -120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 90 | 90 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 70 | 80 | 70 | 80 | 90 | 60 |
| பூசணி | 60 | 50 | 60 | 60 | 60 | 80 | 70 | 80 |
| தக்காளி | 40 | 60 | 60 | 80 | 40 | 60 | 120 | 50 |
| வாழைக்காய் | 100 | 110 | 80 | 120 | 80 | 40 | 70 | 40 |
| கீரை | 15 | 20 | 30 | 10 | 20 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 200 | 300 | 180 | 240 | 200 | 400 | 160 |
| புடோல் | 40 | 40 | 50 | 60 | 60 | 40 | 70 | 50 |
| கோவா | 120 | 90 | 160 | 140 | 120 | 160 | 90 | 80 |
| வெண்டி | 50 | 30 | 50 | 80 | 40 | 80 | 70 | 50 |
| போஞ்சி | 160 | 140 | 180 | 180 | 180–200 | 200 | 130 | 180 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 140 | 100–120 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 26 | 40 | 30 | 30 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 140 | 120 | 120 | 120 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 150 | 200 | 200 | 180 | 240 | 200 | 130 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 120 | 80 | 100 | 120 | 200 | 80 |

# சிக்கன் பிறை வீட்டிலேயே செய்வது எப்படி?



பலருக்கு சிக்கன் பிறை எப்படி செய் கிறார்கள் என்ற கேள்வி மனதில் எழும். அத்தகையவர்களுக்காக அந்த சிக்கக் பிறை எப்படி வீட்டிலேயே செய்வதென்று ஆசை. இதன் செய்முறையைப் பார்த்தால், இவ்வளவு தானா என்று பலர் ஆச்சரியப் படுவோம். ஏனெனில் அவ்வளவு எளிமை யாகச் செய்யலாம்.

## தேவையான பொருள்கள்

சிக்கன் – 1 கிலோ
(கால் பக்கம் அல்லது நெஞ்சுப் பக்கம்)
இஞ்சிப் பேஸ்ட் – 1 மேசைக் கரண்டி
உள்ளி பேஸ்ட் – 1 மேசைக்கரண்டி
சோயா சோஸ் – 1 மேசைக்கரண்டி
சில்லி சோஸ் – 1 மேசைக்கரண்டி
தக்காளி சோஸ் – 1 மேசைக்கரண்டி
மிளகுத் தூள் – 1 தேக்கரண்டி
உப்பு – 1 $\frac{1}{2}$ தேக்கரண்டி
தண்ணீர் – 1 கப்
பிரட் தூள் – தேவையான அளவு
எண்ணெய் – பொரிப்பதற்கு தேவையான அளவு

### மாவுக்கு

கோதுமை – 1 $\frac{1}{2}$ கப்
முட்டை – 1
(நன்கு அடித்துக் கொள்ளவும்)
மஞ்சள் தூள் – $\frac{1}{2}$ தேக்கரண்டி
தண்ணீர் – 2 கப்
மிளகுத் தூள் – $\frac{1}{2}$ தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு

## செய்முறை:

முதலில் சிக்கன் துண்டுகளை நன்கு சுத்தமாகக் கழுவிக் கொள்ள வேண்டும்.

பின்னர் அதனை ஒரு பாத்திரத்தில் போட்டு, அதில் தக்காளி சோஸ், சோயா சோஸ், சில்லி சோஸ், இஞ்சி மற்றும் உள்ளி அரைத்த விழுது, மிளகுத் தூள், உப்பு மற்றும் தண்ணீர் சேர்த்து 10 நிமிடம் அடுப்பில் வைத்து, சிக்கன் முக்கால்வாசி வெந்ததும், அதனை இறக்கி தனியாக வைத்துக் கொள்ளவேண்டும்.

பின்பு மற்றொரு பாத்திரத்தில் கோதுமைமா, உப்பு, மிளகுத் தூள், மஞ்சள் தூள், அடித்து வைத்துள்ள முட்டை மற்றும் தண்ணீர் ஊற்றிக் கலந்துகொள்ளவேண்டும். பிறகு ஒரு தட்டில் பிரட் தூளை போட்டு வைத்துக் கொள்ள வேண்டும்.

பின் ஒரு சட்டியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்குத் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், சிக்கன் துண்டை எடுத்து, மாவில் நனைத்து, பிரட் தூளில் பிரட்டி எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்க வேண்டும்.

இது போன்று அனைத்துச் சிக்கன் துண்டுகளையும் செய்தால், சுவையான சிக்கன் பிறை தயார்.

## வீட்டுக் குறிப்பு

- கோதுமையை நன்கு கழுவி நான்கு மணி நேரம் ஊற வைத்து உலர்த்தி பின் மிசினில் அரைத்து, சப்பாத்தி செய்தால் மிகவும் மிருதுவான சப்பாத்தி கிடைக்கும்.
- தானியம் மற்றும் பயறு வகைகளை எட்டு மணி நேரம் ஊறவைத்து தண்ணீர் வடித்து, மூடி வைத்து மறுநாள் திறந்து பார்த்தால் முளை கட்டிய தானியம் தயார்.
- சப்பாத்தி எப்போதும் சூடாக இருக்க அதை சில்வர் பேப்பரில் சுற்றி வைக்கவும்.
- குடிக்கும் தண்ணீர் மணமா இருக்கணுமா, வாட்டர் பில்ட்டரில் சிறிதளவு துளசியை போட்டு வைக்கவும்.
- வாழைப்பூ, வாழைத்தண்டு ஆகியவற்றை நறுக்கினால் உடனே அவற்றை மோர் கலந்த தண்ணீரில் போட்டு வைக்க வேண்டும். இதனால் வாழைப்பூ, வாழைத்தண்டின் நிறம் மாறாது, துவர்ப்பு நீங்கும்.

## நாளை

ஆடி-32
செவ்வாய்க்கிழமை -16.08.2016
திதி: திரயோதசி பி.ப.05.09
நட்சத்திரம்: உத்தராடம் பி.இ.01.22
ராகுகாலம்: 03.05-04.35 வரை
சுபநேரம்: 10.35-12.05 வரை
பட்டினத்தார் குருபூசை

## இது புதுசு



அலங்கரிப்பு கண்ணாடி மேசைகள் அறிமுகமாகியுள்ளன. பொருள்களை வைக்கத் தக்க விதத்தில் சிறிய லாச்சிகளுடன் இவை உருவாகியுள்ளன. இவ்வகை கண்ணாடி மேசைகள் 22 ஆயிரம் ரூபாவில் இருந்து, 32 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ்-லோன் நீர்க்குழாய் பணியாளர்கள் சமூகத்தில் அங்கத்தவராவதன் மூலம், நீர்க்குழாய் சம்பந்தமான பட்டப்படிப்பினை கற்றிடவும், உள்நாட்டில் தொழிற்துறை சார்ந்த உயர் அங்கீகாரம் மற்றும் சர்வதேச மட்டத்திலான தொழிற் பயிற்சியுடன் வெளிநாட்டு தொழிற் சந்தையில் நுழைவதற்கான வாய்ப்பும் உங்களுக்கு கிடைக்கும்.

உயர் தொழில் நுட்பத்திறனுடனான நீர்க்குழாய் பணியாளர்களை உருவாக்கும் தேசிய பொறுப்புடன் எஸ்-லோன் லங்கா தனியார் நிறுவனம் உங்களுக்கு வழங்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தினூடாக பயன்பெறுங்கள்.

**எஸ்-லோன் நீர்க்குழாய் பணியாளர்கள் சமூகத்தினூடாக உங்களுக்கு:**
● சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சியுடன் சான்றிதழ் ● சரியானதோர் உரித்துடமை. தொழிற்த்துறை சாரந்த ஏற்பு ● குழந்தைகளின் கல்விக்கான புலமைபப்ரிசில்கள் ● விசேட காப்புறுதி ● விசேட கழிவுகள் ● நாட்டின் மிகப்பெரிய நீர்க்குழாய் பணியாளர்கள் வலையமைப்பின் அங்கத்துவம் ● மேலும் பல வரப்பிரசாதங்களை பெறுவதற்கான வாய்ப்பு.

**எஸ்-லோன் நீர்க்குழாய் பணியாளர்கள் சமூகத்தின் அங்கத்துவத்தை பெறும் முறை:**
இவ் அங்கத்துவம் எஸ்-லோன் லங்கா நிறுவனத்தினால் உங்களுக்கு இலவசமாக வழங்கப்படும். நீங்கள் செய்யவேண்டியது கீழ் காணப்படும் கூப்பனை அல்லது இதற்கு ஒத்த கூப்பனை தயார் செய்து நிரப்பி, எஸ்-லோன் நீர்க்குழாய் பணியாளர்கள் சமூகம், எஸ்-லோன் லங்கா தனியார் நிறுவனம், இல. 515/7 டி.பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு அனுப்புவதே ஆகும்.

எஸ்-லோன் நீர்க்குழாய் பணியாளர்கள் சமூக அங்கத்துவ விண்ணப்பப்படிவம் SL/515/DU

முழுப்பெயர்:..............................................

தேசிய அடையாள அ. இல:..............................................

விலாசம்:..............................................

தொ.பேசி இலக்கம் கையடக்கம்:.............................. வீடு:..............................

மாவட்டம்/பிரதேசம்:..............................................

நீர்க்குழாய் பணியாளராக தொழில் அனுபவம் (வருடங்கள்):..............................

S-lon

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் அலுவலகம் சட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களை ஏமாற்றியது அரசு

*சட்டத்தரணி டொமினிக் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஓக. 15

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டத்தின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். ஏற்கனவே நல்லிணக்கப் பொறிமுறை சம்பந்தமாக இலங்கையில் மாவட்ட ரீதியாக மற்றும் மாகாண ரீதியாக நடைபெற்று வரும் கருத்துப் பகிர்வு இன்னும் முடிவுறாத நிலையிலேயே, இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு தெரிவித்தார் வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளரும், மனித உரிமை அபிவிருத்திக்கான சட்ட ஆலோசகருமான ஆ.டொமினிக் பிறேமானந்த்.

காணாமற்போனோர் தொடர்பில் மக்களின் கருத்துப் பகிர்வு அறிக்கை முன்வைக்கப்படாத நிலையில், அரசு மிக விரைவில் காணாமற்போனோர் அலுவலகம் நிறுவுவதற்கான சட்டவரைவை நிறைவேற்றியது. அதில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அது சம்பந்தமாக இயங்கும் அமைப்புக்களின் கருத்து எதுவும் உள்வாங்கப்படாமல் நிறைவேற்றப்பட்டமை மிகவும் வேதனை அளிக்கின்றது.

ஏற்கனவே பரணகம ஆணைக்குழு கடந்த மாதம் வரை பதிவுகளை மேற்கொண்டு, அதன் அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தது. ஆனால் கடந்த வருடம் ஜெனிவா கூட்டத்தொடரில் நிராகரிக்கப்பட்ட இந்த பரணகம ஆணைக்குழுவை இயங்க அனுமதி அளித்த அரசு, மேலும்காலம் இழுத்தடிக்கவும், குற்றம் இழைத்தவர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டத்தை திட்டம் இட்டு நிறைவேற்றியது. அப்படிப்பட்ட எந்த ஒரு பிரயோசனமும் இல்லாத சட்டம் உருவாக்கப்பட்டதன் மூலம் நாம் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டுள்ளோம். இதற்கு எமது அரசியல் தெரிவாளர்களும் ஆதரவு வழங்கி வருவதுதான் பெரிதும் கவலைக்குரிய விடயமாக உள்ளது.

எமது இனத்தின் மேல் கட்டவிழ்த்து விட்டிருந்த - விடப்பட்டுக்கொண்டிருக்கின்ற அனைத்து விடயத்துக்கும் மற்றும் சட்டரீதியற்ற இராணுவ, பொலிஸ் அரச தரப்பினால் கைது செய்து காணாமல் ஆக்கப்பட்டமை, அதனோடு இணைந்த வகையில் ஆயுதக் குழுவின் மூலம் காணாமல் ஆக்கப்பட்டமை, நில ஆக்கிரமிப்பு, தேவையற்ற பௌத்த விகாரை, புத்தர் சிலைகள் அமைத்தல், இராணுவமயமாக்கல் போன்றனவும் இந்த அரசால் மிகவும் திட்டமிட்டே முன்னெடுக்கப்படுகிறது. தெற்கில் உள்ள பேரினவாதிகள் இந்த சட்டவரைவு தமக்கும் பாதிப்பு என்று சொல்லி தமக்கு அரசியல் லாபம் தேட முயல்கிறார்கள்.

இந்த அரசை நம்பவில்லை என்றும் பன்னாட்டு விசாரணையே வேண்டும் என்பதைத் தமிழ் மக்கள் வலியுறுத்தி இருந்தார்கள். அதனால்தான் என்னவோ நல்லிணக்கம் சம்பந்தமான மக்கள் அறிக்கை வர முதல் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது போல் உள்ளது என மாற்றுக்கொள்கைகளுக்கான பாக்கியசோதி சரவணமுத்துவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கருத்து வேடிக்கையாகவே உள்ளது. ஏனெனில் அவருடைய காலத்தில் நடைபெற்ற பல படுகொலைகள், காணாமல் போதல் போன்றவற்றுக்கு அவரும் பதில் சொல்ல வேண்டியே உள்ளது. இலங்கை நாட்டில் ஆட்சி அமைக்கும் அனைத்து சிங்கள அரசியல்வாதிகள் எம்மீது திட்டமிட்டு இன அழிப்பை ஒத்த செயற்பாட்டைச் செய்து வருகிறார்கள்-என்றார். (வ-ரி)

## ஐ.நா பொதுச்சபையில் செப். 21 மைத்திரி உரை

கொழும்பு, ஓக. 15

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் அணிசேரா நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டிலும், ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்திலும் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

அணிசேரா நாடுகளின் தலைவர்களின் 17ஆவது உச்சி மாநாடு செப்ரெம்பர் 17, 18ஆம் திகதிகளில் வெனிசுலா நாட்டின் கராகஸ் நகரில் நடைபெறவுள்ளது.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

இந்த மாநாட்டை முடித்துக் கொண்டு, ஐ.நா. பொதுச் சபையின் 71ஆவது அமர்வில் செப்ரெம்பர் 21ஆம் திகதி உரையாற்றுவதற்காகஜனாதிபதிநியூயோர்க்செல்லவுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பதவியில் இருந்து ஜனவரி மாதம் விலகவுள்ள பராக் ஒபாமா, ஐ.நா பொதுச் சபையில் நிகழ்த்தவுள்ள கடைசி உரை இது என்பதாலும், 10 ஆண்டுகளாக ஐ.நா. பொதுச் செயலர் பதவியில் இருந்த பான் கீ மூன், இந்த ஆண்டு இறுதியுடன் ஓய்வுபெறவுள்ளதாலும், 71ஆவது ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தொடர் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (வ-5)

## இலங்கைத் தூதரகத்தில் இராஜதந்திரி மோசடி

கொழும்பு, ஓக. 15

முன்னாள் இராஜதந்திரியொருவர் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகத்தில் மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.


கடந்த அரசு ஆட்சியில் இருந்தபோது அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகத்தில் கடமையாற்றிய இராஜதந்திரியொருவர் ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை மோசடி செய்ததாக அயலுறவுத்துறை அமைச்சு குற்றஞ் சுமத்தியது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ஐ. நா. கூட்டங்களுக்காக அரச பிரதிநிதிகள் மேற்கொண்ட பயணங்கள் தொடர்பில் நடத்திய விசாரணைகளின்போது, இந்த மோசடி பற்றிய விவரம் அம்பலமாகியது.

எவ்வாறெனினும் சில முக்கிய ஆவணங்கள் காணாமற்போயுள்ளதாக அயலுறவுத்துறை அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ-5)

## மரண அறிவித்தல்

### கந்தையா தேவராசா



உடுவிலைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்தவருமாகிய கந்தையா தேவராசா 08.08.2016 திங்கட்கிழமை இயற்கை எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வாலமுத்து தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் - செல்லபாக்கியம் தம்பதிகளின் மூத்த மருமகனும் அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த வசந்தமலர் (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும் சுகன்ஜா(சோபா - பிரான்ஸ்). பகீரதன்(பொபி - சுவிஸ்). றொபின்சன்(கண்ணன் - பிரான்ஸ்). சுமணா(சுபா - பிரான்ஸ்). Dr.சுகமதி(இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான ராசாத்தி. சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவகுமார்(பிரான்ஸ்). சுகந்தி(சுவிஸ்), சோதிரூபா(பிரான்ஸ்). அருள்நேசன்(றொக்சன் - பிரான்ஸ்). சரவணகுமார்(இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் நில்ஷா. நிதுஷா. நிலுக்ஷா. றொபேட். றொயில்சன். றொசான். றக்ஷினி. சுஜே. அஜே ஆகியோரின் அன்புப் பேரனும் குணராசா. நற்குணசிங்கம் (ஜேர்மனி). செந்தாமலர். மனோரஞ்சிதமலர். விமலேந்திரமலர். காலஞ்சென்ற லிங்கராசா ஆகியோரது மைத்துனரும் மகேஸ்வரி. மீனா(ஜேர்மனி). தம்பிராசா. இராசதுரை. லிங்கராசா(லண்டன்) ஆகியோரது சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2016) செவ்வாய்க்கிழமை பிரான்ஸ் நேரப்படி மு.ப 9.00 - மு.ப 11.00 வரை அவரது பிரான்ஸ் இல்லத்தில நடைபெற்று மு.ப 11.30 - 12.30 மணியளவில் 95Rue Marcel Sembat 93430 Villetaneuse, France எனும் இடத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்றைய தினம் உடுவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மு.ப 9.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சிவமணிகுடும்பம்
கட்டப்பிராய்.

(J 3781)
(14.17.18)

| | |
|---|---|
| சிவகுமார்(பிரான்ஸ்) | +33149716514 |
| | +33617562973 |
| பொபி (சுவிஸ்) | +41799472438 |
| கண்ணன்(பிரான்ஸ்) | +33652693992 |
| சுபா(பிரான்ஸ்) | +33149716574 |

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பிறேமா நிக்சன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும். சங்கரப்பிள்ளை வீதி. மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறேமா நிக்சன் 13.08.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலன்சின்ராசா (பட்டு) மற்றும் நாகேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வியும். காலஞ்சென்ற பிரான்சிஸ் மற்றும் யசிந்தா தம்பதிகளின் மருமகளும். நிக்சனின் அன்பு மனைவியும். சுரேஸ் (ஜேர்மன்). சுரேகா. கவிதா (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும். புஸ்பராணி. விஜயேந்திரன். மகேந்திரன் ஆகியோரின் மைத்துனியும். நிதிஸ். ஜஸ்மினா. றெசிகா ஆகியோரின் பெரியதாயும். சுதன். சுதர்சினி. தர்சிகா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.08.2016) திங்கட்கிழமை அவரது இல்லமான 26/38. கம்பஸ்லேன் (தபால்பெட்டி). திருநெல்வேலியில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒருமணியளவில் வட்டுக்கோட்டை தெற்கில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

26/38, கம்பஸ்லேன்
(தபால்பெட்டி),
திருநெல்வேலி.

(J/3783)
(11,17,18)


தகவல்: குடும்பத்தினர்.
திருமதி நாகேஸ்வரி
சின்ராசா (பட்டு)

**077 256 7818**

### பிலிப் யோகராஜா சவிரிமுத்து

(ரஞ்சன் - பிரான்ஸ்)

தோற்றம்
24
.
09
.
1955



மறைவு
13
.
08
.
2016

இல.8. இராசாவின் தோட்டம். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும். பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப் யோகராஜா சவிரிமுத்து (ரஞ்சன்) 13.08.2016 பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கபிரியேல்பிள்ளை ச்விரிமுத்து மற்றும் எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும். அன்ரோனியாவின் (சுட்டி) அருமைக் கணவரும். காலஞ்சென்றவர்களான இக்னேசியஸ் - பிலோமினா தம்பதியரின் அன்பு மருமகனும். ஸ்றெப (f)னி. சோர்ந்திரின் ஆகியோரின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்றவர்களான இம்மானுவல். சூசைப்பிள்ளை. ஜேசுதாசன். றெஜினா. அன்ரன்பிறிற்றோ மற்றும் அன்ரன். ஞானமலர். றோஸ்மேரி. வெலிங்டன். காலஞ்சென்ற சொபியா மற்றும் மனோகரன். றோஸ் வினிவிறெட். றஞ்சினி. றாகினி. சாந்தி. றாஜி. காலஞ்சென்ற கொண்சி மற்றும் ஜீலி. பொபி ஆகியோரின் அருமைச் சகோதரனும். காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் ராதா. ஜமுனா. பாலகாந்தன். சாள்ஸ். எமில்டன். காலஞ்சென்ற நேசராஜா மற்றும் சிறி. நந்தன். ராணி. பபா. கசில்டா. அசம்ரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இல.8, இராசாவின் தோட்டம் லேன்,
யாழ்ப்பாணம்.
றோஸ் மேரி
(சகோதரி)

**021 222 8972/077 474 0123**

(ஜே.3779) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை...

ஆனந்தராசாவுக்கு பாதகமான ஊசி ஏதும் ஏற்றப்பட்டமைக்கான அறிகுறி இதுவரை மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளிலிருந்து தெரியவரவில்லை. இவ்வாறு தெரிவித்தார் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 2012ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் இராசையா ஆனந்தராசா தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய விடுதலையை வலியுறுத்தி கடந்த ஜூன் மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தார். சிறைச்சாலை அதிகாரிகள் 6 பேர் வலுக்கட்டாயமாக தனக்கு ஊசி ஏற்றியதாகவும், இதனால் உடல், உள ரீதியாக மோசமாகப் பாதிக்கப்பட்டதாகவும் இராசையா ஆனந்தராசா நீதிமன்றில் தெரிவித்தார்.

இதன் பின்னர் அவரை நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பார்வையிட்டிருந்தார். சிகிச்சைக்காக அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்குமாறு சிறைச்சாலைகள் அமைச்சர் சுவாமிநாதனிடம் கோரியிருந்தார். இதற்கு அமைய, நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு கடந்த புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் ஆனந்தராசா சேர்க்கப்பட்டதார்.

'அவர் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார். இதுவரை மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில் விச ஊசி ஏற்றப்பட்டமைக்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை' என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். (வ-5-4)

## படையினர்...

இதனைக் குறிப்பிட்டார்.

காணாமற்போனோர் அலுவலகம் நிறுவப்பட்டால், அதன் மூலம் பாதுகாப்புப் படையினர் பழிவாங்கப்படுவார்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் தெரிவித்ததாவது:

இறுதிக்கட்ட போரின்போது, காணாமற்போயுள்ள நபர்கள் சம்பந்தமாக ஆராய்வதற்கு மாத்திரம் இந்த அலுவலகம் அமைக்கப்படவில்லை. போரின் போது, 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச பாதுகாப்புப் படையினர் காணாமற்போயுள்ளனர். கடந்த ஆட்சிக் காலத்தில் ஊடகத்துறையினர் பலர் கடத்தப்பட்டனர்.

இவ்வாறு காணாமற்போனோர் தொடர்பாக ஆராய்ந்து, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிரந்தர அலுவலகம் அவசியம் - என்றார். (வ-5)

*(மற்று மொரு செய்தி 9 ஆம் பக்கத்தில்)*

## பொறிவெடியில்....

சேர்ந்தவரான பத்திநாதன் சுதாகரன் (வயது- 39) கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியிலிருந்து காணாமற்போயிருந்தார். மாட்டைத் தேடிச் சென்ற அவர் அதன் பின்னர் வீடு திரும்பவில்லை என்று சனியன்று அவரது மனைவி பளைப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார்.

பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். தொலைபேசியில் உரையாடியபடியே - ஏ9 முதன்மை வீதியிலிருந்து 350 மீற்றர் தொலைவில் உள்ள காட்டுப் பகுதியை நோக்கி சுதாகரன் சென்றதைத் தான் கண்டார் என்றும் அதன் பின்னர் அந்தப் பகுதியில் வெடிச்சத்தம் கேட்டது என்றும் பெண் ஒருவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இந்தத் தகவலின் அடிப்படையில் பொலிஸார், கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் உதவியுடன் வெடிச் சத்தம் கேட்ட பகுதிக்குச் சென்றனர். அங்கிருந்து ஆண் ஒருவரின் சடலத்தை மீட்டனர். அது சுதாகரனது சடலம் என்பதை அவரது மனைவி அடையாளம் காட்டினார்.

சுதாகரன் உயிரிழந்த இடம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்ட பகுதி. சடலத்தை மீட்பதற்காக அந்தப் பகுதிக்கு செல்வதற்காக பாதுகாப்பான ஒரு சிறு பாதையை அமைக்கும் தேவை ஏற்பட்டது. இதற்காகக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் உதவியைப் பொலிஸார் நாடினர். அவர்கள் பாதையை உருவாக்கியபோது அந்தக் குறுகிய பகுதிக்குள்ளே இருந்து மட்டும் 24 மிதிவெடிகளை அகற்றினர். அதன் பின்னரே பொலிஸாரால் சடலம் இருந்த இடத்தை அடைய முடிந்தது.

வெடிப்பொருள்களில் இருந்து வெடிமருந்தைப் பிரித்தெடுக்கும் நோக்கில் சுதாகரன் அங்கு சென்றிருக்கிறார் என்று தமது விசாரணையில் தெரியவந்தது எனப் பொலிஸார் கூறினர். அவ்வாறு சென்ற சமயம் பொறிவெடியில் அகப்பட்டு அவர் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சுதாகரனின் சடலத்தைத் தாம் மீட்டபோது அதற்கு அருகில் சேகரிக்கப்பட்ட நிலையில் இருந்த 12 மிதிவெடிகள் கிடந்து மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்ட கிளிநொச்சி பதில் நீதிவான், சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார். சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. (உ-வ-4,9,101,ரி3)

## இரண்டாம் நாள்....

தமது போராட்டத்தை, முகாம் எதிரில் ஆரம்பித்தனர். இரண்டாவது நாளாகவும் அவர்கள் நேற்றைய தினம் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்தனர்.

சீருடையினர், தமது வாகனங்களில் எம்மைக் கடந்து செல்லும் போது, தமது வாகனத்தை உறுமிக்கொண்டு செல்கின்றனர். இதனால் தூசிப் படலம் எழுகின்றது. சீருடையினர் வேண்டுமென்றே இதனைச் செய்கின்றனர். சீருடையினர் தமது முகாம் முன்பாக வழமையாக மின் விளக்கு ஒளிரச்செய்வது வழமை. ஆனால் இன்று (நேற்று) இரவு அந்த மின் விளக்கு ஒளிரவிடப்படவில்லை' என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் தெரிவித்தார்.

தமக்கு விடிவு கிடைக்கும் வரையில் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனவும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர். (வ-5-ரி3)

## சமஷ்டிதான்....

போர்க்குற்ற விசாரணை பன்னாட்டு விசாரணையாக இருக்க வேண்டியதில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்ததாகப் பொய்யான பரப்புரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கட்சி ஒருபோதும் அவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. நாம் ஆரம்பத்திலிருந்தே பன்னாட்டு விசாரணையைத் தான் வலியுறுத்தி வருகின்றோம். அதில் எந்த மாற்றமும் இல்லை. எமது கட்சியின் உறுப்பினர்களோ, கட்சியின் தலைமையோ இதில் எந்த மாறுபட்ட கருத்தையும் கொண்டிருக்கவில்லை. எல்லோரும் பன்னாட்டு விசாரணை தான் தேவை என்பதில் அழுத்தமாக இருக்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முழுமையான நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அந்தக் கருத்தில் கட்சியிலுள்ள எவருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது.

### அரசியல் தீர்வு

நாம் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டுள்ளோம், ஒற்றையாட்சிக்குள் கூட்டாட்சியை வலியுறுத்துகின்றோம் என்று மற்றொரு பொய்யான பரப்புரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அது தொடர்பிலும் எமது மையக் குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

எமது கட்சி அவ்வாறான நிலைப்பாட்டை ஒருபோதும் எடுக்கவில்லை. எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் எவரும் அப்படியான கருத்தைக் கொண்டிருக்கவுமில்லை. நாங்கள் கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வையே இதுநாள் வரையில் வலியுறுத்தி வருகின்றோம். அதனையே தொடர்ந்தும் வலியுறுத்துவோம். தமிழ் மக்களின் இயல்பு வாழ்கைக்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதுவரையில் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளை ஆதரித்தும் ஆமோதித்தும் மையச் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### முன்னாள் போராளிகள் சாவு

முன்னாள் போராளிகளின் திடீர் சாவுகள் தொடர்பிலும் கூட்டத்தில் பேசப்பட்டது. இந்தத் தகவல்களில் உண்மை இருக்குமானால் அது பாரதூரமான விடயம்.

இது தொடர்பில் மருத்துவச் சோதனை நடத்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறான செய்தி வெளிவந்திருப்பதனால், முன்னாள் போராளிகளின் குடும்பங்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த விடயத்தை கவனமாகவும் – நேர்த்தியாகவும் – பொறுப்புடனும் கையாள வேண்டும். குற்றச்சாட்டுக்களைச் சுமத்த வேண்டும் என்பதற்காகப் பொறுப்பில்லாமல் பேசி, ஏற்கனவே நொந்து போயுள்ள போராளிகளையும் அவர்களுடைய குடும்பங்களையும் இன்னமும் கூடுதலான மன உளைச்சலுக்கு உள்ளாக்காது, அவர்களுக்கு ஆறுதல்களைக் கொடுக்கவேண்டும் என்ற தீர்மானமும் மையச் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### குமாரபுரம் படுகொலை

திருகோணமலை குமாரபுரம் படுகொலையில் வழங்கப்பட்ட தீர்ப்பு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏமாற்றமாக அமைந்திருக்கின்றது. 20 வருடங்களின் பின்னர் நேரில் கண்ட சாட்சிகள் தங்கள் சாட்சியங்களை வழங்கியும், குற்றம் சுமத்தப்பட்ட இராணுவத்தினர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேன்முறையீடு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கான நீதி கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது என்றார். (உ-5)

## கரைபுரண்ட.....

சம்பவத்தின் பத்தாவது ஆண்டு தினம் நேற்று.

யாழ்ப்பாணம் முனியப்பர் கோயில் முன்பாகக் காங்கேசன் துறை வீதியின் ஓரத்தில் நினைவேந்தல் நிகழ்ந்தது. உயிரிழந்த மாணவிகள் நினைவாக 61 உருவப் பொம்மைகள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் உயிரிழந்த மாணவிகளின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. அவற்றின் முன்பாக மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், தாக்குதலில் உயிரிழந்த மாணவிகளின் உறவினர்கள் ஆகியோர் நின்று அஞ்சலி செலுத்தினர். நினைவேந்தல் உரைகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

''இதுபோன்ற படுகொலைகளுக்கு நீதி கிடைக்காமல் இலங்கையில் நல்லிணக்கம் சாத்தியப்படாது. நீதியின்றி சமாதானம் பற்றிப் பேசுவது வீணானது. உண்மையான சமாதானம் வேண்டுமெனில் இழந்துபோன பல்லாயிக்கணக்கானோருக்கு நீதி கிடைக்கவேண்டும்" என்று நீதிக்கும் சமாதானத்துக்குமான அமைப்பைச் சேர்ந்த அருட்திரு மங்களராஜா தெரிவித்தார்.

"உயிரிழந்த இவர்களுக்கான உண்மையான அஞ்சலி, தமிழ்த் தேசிய விடுதலையை விரைந்து முன்னெடுக்க எமது வேறுபாடுகளைக் கடந்து இங்குள்ள பொய்மான்களையும் புனைவுகளையும் அம்பலப்படுத்தி முன்னேற வேண்டும்" என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கோட்டையைப் பார்வையிட வந்திருந்த சுற்றுலாப் பயணிகளும் இந்தப் போராட்டத்தை ஆர்வத்துடன் பார்த்து ஒளிப்படங்களையும் காணொலிகளையும் எடுத்தனர்.

தமிழ் விருட்சம் அமைப்பு வவுனியாவில் நடத்திய நினைவேந்தல் வைரவப் புளியங்குளம் வைரவர் ஆலயத்தில் சமய வழிபாடுகளுடன் இடம்பெற்றது.

சம்பவம் இடம்பெற்ற முல்லைத்தீவில், பொதுநினைவேந்தல் நிகழ்வுகள் எதுவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. (உ-வ-5,101,106)

**வேலை ஆள்கள் தேவை**

கல்லுடைக்கும் ஆலை ஒன்றிற்கு வேலை ஆள்கள் தேவை. உழவு இயந்திரத்திற்கும் சாரதி தேவை.

தொடர்பு:-0777861390

**வேலையாள் தேவை**

வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசத்தில் இயங்கும் அச்சகத்திற்கு புத்தகம் கட்டுநர் தேவை.
தெரிந்த / பழக விரும்புவர்கள் (ஆண்/பெண்)

தொடர்பு: 077 3104899

**வேலைக்கு ஆள்கள் தேவை**

வடமராட்சியில் இயங்கும் " தமிழ்ப் பாவை " இணைய வானொலிக்கு பெண் அறிவிப்பாளர்கள் மற்றும் எடிட்டர்கள் தேவை. (N 112) (14,17,18)

www.tamilpavai.com
021 226 1823 / 077 498 8118

**வட இலங்கை சுதேச வைத்தியசபை**
**பொதுக்கூட்ட அறிவித்தலும்**
**புதிய நிர்வாக சபை தெரிவும்**
இடம் : லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.
காலம் : 05.09.2016 மு.ப 10 மணி
வடஇலங்கை சுதேச வைத்தியசபை.

**31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரியின் ஆசிரியர்
திருமதி பிறேமலதா மகாலிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி கமலாதேவி சுகுமார்**
அவர்கள் 16.07.2016 சனிக்கிழமை சிவபதமடைந்தார். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**ஆசிரியர் நலன்புரிசங்கம்**
**யா/வேலணை மத்தியகல்லூரி, வேலணை.**
(Ge. 32784) (11,17,18)

**விசேட வைத்திய நிபுணர்களின் சேவை**

- காது, மூக்கு, தொண்டை (ENT) மற்றும் தலை, கழுத்து பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சிறப்பு தேர்ச்சி பெற்ற விசேட காது, மூக்கு, தொண்டை (ENT) சத்திரசிகிச்சை நிபுணர்.
- மூட்டுவலி மூட்டுவாதம் (ஆர்த்திரைட்டிஸ்) மற்றும் மூட்டுக்களில் ஏற்படும் சகலவிதமான பிரச்சினைகளுக்கு சிறப்பு தேர்ச்சி பெற்ற விசேட மூட்டுவாத வைத்திய நிபுணர்.
- முடியுதிர்வு, முகத்தில் ஏற்படும் பருக்களுக்கும் மற்றும் தோல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் ஆலோசனை பெற சிறப்பு தேர்ச்சி பெற்ற தோல் வைத்திய நிபுணர்கள்.
- சலரோகம் (நீரிழிவு) மற்றும் கோமோர்ன்ஸ்களினால் (தைரொய்ட்) ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஆலோசனை பெற சிறப்பு தேர்ச்சி பெற விசேட நீரிழிவு கோமோர்ன்ஸ் வைத்திய நிபுணர்

**றோயல் மெடிகல் சென்ரர்.** (யாழ். போதனா வைத்தியசாலை பழைய OPD எதிரில்)
தொலைபேசியில் பதிவுகளை மேற்கொள்ள அழையுங்கள். 021 221 3668, 021 320 3200, 077 0457978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையிடி....

புள்ளிவிவரப் பிரிவினால் தேசிய சனத்தொகைக் கணக்கெடுப்பு இணையத்தளம் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. அதில் குறிப்பிட்ட சமூகங்களைச் சேர்ந்த மக்களை இனங்காணும் பொருட்டு அவர்களது பிறந்த இடமும் கேட்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத நாடுகளின் பெயர்கள் இதற்காக வரிசைப்படுத்தப்பட்டிருந்தன. ஈழத் தமிழர்களைத் தனிப் பிரிவாக இனங்காண்பதன் மூலம் அவர்களுக்கான ஆஸ்திரேலிய அரசின் உதவிகளை அதிகரிக்க முடியும் என்ற வகையில் தமிழீழத்தையும் பட்டியலில் சேர்த்துக்கொள்ளும்படி ஈழத் தமிழ் ஆர்வலர்கள் விடுத்த கோரிக்கையை ஆஸ்திரேலிய புள்ளிவிவரப் பிரிவினர் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

ஆஸ்திரேலியாவில் உள்ள ஈழத் தமிழர்கள் தமிழீழம் என்று தமது பிறந்த இடத்தை குறிப்பிடத் தொடங்கினர். இது தமிழீழத்திற்குக் கிடைத்த பெரும் அங்கீகாரம் என்ற வகையில் முகப் புத்தங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் பலர் நிலைப் பதிவுகளை இடத் தொடங்கினர்.

இதையடுத்து, கடந்த 6ஆம் ,7ஆம் திகதிகளில், கன்பராவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு பெருமளவு தொலைபேசி அழைப்புகளும், மின்னஞ்சல்களும் வரத் தொடங்கின. வாரஇறுதி விடுமுறைக்குப் பின்னர், முதலாவது வேலை நாளான கடந்த 9ஆம் திகதி, கன்பராவில் உள்ள இலங்கைத் தூதரகம் துரித நடவடிக்கையில் இறங்கியது.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஆஸ்திரேலியாவில் தீவிரவாத அமைப்பாகப் பட்டியலிடப்பட்டுள்ள நிலையில், அதிகாரபூர்வ இணையத்தளத்தில் தமிழீழம் என்ற தெரிவு எவ்வாறு இடம்பெற்றது என்று ஆஸ்திரேலிய புள்ளிவிவரவியல் பிரிவிடம் இலங்கைத் தூதுவர் கேள்வி எழுப்பினார். இந்த நிலையில் ஆஸ்திரேலிய அயலுறவு அமைச்சு தமிழீழத்தை நீக்குவதாக கடந்த 9ஆம் திகதி இலங்கைத் தூதுவருக்கு உறுதி அளித்தது. இதற்கமைய அன்று பி.ப. 2.30 மணியளவில், தமிழீழம் நீக்கப்பட்டது. (உ-வ-4)

## 16 வயது....

மணியளவில் உணவு அருந்துவதற்காக வீட்டுக்காரர் மாணவியைக் கூப்பிடுவதற்குச் சென்றபோது அவர் அங்கு இல்லை. எங்கு தேடியும் காணாமற்போகவே நள்ளிரவு 12 மணியளவில் ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்" எனப் பொலிஸார் தெரிவித்தனர். மாணவியின் வீட்டிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்திலுள்ள பாழடைந்த கிணற்றில் சடலம் ஒன்று மிதப்பதை நேற்று மாலை கண்டவர்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். அந்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் அது காணாமற்போன மாணவியின் சடலம் என்பதைக் கண்டறிந்து மீட்டனர். மாணவியின் திடீர் இறப்புக்கான காரணம் குறித்து பொலிஸார் பல வழிகளிலும் ஆராய்ந்து வருகின்றனர். (உ-வ-5,4,250)

## ஒரு வருடத்துள்.....

நேற்றுத் தெரிவித்தார். இதன் முதல் கட்டமாக அடுத்த ஓரிரு வாரங்களில் மேலும் 700 ஏக்கர் நிலப் பரப்பு விடுவிக்கப்படும் என்றும் அவர் எதிர்பார்ப்பு வெளியிட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் முப்படைத் தளபதிகள் பலாலிக்கு நேற்று வருகை தந்தனர். எதிர்வரும் வாரங்களில் விடுவிப்பதற்கு அடையாளப்படுத்தப்பட்ட 700 ஏக்கர் வரையான நிலப்பரப்பை அவர்களுக்கு அடையாளம் காட்டினார் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி. அதன் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில், நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களில் சொந்தக் காணிகள் இல்லாதவர்களை ஏற்கனவே விடுவிக்கப்பட்ட பகுதியில் உள்ள அரச காணிகளில் துரிதமாக குடியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு அப்போது பாதுகாப்புச் செயலர் அரச அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார். "தேசிய பாதுகாப்புக்கு அவசியமான காணிகள் தவிர்ந்த ஏனைய காணிகள் அனைத்தும் அடுத்த ஆண்டு நடுப் பகுதிக்கு முன்னர் மக்களிடம் கையளிக்கப்படும்" என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் குறிப்பிட்டார். எனினும் எவ்வளவு நிலப் பகுதி விடுவிக்கப்படும் என்ற விவரத்தை அவர் தெரிவிக்கவில்லை. (உ-வ-5)

## மரண அறிவித்தல்

### பரமு நடேசு

(இளைப்பாறிய உள்ளூராட்சி சபை பணியாளர்)



பிறப்பு 12.12.1925 இறப்பு 11.08.2016

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமு நடேசு கடந்த (11.08.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு மற்றும் சீதேவி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும் லோகநாதன் (கனடா), இரவீந்திரன் (தபாலகம்-அச்சுவேலி), கௌசலா (ஜேர்மனி), லோகநாயகி (கனடா), சிவலோகநாதன்(கனடா), பரலோகநாதன்(கனடா), கெங்காதரன் (கனடா), பிரபாகரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாறஞ்சனி, சசிகலா, செல்வநேசன், அகிலானந்தன், சயிலா, ஜெயசுதா, ருஷ்யந்தி, சுபர்னா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெசிக்கா, ஜெனார்த்தனன், மிதுஷனா, யதுர்ஷனா, துஜிந்தன், ஜெகசுதன்,பிரதீபராஜ், ராகவி, ரஜீவ், சயானா, சாருஜன், சுருத்திகா, சுபிக்கா, கிஷோர், பபிவின், மபிஷா, கினிஷா, மபீனா, அகிஷன், ஆறியன் ஆகியோரின் பேரனும் ஆறுமுகநாதனின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, கணபதிப்பிள்ளை, தேவராசா, செல்லப்பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
ந.இரவீந்திரன் (மகன்)
(தபாலகம்-அச்சுவேலி)

## மரண அறிவித்தல்

### பொன்னையா சுப்பிரமணியம்

(முன்னாள் ஊழியர்-தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூ..சங்கம்-கொடிகாமம்)



மந்துவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுப்பிரமணியம் நேற்று (14.08.2016) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, K.P.கனகலிங்கம் (முன்னாள் அரசாங்க நில அளவையாளர்) மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகிர்தன் (மந்துவில் சந்நியாசி வைரவர் ஆலயப் பூசகர்), சுகேஷன்(விமலன்-நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபஜீவி (கல்வயல்), ரேணுகா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜீபன், கஜானன் (கைதடி தொழிற் பயிற்சி நிலையமாணவன்), மாதங்கி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி-தரம்7), மாதனி (கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம் தரம் 4), தரணியன்(நோர்வே), அஞ்சலி(நோர்வே), சச்சின் (நோர்வே) ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2016) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்துவில் இலுவன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்

077 6947869, 004792642757-(நோர்வே)

## மரண அறிவித்தல்

### சண்முகராஜக்குருக்கள் துவாரகா

பிறப்பு 2000 . 12 . 22



இறப்பு 2016 . 08 . 13

காரைநகர் களபூமி திக்கரையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராஜக்குருக்கள் துவாரகா (யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், G.C.E O/L மாணவி) கடந்த (13.08.2016) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற குகனேசசர்மா மற்றும் பூமகாலக்ஷ்மி தம்பதியரின் பாசமிகு பேர்த்தியும் சிவஸ்ரீ கு. சண்முகராஜக்குருக்கள் - நவரஞ்சினிஅம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும் பாலசங்கரசர்மா, யதுகுலசர்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவாஜிசர்மா - வசந்தராணிஅம்மா, ஜெயபாலசர்மா - செண்பகவல்லி, சந்திரசேகரக்குருக்கள் - அகிலாண்டேஸ்வரி, சற்குணராசசர்மா - கிருமாகரிஅம்மா, சரவணபவானந்தசர்மா - சிவானந்திஅம்மா தம்பதியரின் பாசமிகு பெறாமகளும் சுப்பிரமணியக்குருக்கள் - சறோஜினிஅம்மா, மனோரஞ்சன் - சசிகலாதேவி, பாலகிருஷ்ணக்குருக்கள் - சகுந்தலாதேவி உபேந்திரக்குருக்கள் - சந்திரிக்காஅம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2016) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனனவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திக்கரை களபூமி,
காரைநகர்.

தகவல்:
சிவஸ்ரீ கு.சண்முகராஜக்குருக்கள்
குடும்பத்தினர்
077 1696659

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிலாந்தை சுருட்டியது பாக். தொடரையும் சமன்செய்தது

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் 10 இலக்குகளால் வெற்றிபெற்று, நான்கு ஆட்டங்கள் கொண்ட தொடரை 2:2 என்று சமன் செய்தது பாகிஸ்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத்தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மொயின் அலி 108 ஓட்டங்களையும், பரிஸ்ரௌவ் 55 ஓட்டங்களையும், வோக்ஸ் 45 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பாகிஸ்தானின் சார்பாக சொகைல் கான் 5 இலக்குகளையும், ரியாஸ் 3 இலக்குகளையும், ஆமிர் இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸிற்காக 542 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக யுனிஸ்கான் 218 ஓட்டங்களையும், சபிக் 109 ஓட்டங்களையும், அசார் அலி 49 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் இங்கிலாந்தின் சார்பில் ஸ்ரீவ் பின், வோக்ஸ் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், மொயின் அலி இரு இலக்குகளையும், அண்டர்சன், புரோட் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 214 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து முன்வரிசை வீரர்களின் தடுமாற்றத்தால் 253 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பரிஸ்ரௌவ் 81 ஓட்டங்களையும், ரூட் 39 ஓட்டங்களையும், மொயின் அலி 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பாகிஸ்தானின் சார்பாக யாசீர் 5 இலக்குகளையும், ரியாஸ் 2 இலக்குகளையும், சொகைல் கான், இப்திகார் அகமட் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது கைகொடுக்க பாகிஸ்தானுக்கு இலக்காக வெறும் 40 ஓட்டங்களே நிர்ணயிக்கப்பட்டது. இலக்குச் சரிவில்லாமல் வெற்றிபெற்றது பாகிஸ்தான். ஆட்டநாயகனாக யுனிஸ் கான் தெரிவானார். (ம)





# இந்தியா அசத்தல் வெற்றி தொடரையும் வசமாக்கியது

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் 237 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இந்திய அணி, தொடரைக் கைப்பற்றுவதையும் உறுதிப்படுத்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய இந்தியா சகல இலக்குகளையும் இழந்து 353 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அஸ்வின் 118 ஓட்டங்களையும், சகா 104 ஓட்டங்களையும், ராகுல் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக ஜோசெப், கும்மின்ஸ் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், கபிரியேல், சேஸ் இருவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தீவுகள் 225 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் இந்தியாவின் சார்பில் புவனேஸ்வர்குமார் 5 இலக்குகளையும், அஸ்வின் 2 இலக்குகளையும், ஜடேயா, இசாந்த் சர்மா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

128 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்தியா, நேரம் போதாமையைக் கருத்தில் கொண்டு ஆரம்பம் முதல் அடித்தாடியது. நான்காம் நாள் முடிவில் அந்த அணி 157-3 என்றிருந்தது. ரகானே 51 ஓட்டங்களுடனும், ரோகித் சர்மா 41 ஓட்டங்களுடனும் ஆட்டத்தின் இறுதி நாளுக்காகக் களமிறங்கினர். வந்த வேகத்தில் ஆட்டமிழந்தார் ரோகித். ரகானே தொடர்ந்தும் அடித்தாடினார். இந்திய அணி 217-7 என்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பில் கும்மின்ஸ் 6 இலக்குகளையும், சேஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

346 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸிற்காகக் களமிறங்கிய தீவுகளின் ஆரம்ப இணை இந்தியாவின் வேகத்தில் ஒன்றுமில்லாமல் போனது. பிரீத்வைட் புவனேஸ்குமாராலும், ஜோன்சன் சமியாலும் வீழ்த்தப்பட தீவுகள் 4-2 என்றிருந்தது. பிராவோ ஒரு முனையில் நிலைத்து நின்றார். அவர் ஒருவரைத் தவிர வேறெவரும் போராட்டம் காட்டவில்லை. சாமுவேல்ஸ், சேஸ் இருவரும் முறையே 12, 10 ஓட்டங்களுடன் இசாந் சர்மாவால் போல்ட் செய்யப்பட்டனர். பிராவோவுக்கு அடுத்த படியாக அதிக ஓட்டங்களைப் பெற்றவர்கள் இவர்கள்தான். பிராவோவும் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 108 ஓட்டங்களில் சுருண்டது மே.தீவுகள். பந்துவீச்சில் இந்தியாவின் சார்பில் மொகமட் சமி 3 இலக்குகளையும், இசாந் சர்மா, ஜடேயா இருவரும் தலா 2 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார், அஸ்வின் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

## அஸ்வின் ஒரு முழுமையான துடுப்பாட்ட வீரர் என்றார் கோக்லி

ரவிச்சந்திரன் அஸ்வின் ஒரு முழுமையான துடுப்பாட்ட வீரராக மாறியுள்ளார் என்று புகழாரம் சூட்டியுள்ளார் இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லி.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் சென்றுள்ள இந்திய அணி முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களில் இரண்டில் வெற்றிபெற்று 2:0 என்று முன்னிலையில் உள்ளார். இந்த மூன்று டெஸ்ட் ஆட்டங்களில் இரண்டில் அஸ்வின் சதம் விளாசினார். இந்த நிலையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"அஸ்வின் ஒரு பந்துவீச்சாளர் மட்டுமல்ல. ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரருமாவார். அவர் இந்திய அணியின் நம்பிக்கையான துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக மாறியுள்ளார். அவரது ஆட்டம் கச்சிதமாக உள்ளது. அவர் சதங்களைக் குவிக்கிறார். சிறப்பானதும், துல்லியதுமான பவுண்டரிகளைப் பதிவுசெய்கிறார். அவர் ஒரு முழுமையான துடுப்பாட்ட வீரராக மாறியுள்ளார்" எனக் கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)





யாழ். சதுரங்க முற்றம் நடத்தும் மிதவேக சதுரங்கத் தொடர், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு முன்பாக உள்ள லோயலாஸ் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. (ம-23)

### வொலிகிங்ஸின் தொடரில்

## மோகனதாஸ், ஆவரங்கால் மத்தி அணிகளுக்கு அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 15

வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் மோகனதாஸ், ஆவரங்கால் மத்திய அணிகள் வெற்றி பெற்றன.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 25:23, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய மோகனதாஸ் அணி 2:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து மல்லாகம் நியூவொரியஸ் அணி மோதியது. முதல் செற்றை 25:21 என்ற புள்ளி களின் அடிப்படையில் கைப்பற்றியது ஆவரங்கால் மத்தி. இரண்டாவது செற் 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது நியூவொரியஸ். மூன்றாவது செற்றை 25:20 என்ற புள்ளி களின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் மத்தி முடிவில் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம் ஓக. 15

**வொலிகிங்ஸின் கரப்பந்தாட்டம்**

கச்சாய் வாகையடி வொலி கிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**பாரதி வி.க. தொடர்**

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம். யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கம்பர்மலை யங் கம்பன்ஸ் அணியை எதிர்த்து வல்வை ஆதிசக்தி அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணியும் மோதவுள்ளன.

(ம-422-108)



## நவசக்தியின் கால்பந்தாட்டம் டயமன்ஸ் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 15

நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத் தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் டயமன்ஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நவசக்தியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் குறித்த அரையிறுதி நடைபெற்றது. டயமன்ஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனீஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 2ஆவது, 9ஆவது நிமிடங்களில் டயமன்ஸின் மதியழகன், அனுரா ஆகியோர் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்தனர். முதல் பாதியின் முடிவில் டயமன்ஸ் அணி 2:0 என்று முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் சென். அன்ரனிஸ் ஆதிக்கம் செலுத்தியது. 5 ஆவது, 9 ஆவது நிமிடங்களில் சென். அன்ரனிஸ் அணியின் வீரரான பேரின்பநாதன் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்தார். தற்போது நிலைமை 2:2. இந்த சம நிலைத் தன்மை ஒருசில நிமிடங்களே நிலைத்தது. இரண்டாம் பாதியின் 11 ஆவது நிமிடத்தில் சசி, 18 ஆவது நிமிடத்தில் ராஜா அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்து டயமன்ஸின் கோல் கணக்கை 4 ஆக உயர்த்தினர்.

சென். அன்ரனிஸ் பிறிதொரு கோலைப் பதிவுசெய்த போதிலும் முடிவில் டயமன்ஸ் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## பிரதம செயலாளர் செயலகம் பூப்பந்தாட்டச் சம்பியனானது

கரணவாய், ஓக. 15

முதலமைச்சர் கிண்ணத்துக்கான பூப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் முதலமைச்சர் செயலக அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது பிரதம செயலாளர் செயலக அணி.

அரியாலை உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் முதலமைச்சர் செயலக அணியை எதிர்த்து பிரதம செயலக அணி மோதியது. மூன்று தனிநபர் ஆட்டத்தையும் இரண்டு இரட்டையர் ஆட்டத்தையும் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. இதில் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது பிரதம செயலாளர் செயலக அணி. சிறந்த வீராங்கனையாக பிரதம செயலாளர் செயலக அணியைச் சேர்ந்த எஸ். சுகன்யா தெரிவானார். (ம-108)



காலிறுதியில் றெமின்சன்

## றெமின்சனின் ஆட்டம் காலிறுதியுடன் நிறைவு

யாழ்ப்பாணம், ஓக. 15

வடமத்திய மாகாண பூப்பந்தாட்டச் சங்கம் தேசியமட்டத்தில் நடத்திவரும் தொடரில் யாழ். வீரரான றெமின்சனின் ஆட்டம் காலிறுதியுடன் முடிவு கண்டது. தேசியத் தரப்படுத்தலில் 14 ஆம் இடத்திலுள்ள வீரரான ஜெட்டவரவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார் யாழ். மாவட்ட வீரர் றெமின்சன். அனுராதபுரம் உள்ளரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் தேசியத் தரப்படுத்தலில் மூன்றாமிடத்தில் உள்ள வீரரான சானக்க திச நாயக்கவுடன் அவர் மோதினார். ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் 21:15, 21:13 என்ற புள்ளிகளின் அடிப் படையில் கைப்பற்றிய சானக்க 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற் றார். றெமின்சனின் ஆட்டம் காலிறுதி யுடன் நிறைவுக்கு வந்தது. (ம-23)



## பாரதியின் கால்பந்தாட்டம்; சிறி அம்பாள் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 15

பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் நாச்சிமார் கோயிலடி சிறி அம்பாள் அணி வெற்றிபெற்றது.

பாரதியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், நாச்சிமார் கோயிலடி சிறி அம்பாள் அணியை எதிர்த்து மாதகல் சென். தோமஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் அம்பாளின் வீரர் தினேஸ் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார்.

வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் சென். தோமஸால் பதிலடி கொடுக்க இயலவில்லை. 37 ஆவது நிமிடத்தில் தினேஸ் தனது அணியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422)

## டயமன்ஸ், விண்மீன் அணிகள் அரையிறுதிக்குள் நுழைந்தன

கரணவாய், ஓக. 15

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் பலாலி விண் மீன்விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதிக்குத்தகுதிபெற்றன.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும் பலாலி விண் மீன் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் டயமன்ஸ் அரையிறுதிக் குத் தகுதி பெறுவது உறுதியாக இருந்தது. ஆனால் வெற்றி பெற்றாலோ அல்லது சம நிலைப்படுத்தினாலோ தான் விண்மீன் அரையிறுதிக்குத் தகுதி பெறலாம் என்ற நிலை இருந்தது. நிர்ணயிக்கப் பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் இரு அணிகளும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. ஆட்டநாயகனாக பலாலி விண்மீனின் யூட் தெரிவானார். (ம-108)

## யாழ். பல்கலை ஹொக்கி அணி அரையிறுதியுடன் வெளியேறியது

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ். பல்கலைக் கழக ஆண்கள் ஹொக்கி அணியின் இறுதியாட்ட கனவை தகர்த்தது கொழும்பு பல்கலைக்கழக அணி.

அனைத்து பல்கலைக்கழங்களுக்கு இடையிலான ஹொக்கித் தொடரில் ஆண் கள் பிரிவு அரையிறுதியாட்டம் ஒன்று பேராதனை பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. யாழ். பல்கலையை எதிர்த்து கொழும்பு பல்கலைக் கழக அணி மோதிய இந்த ஆட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக் குத் தகுதி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறியது வெள்ளிப்பதக்கம்; ஒலிம்பிக்கில் ஓர் உருக்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 3000 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கத்தைப் பெறவேண்டிய எத்தியோப்பிய வீராங்கனை துரதிர்ஷ்டவசமாக அதைத் தவறவிட்டார். நீர், மேடு, சட்டவேலி போன்ற தடைகளைத் தாண்டி இலக்கை அடைவதே இந்தப் போட்டி. போட்டி நிறைவடைய 700 மீற்றர் மீதமிருந்தபோது, எத்தியோப்பிய வீராங்கனை டிரோ இரண்டாவதாக வந்துகொண்டிருந்தார். ஒரு வீராங்கனை சட்டத்தைத் தாண்டும்போது கீழே விழுந்தார். அவ்வாறு வீழ்ந்தவர் டிரோவையும் கீழே தள்ளிவிட்டார். போதாதென்று அவரின் கைகள் டிரோவின் பாதணிகளுள் கொளுவுப்பட்டு பாதணிகள் கழன்றுவிடக் காரணமாக அமைந்தன. இதனால் ஒரு காலில் பாதணியுடனும் மற்றைய காலில் பாதணி இல்லாமலும் டிரோ தொடர்ந்து பங்கெடுத்தார். ஆனால் இரண்டாவது இடத்தைப் பிடிக்க வேண்டிய அவரால் ஏழாவது இடத்தையே பெற முடிந்தது.

போட்டி முடிந்ததும் அவர் மைதானத்தில் சுருண்டு விழுந்து கதறி அழுதார். முதலிடத்தைப் பெற்ற கென்ய வீராங்கனை ஜெப்கிமொய் எந்தவித ஆரவாரத்தையும் வெளிப்படுத்தாமல் டிரோவைச் சமாதானம் செய்துகொண்டிருந்தார். இது ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று அரங்கேறிய ஓர் உருக்கமான சம்பவமாக அமைந்தது.

(ம)






# சந்திமல் நிதான சதம்; ஆஸியும் தக்க பதிலடி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாளில் இலங்கையின் முதல் இன்னிங்ஸ் 355 ஓட்டங்களுடன் முடிவு கண்டதுடன், பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி வரும் ஆஸ்திரேலியா நாள் முடிவில் 141-1 என்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து. முதல்நாள் முடிவில் 214-5 என்றிருந்தது. சில்வா 116 ஓட்டங்களுடனும், சந்திமல் 64 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். 129 ஓட்டங்களுடன் சில்வாவை வெளியேற்றினார் லையன். பெரேராவை வெளியேற்றினார் ஹேஸலண்ட். கேரத் குறிப்பிட்டளவு நேரம் நிலைத்து நிற்கச் சந்திமலின் சதம் அரங்கேறியது. 132 ஓட்டங்களுடன் (356 பந்துகளில்) ஸ்ராக்கின் பந்துவீச்சில் சந்திமல் ஆட்டமிழக்க, இலங்கை சகல இலக்குகளையு இழந்து 355 ஓட்டங்களை எடுத்தது. பந்துவீச்சில ஆஸ்திரேலியாவின் சார்பாக ஸ்ராக் 5 இலக்குகளையும், லையன் 3 இலக்குகளையும், ஹேஸலண்ட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு ஆரம்ப வீரர்களாக வோர்ணர் மற்றும் சோன் மார்ஸ். 11 ஓட்டங்களுடன் வோர்ணரை வெளியேற்றினார் சில்வா. சிமித், மார்ஸ் இணை நீண்டு நிலைபெற்றது. இருவரும் ஆளுக்கொரு அரைச் சதம் கடந்தனர். மேலதிக இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தாண்டிச் சென்றது ஆஸி. இரண்டாம்நாள் முடிவு கண்டபோது ஆஸ்திரேலியா 141-1 என்றுள்ளது. மார்ஸ் 64 ஓட்டங்களுடனும், சிமித் 61 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.


(ம)

# 400 மீற்றரில் அமெரிக்கா தங்கம் வெல்லவாய்ப்பு

ரியோ ஒலிம்பிக் தொடரில் பெண்கள் பிரிவு 400 மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்கா தங்கப் பதக்கம் வெல்ல அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகிறது.

நேற்று நடைபெற்ற தெரிவுப் போட்டியில் அமெரிக்க வீராங்கனைகளில் மூவர் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினர். இவர்களில் பில்ஸ் பிரான்சிஸ் ஆகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். பந்தயத் தூரத்தைக் கடக்க அவருக்கு 50 செக்கன்களும் 58 மில்லி செக்கன்களுமே தேவைப்பட்டன. அடுத்த இடத்தில் உள்ள பக்ரைனின் வீராங்கனையைவிட 20 செக்கன்களை அவர் குறைவாக எடுத்துக் கொண்டார். குறுந்தூர ஓட்டப்போட்டிகளில் இந்த இடைவெளி மிகப் பெரும் விடயமாகக் கருதப்படும். எனவே அவர் தனது ஆதிக்கத்தைத் தொடரும் பட்சத்தில் தங்கம் வெல்ல அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகவே கருதப்படுகிறது.

(ம)




## வில்லியர்ஸ் இல்லாதமை பெரியதொரு ஏமாற்றமே

*பிளாசிஸ் தெரிவிப்பு*

நியூசிலாந்துக்கு எதிராக ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடருக்கான தென்னாபிரிக்க அணியில் வில்லியர்ஸ் இல்லாதமை மிகுந்த ஏமாற்றம் தருவதாக பிளாசிஸ் தெரிவித்தார்.

நியூசிலாந்து – தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் இன்னும் சில நாள்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில், தென்னாபிரிக்க அணியின் தலைவரான வில்லியர்ஸ், காயம் காரணமாக தொடரிலிருந்து விலகினார். இதனையடுத்து குறித்த தொடருக்கான தென்னாபிரிக்க அணியின் தலைவராக பிளாசிஸ் நியமிக்கப்பட்டார். இந்த நிலையிலேயே பிளாசிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

"வில்லியர்ஸ் இல்லாதமை மிகுந்த ஏமாற்றம் தருகிறது. கடந்த சில தொடர்கள் தென்னாபிரிக்காவுக்குச் சிறப்பாக அமையவில்லை. எனவே இந்தத் தொடரில் வெற்றிபெற்று மீண்டும் எமது இருப்பை பலப்படுத்ததிட்டமிட்டிருந்தோம். இந்தநிலையில், வில்லியர்ஸின் விலகல் துடுப்பாட்ட வரிசையில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே துடுப்பாட்ட வீரர்கள் ஒவ்வொருவரும் தமது தலையில் இன்னும் அதிக அழுத்தங்கள் இருப்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்" என்று பிளாசிஸ் மேலும் தெரிவித்தார்.

(ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் தொழில்தேடுவோருக்கானது
ஷாம்சனின் நேரடி உரையாடற்பயிற்சி மூலமான ஆங்கில பாடநெறி
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 20.08.2016
மாலை 03.00 - 05.00
3 மாதங்களில் நீங்கள் சுயமாக ஆங்கிலம் பேசுவதற்கான 100 வீத பிரக்டிகல் பேச்சுப்பயிற்சி
முன்பதிவின் அடிப்படையில் இன்னும் ஒருசில இடங்களே உள்ளன!
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

Thanujan Sand and Material Suppliers
* திறமை வாய்ந்த அனுபவம் மிக்க JCB சாரதிகள்
* வாகன சுத்திகரிப்பாளர்
* வாகன திருத்துதல் மேற்பார்வையாளர்
* வாகன திருத்துநர் (அனைத்து வகையான வாகனங்களும்)
* கோழிப்பண்ணை - மேற்பார்வையாளர், ஊழியர்
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை (இருபாலாரும்)
* கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
சுயவிபரக்கோவை அனுப்ப வேண்டிய முகவரி- 103,பொன்னம்பலம் வீதி, அரியாலை.
முடிவு திகதி - 19.08.2016
தொடர்புகளுக்கு:- 077 788 5491
077 369 7393

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org